காலாண்டு இதழ்

செப்டெம்பர் 2023

படை 01 அணி 02

# சீறம

மாற்றத்தை நோக்கிய மலையகத்தின் குறியீடு



செப்டெம்பர் 2023

# சீமை

மாற்றத்தை நோக்கிய மலையகத்தின் குறியீடு

SEEMAI - සීමෙ

படை 01 அணி 02

தொடர்புகளுக்கு

076 6626754 /077 2532296
077 2822449 / 077 1193900

மின்னஞ்சல்

seemaimagazine@gmail.com

**ஆசிரியர்**
சதீஸ் செல்வராஜ்

**ஆலோசகர் குழு**
கனேஷன் திலீப்குமார்
கிட்ணன் செல்வராஜ்
ரிச்சர்ட் ரொஹான்

மலையகத்தின் சிந்தனை ரீதியான புத்தெழுச்சிக்கு வலுசேர்க்கும் முயற்சியில் இணைவோம். நமது சிந்தனைகளும் உலகை வளப்படுத்தட்டும். மக்கள் படைப்பாளர்களே இந்தக் களம் உங்களுடையது.



# காணி நிலம் வேண்டும்

தோட்டத் தொழிலாளர் பெருமக்களே! மலையகத்தின் வாரிசுகளே!

இலங்கைவாழ் மக்களுடன் நம் சமூகத்தை ஒப்பிட்டுப் பார்க்கையில் எல்லா விதத்திலும் பிற்படுத்தப்பட்ட, புறக்கணிக்கப்பட்ட சமூகமாகவே மலையக சமூகம் இருக்கிறது. எம் சமூகம் உரிமைகள் மறுக்கப்பட்டும், வஞ்சிக்கப்பட்டும் வருகிறது. தவிர, நவீனத்தில் இருந்தும் ஓரங்கட்டப்படுகிறது. ஆக, இலங்கைப் பிரஜை என்ற சாதாரண அந்தஸ்த்தைப் பெற்றுக் கொள்வதற்கு அல்லது அம்மட்டத்திற்கு சரிசமமாக வருவதற்கு கூட பெரும் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டியிருக்கிறது.

மலையக மக்கள் இலங்கை வந்தது முதல் இற்றைவரை இந்த 200 வருட வரலாற்றில் பல தோல்விகளுக்கு மத்தியில் தம் போராட்டங்களின் மூலமாக பெரும் வெற்றிகளையும் பதிந்திருக்கிறார்கள். ஆயிரம் ரூபா போராட்டம் கூட ஓரளவு வெற்றி பெற்ற போராட்டம்தான். ஆனாலும், இன்றைய வாழ்க்கைச் செலவுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் ஆயிரம் ரூபா என்பது எம்மாத்திரம் என்ற கேள்வி இருக்கிறது. வாக்குரிமை, பிரஜாவுரிமை கூட மலையக மக்களின் அழுத்தத்தினால் ஒரு கட்டத்தில் வென்றெடுக்கப்பட்டது. மக்கள் இல்லையேல் போராட்டமும் இல்லை. வெற்றியும் இல்லை.

அதுப்போல, தொழிற்சங்கம் மற்றும் தொழிலாளர்கள் உரிமைகள் சார்ந்த பல விடயங்களும் வென்றெடுக்கப்பட்டுள்ளன. தோட்டங்களுக்குள் அடைப்பட்டிருந்த சனம் அந்தச் சிறைக்கூடத்தை தகர்த்தெறிந்திருக்கிறது. கூலியடிமைகளாக, மௌனிகளாக இருந்த எம் சமூகத்தின் இன்றைய தலைமுறை நிர்வாகத்தின் அடாவடித்தனத்தை எதிர்த்து கேள்வி கேட்கும் இடத்திற்கு வந்திருக்கிறது. பெருந்தோட்ட மக்களுக்கு எதிராக இழைக்கப்படுகின்ற அநீதிக்கு எதிராக சமூக வலைத்தளங்கள் வாயிலாகவாவது எதிர்ப்பினை பதிவு செய்யும் போராட்ட குணம் கொண்ட சமூகமாக மலையக சமூகம் எழுச்சிப் பெற்றிருக்கிறது. ஆனால், மலையகச் சமூகத்தை வழிநடத்தக்கூடிய அல்லது தலைமைத்துவம் வழங்கக்கூடிய உண்மையான மக்கள் அமைப்பொன்று மலையகத்தின் அதிகாரத்தில் இல்லாதிருப்பது எம் சமூகத்தின் உண்மையான வெற்றிக்கு பெரும் முட்டுக்கட்டையாக இருக்கிறது. அதனால்த்தான் காலங்காலமாக பல்வேறு உரிமைப் போராட்டங்கள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றபோதிலும் அதற்கான நிரந்த தீர்வினை பெற்றுக்கொள்ள இயலவில்லை. காணியுரிமைப் போராட்டமும் கூட அதுபோன்றதுதான்!

இலங்கை மண்ணுக்கு தம் வியர்வையையும் உதிரத்தையும் உயிரையும் உழைப்பையும் சமர்ப்பித்து வரும் மலையக சமூகத்திற்கு 200 வருடகாலமாகவே காணியுரிமை மறுக்கப்பட்டிருப்பது வேதனை மிகுந்தது. அதேநேரம், பெருந்தோட்டங்களும், மலையக மக்களின் குடியிருப்புகளும் பறிக்கப்படுவதும், தாரைவார்க்கப்படுவதும் ஆத்திரத்தை ஏற்படுத்துவதாக அமைகிறது. 1972 ஆம் ஆண்டு ஸ்ரீமாவோவின் ஆட்சியின் போது நுவரெலியா - மஸ்கெலியா தொகுதியில் 7000 ஏக்கர் காணி பகிர்ந்தளிக்கப்பட்டபோது, அங்கு வாழ்ந்த மலையக மக்கள் அதிலிருந்து புறக்கணிக்கப்பட்டனர். அப்போதைய காணி மீட்பு போராட்டத்தின்போது சிவனு லட்சுமணன் என்ற போராளி சுட்டுக்கொல்லப்பட்டார். தற்போது சமூகவலைதளங்கள் காரணமாக இறம்பொடை ஆர்.பி. தோட்ட விவகாரம், மாத்தளை ரத்வத்தை விவகாரம் வெளியில் வந்தன. அந்த அநீதிக்கு எதிராக மக்கள் மத்தியில் எதிர்ப்பும் எழுந்தன. அதன் காரணமாகவே அரசியல் ரீதியான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டன. ஆனால், நாடு முழுவதிலும் மலையக மக்கள் பல்வேறு விதமாக காணிப் பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். இதற்கு முற்றுமுழுதான தீர்வு அவசியமாகவிருக்கிறது. “வீடமைப்பு என்று காலத்தை இழுத்தடிப்பதை விடுத்து மலையக மக்களுக்கு முதலில் உரித்துடன் காணிகளை வழங்குங்கள். பின்னர் அங்கு வீடுகளை கட்டலாம்.” என்று ஜே.வி.பி.இன் தலைவர் அநுர குமார திசாநாயக்க கூறிய கருத்து வரவேற்கதக்கது. ஆனால், அரசாங்கம் அதனை செவிமடுக்காதுவிருக்கிறது.

காணியில்லா பிரச்சினையில் பெரிதும் பாதிக்கப்பட போகிறவர்கள் மலையக வாரிசுகள்தான். ஏனெனில், அவர்கள் தோட்டப்புறங்களை விட்டு நகர்புறங்களில் தமது வாழ்க்கையை ஆரம்பித்திருக்கிறார்கள். ஆனால், அங்கும் வாடகை வீடுகளிலேயே வசிக்கிறார்கள். ஆக, அவர்களது வாரிசுகளுக்கு மலையகத்திற்குள்ளும் சரி! வெளியிலும் சரி! காணிஉரிமை இல்லாத எதிர்காலம் அமையும் சூழல் நிலவுகிறது. ஆக, எதிர்கால இருப்புக்காக காணி உரிமையை வென்றெடுக்க வேண்டிய கட்டாயத்தில் மலையக சமூகம் இருக்கிறது.

# இம்மாத சீமையில்


03 காணி நிலம் வேண்டும்
ஆசிரியர்

05 பிக்கு வேடத்தில் போலிகளும் தமிழினவாத அரசியலும்
ருத்ரரூபன்

11 மலையக நிலவுடைமையும் சட்டங்களும்
எம். ராமதாஸ்

14 அதிகாரம் திருடிய, கொழுந்து மணக்கும் சில்லறைகள்
சண்முகம் சிவகுமார்

15 மலையக மாணவரும் கனவாகிப் போகும் கல்வியின் நிலையும்
கண்ணன் மதுஷா

20 கருப்பந்தேயிலைகளே கதிகலங்கியிருக்க…
கல்கியூர் நிரோஷன்

21 மலையக பண்பாட்டுப் பெருவெளியில் “சுமைதாங்கி கல்”
மா. ஜீவன்

27 மருத்துவமே நோயில்…
A.R.றொஹான்

30 ஒதிலி
சண்முகம் சிவகுமார்

31 ரணில் பிணைமுறி கொள்ளையில் இருந்து EPFகொள்ளைவரை – பிரியதர்ஷன தயாரத்ன
தமிழில் : மகேந்திரன் கிறிஸ்டோபர்

37 மந்தமடையும் பொருளாதாரமும் அதையொட்டியபோசாக்கும்
கண்ணன் மதுஷா

41 உளவியல் நோய்களை குணப்படுத்தும் பெரும் கலை றெய்கி – சுகந்தினி யசோதரன்
நேர்கண்டவர் : பா.கனகேஸ்வரி

44 போதைப்பொருள் சவக்குழியில் மலையகம்
றோஹி

47 தென்னாபிறிக்காவில் அடிமைப்பட்ட இந்தியர்களின் கதை!
சதீஸ் செல்வராஜ்

56 மலையக மக்களும் அவர்தம் அரசியலும்
எம். ராமதாஸ்

# பிக்கு வேடத்தில் போலிகளும் தமிழினவாத அரசியலும்




“பிக்கு வேடத்தில் இருக்கும் போலிகளால் சிங்கள மக்களுக்கும், தமிழினவாதத்தை உருட்டிக்கொண்டிருக்கும் தமிழ் அரசியற் கும்பலால் தமிழ் சனத்திற்கும் எவ்வாறான நன்மைகள் கிடைத்துவிடப்போகின்றன? இவர்கள் யாருக்கு உதவுகின்றனர்?” என்ற கேள்வியை வாசகர்களிடம் தொடுப்பதன் மூலம் அதற்கான பதிலை எதிர்பார்க்கிறோம். நமக்குள் இவ்வாறான கேள்விகளை எழுப்பிக்கொண்டு அதில் கிடைக்கும் பதில்களை ஆராய்வது மிக அவசியமானதுதானே? இந்தக் கேள்வியையும் அதற்கான பதிலையும் சமூகத்தின் பரந்துபட்ட உரையாடலாக மாற்றிக்கொள்ளுங்கள்.

சரி! இனி விடயத்திற்கு வருவோம். தரம் ஐந்து தமிழ்ப்பாடப் புத்தகத்தில் ஒரு கதை இருந்தது. இக்கதை பொதுவாக 90கிட்ஸ்களுக்கு தெரிந்திருக்கும். அது ஒரு வழிப்போக்கனின் கதை. “பூசணிக்காய் ஏன் கொடியில் காய்க்கிறது? ஏன் மரத்தில் காய்ப்பதில்லை? என்ற கேள்வி ஒரு வழிப்போக்கனின் சிந்தையில் எழுந்தது. அவன் வழமைப்போலவே பயணம் செய்துகொண்டிருந்த வேளையில் பயணக் களைப்பை போக்க ஆலமர நிழலில் அமர்ந்து விட்டான். அப்படியே அவன் கண்ணயர்ந்தும் விட்டான். அச்சமயம் ஒரு ஆலம்பழம் வந்து அவனது தலையில் விழுந்தது. அவன் தனது தலையே பிளந்தது போல கதறியடித்துக் கொண்டு எழுந்து விழித்தான். அப்பொழுது அவன் ‘நல்லவேளை ஆலம்பழத்திற்கு பதிலாக பூசணிக்காய் இருந்திருந்தால் என் நிலை என்னவாகியிருக்கும்’ என்று புலம்பினான்.” இதுதான் அந்தக் கதை! ஆலமரத்திற்கு கீழ் அமர்ந்து இவ்வாறு சிந்தித்த வழிப்போக்கனைப் போலவே ஆப்பிள் மரத்துக்கடியில் அமர்ந்து ஓர் இளைஞன் வேறு விதமாக சிந்தித்தான். “ஏன் ஆப்பிள் பழங்கள் பூமியை நோக்கி கீழே விழுகின்றன.” என்ற கேள்வி அவனுக்குள் எழுந்தது. அதற்கு விடையாக புவியீர்ப்பு விசையைக் கண்டறிந்துகொண்டான். அந்த இளைஞனால் பல விதிகளும் நிறுவப்பட்டன. அவற்றில் மூன்றாவது விதியைக் கொண்டுதான் நான் இந்த கட்டுரையை நகர்த்தப் போகிறேன். அதுதான் நியூட்டனின் மூன்றாவது விதி! “எந்தவொரு தாக்கத்திற்கும் சமனும் எதிருமான மறுத்தாக்கம் உண்டு” என்பதுதான் அவ்விதி. இனி அந்த இளைஞனின் பெயரை சொல்ல வேண்டிய அவசியம் இருக்காது என நினைக்கிறேன்.

“கோட்டாகோகம” போராட்டம் நாடுமுழுவதும் உக்கிரம் கண்டிருந்தவேளை நாட்டு மக்கள் இனம், மதம், மொழி, பிரதேசம் கடந்து ஒன்றாய் சங்கமித்திருந்தனர். ஏற்கெனவே, யுத்தவெற்றியை காரணம் காட்டி ஆட்சியில் நீடித்திருந்த ராஜபக்ஸர்கள்

2015 இல் மக்களால் தோற்கடிக்கப்பட்ட பின்னர் மறுபடி முஸ்லிம்களுக்கு எதிரான கோசத்தினை உயர்த்திப் பிடித்து வன்முறைகள் மூலமாகவும், ஈஸ்டர் தாக்குதலின் பெறுபேறுகளின் படியும் மீளவும் 2019 இல் ஆட்சிக்கு வந்தனர். இச்சமயம் முஸ்லிம் மக்களுக்கு எதிரான போக்கு உச்சம் கண்டிருந்தது. மலட்டுத் தன்மையை ஏற்படுத்தக் கூடிய கொத்துரொட்டி மற்றும் உள்ளாடைகளை முஸ்லிம் வியாபாரிகள் விற்பனை செய்வதாகவும், முஸ்லிம்களின் வர்த்தக நிலையங்களை புறக்கணிக்க வேண்டும் என்றும் பிரச்சாரங்கள் முன்னெடுக்கப்பட்டன. அதுப்போலவே, டொக்டர் சாஃபியின் கருப்பைப் பை விவகாரம் பற்றிய இனவாதிகளின் போலி பரப்புரைகள் சிங்கள மக்களை அச்சத்தில் ஆழ்த்தின. மாவனெல்லையில் புத்தர் சிலை உடைக்கப்பட்டதாக முஸ்லிம் இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர். மத்துகம, திகன போன்ற இடங்களில் ராஜபக்ஸர்களின் காடையர்களினால் திட்டமிட்டு முஸ்லிம் மக்களுக்கு எதிரான வன்முறைகள் கட்டவிழ்த்துவிடப்பட்டன. முந்திய தேர்தல்களில் சிங்கள மக்களின் வாக்குகளை வென்றெடுக்க தமிழ் மக்களுக்கு எதிரான இனவாத கருத்தியலும் யுத்த வெற்றியும் எவ்வாறு ராஜபக்ஸர்களுக்கு பயன்பட்டதோ அதுப்போல ரணில்-மைத்திரி அரசாங்கத்தை தொடர்ந்து

**ராஜபக்ஸர்கள் 2015 இல் மக்களால் தோற்கடிக்கப்பட்ட பின்னர் மறுபடி முஸ்லிம்களுக்கு எதிரான கோசத்தினை உயர்த்திப் பிடித்து வன்முறைகள் மூலமாகவும், ஈஸ்டர் தாக்குதலின் பெறுபேறுகளின் படியும் மீளவும் 2019 இல் ஆட்சிக்கு வந்தனர். இச்சமயம் முஸ்லிம் மக்களுக்கு எதிரான போக்கு உச்சம் கண்டிருந்தது. மலட்டுத் தன்மையை ஏற்படுத்தக் கூடிய கொத்துரொட்டி, உள்ளாடைகளை முஸ்லிம் வியாபாரிகள் விற்பனை செய்வதாகவும், முஸ்லிம்களின் வர்த்தக நிலையங்களை புறக்கணிக்க வேண்டும் என்றும் பிரச்சாரங்கள் முன்னெடுக்கப்பட்டன. அதுப்போலவே, டொக்டர் சாஃபியின் கருப்பைப் பை விவகாரம் பற்றிய இனவாதிகளின் போலி பரப்புரைகள் சிங்கள மக்களை அச்சத்தில் ஆழ்த்தின. மாவனெல்லையில் புத்தர் சிலை உடைக்கப்பட்டதாக முஸ்லிம் இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர். மத்துகம, திகன போன்ற இடங்களில் ராஜபக்ஸர்களின் காடையர்களால் திட்டமிட்டு முஸ்லிம் மக்களுக்கு எதிரான வன்முறைகள் கட்டவிழ்த்துவிடப்பட்டன.**



தாம் ஆட்சிக்கு வர அவர்களுக்கு முஸ்லிம்களுக்கு எதிரான இனவாத மற்றும் மதவாத கருத்தியல்கள் பயன்பட்டன. எப்பொழுதுமே இவ்வாறான தன்நல அரசியற் கொள்கையை கொண்டோர் தமது ஆட்சியை தக்க வைப்பதற்கும் அதிகாரத்தை கைப்பற்றுவதற்கும் தங்கள் கைகளில் எடுக்கும் பிரதான ஆயுதமாக பிரவினைவாதமே இருக்கிறது. ஆக, பிரிவினைவாதத்தை விதைத்ததன் விளைவாக இதுவரையில் நாட்டுக்கும் மக்களுக்கு அழிவே வந்துசேர்ந்துள்ளது.

கறுப்பு வெள்ளையர்களிடம் நாடு 1948 இல் தாரைவார்த்துக் கொடுக்கப்பட்டது முதல் பிரிவினைவாதம் வீரியம் கண்டது. நெருப்பில்லாமல் புகை வராது என்பது போல அந்தக் கறுப்பு வெள்ளையர்களின் அரசியல், வியாபாரம் மற்றும் மேட்டுக்குடி அதிகார இருப்புக்காக பிரிவினைவாதம் அவர்களுக்கு தேவைப்பட்டது. ஆக, இன மோதல்களாகவும் வன்முறைகளாகவும் கொடிய யுத்தமாகவும் பற்றியெரியக்கூடிய பிரிவினைவாத பெருந் தீ எப்பொழுதுமே கறுப்பு வெள்ளையர்களிடம் தகித்துக் கொண்டிருக்கிறது. ஆனால், அந்த தீயில் பொசுங்கிப் போகிறவர்கள் சாதாரண மக்களாகவே இருக்கிறார்கள்.

பெயரளவு சுதந்திரத்தின் பின்னர் இடதுசாரிகளிடம் நாடு நகர்ந்து செல்வதை தடுக்கும் முகமாக தேநீரின் சாயத்தை போலவே செந்நிறமாக மாற ஆரம்பித்திருந்த பெருந்தோட்டங்களை நிர்மூலமாக்கும் சதியை கறுப்பு வெள்ளையர்கள் மேற்கொண்டனர். அதன்படி, மலையக மக்களின் குடியுரிமையும் வாக்குரிமையும் பறிக்கப்பட்டு அவர்கள் நாடற்றவர்களாக மாற்றப்பட்டனர். அன்று

முதல் தொடர்ச்சியாக தமிழ் மக்களுக்கு எதிரான கொள்கையை அவர்கள் கையாண்டனர். அது அவர்களின் இருப்புக்கு பயனளித்தது. ஆனால், நாடு அன்றே படுபாதாளத்தை நோக்கி பயணிக்க ஆரம்பித்துவிட்டது. இதுவே, இன்று நாடு வங்குரோத்து நிலையை அடைவதற்கான தொடக்கப்புள்ளியாகவும் இருந்தது.

1956 இல் தனிச் சிங்கள சட்டம் கொண்டுவரப்பட்டதன் பின்னணியில் இருப்பதும் அரசியல் போட்டிதான்! D.S.சேனநாயக்கவுடன் கூட்டணி அமைத்திருந்த சிங்கள மகா சபையின் தலைவர் S.W.R.D.பண்டாரநாயக்க அதிலிருந்து பிரிந்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை நிறுவினார். ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியை தக்கவைக்க D.S.சேனநாயக்கவின் மகன் டட்லி சேனநாயக்க "தான் பிரதமராகினால் சிங்கள மொழியை அரசகரும மொழியாக்குவேன்" என்றார். அதனை வெல்லும் தேர்தல் பிரச்சாரமாக S.W.R.D.பண்டாரநாயக்க "தான் தனிச்சிங்கள சட்டத்தை ஒரேநாளில் கொண்டுவருவேன்" என்றார். அப்போது ஆட்சி மொழியாக ஆங்கிலமே இருந்தது. தனிச்சிங்கள சட்டம் ஆங்கில கல்வியை நம்பியிருந்த மேட்டுக்குடி தமிழர்களுக்கு தலையிடியாய் அமைந்தது. அக்காலப்பகுதியில் ஒடுக்கப்பட்ட தமிழ்ச் சனமும் மலையகத் தமிழர்களும் பொதுவாக பரந்துபட்ட கல்வி பரப்புக்குள் உள்வாங்கப்பட்டிருக்கவில்லை. முஸ்லிம்களின் நிலையும் அவ்வாறே இருந்தது. இந்த விவகாரமும் கூட அன்றைய இலவசக் கல்வியை கேள்விக்குட்படுத்துவதாய் இருக்கிறது. இவ்வாறு தனிச் சிங்களச் சட்டம் கொண்டுவரப்பட்ட போது தமிழ் மக்களையும் தமிழ் மொழியையும் கொஞ்சமும் கணக்கில் கொள்ளவில்லை. தமிழ் மொழியை நிராகரிப்பதாகவே அது அமைந்தது. இது தமிழ் மக்கள் மத்தியில் கோபத்தை ஏற்படுத்தியது.

தனிச் சிங்களச் சட்டம் இயற்றப்பட்டதன் விளைவாக ஆங்கில மொழி சாதாரண மக்களிடம் இருந்து பறிக்கப்பட்டது. படிப்படியாக ஆங்கிலக் கல்வி தனியார் கல்வியாகவும், றோயல் மக்களின் கல்வியாகவும் மாறிப்போனது. (இன்றைய உலகில் ஆங்கில மொழி இன்றியமையாதவொன்றாக இருப்பதுடன் அதுமுறையாக எல்லா அரச பாடசாலைகளிலும் கற்பிக்கப்படுவதில்லை.) அதுப்போல, சிங்களத்திற்கு அடுத்தப்படியாக பெரும்பான்மையாகவுள்ள தமிழ் மொழி புறக்கணிக்கப்பட்டது. அதனால், அரச நிறுவனங்கள் உள்ளிட்ட பலவிடங்களிலும் நெருக்கடிகள் ஏற்பட்டன. அதனால், தமிழர்கள் சிங்கள மொழியை வெறுக்க ஆரம்பித்தார்கள். அதன்படி, சிங்களவர்களையும் வெறுக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டனர். அதுப்போலவே, சிங்கள மக்களும் தமிழர்களுக்கு எதிராக நின்றனர். அதன் விளைவாக "SRI" என்ற எழுத்துக்காக பெரும்



**பெயரளவு சுதந்திரத்தின் பின்னர் இடதுசாரிகளிடம் நாடு நகர்ந்து செல்வதை தடுக்கும் முகமாக தேநீரின் சாயத்தை போலவே செந்நிறமாக மாற ஆரம்பித்திருந்த பெருந்தோட்டங்களை நிர்மூலமாக்கும் சதியை கறுப்பு வெள்ளையர்கள் மேற்கொண்டனர். அதன்படி, மலையக மக்களின் குடியுரிமையும் வாக்குரிமையும் பறிக்கப்பட்டு அவர்கள் நாடற்றவர்களாக மாற்றப்பட்டனர். அன்று முதல் தொடர்ச்சியாக தமிழ் மக்களுக்கு எதிரான கொள்கையை அவர்கள் கையாண்டனர். அது அவர்களின் இருப்புக்கு பயனளித்தது. ஆனால், நாடு அன்றே படுபாதாளத்தை நோக்கி பயணிக்க ஆரம்பித்துவிட்டது. அதுவே, இன்று நாடு வங்குரோத்து நிலையை அடைவதற்கான தொடக்கப்புள்ளியாகவும் இருந்தது.**

**தனிச் சிங்களச் சட்டம் இயற்றப்பட்டதன் விளைவாக ஆங்கில மொழி சாதாரண மக்களிடம் இருந்து பறிக்கப்பட்டது. படிப்படியாக ஆங்கிலக் கல்வி தனியார் கல்வியாகவும், றோயல் மக்களின் கல்வியாகவும் மாறிப்போனது. (இன்றைய உலகில் ஆங்கில மொழி இன்றியமையாதவொன்றாக இருப்பதுடன் அதுமுறையாக எல்லா அரச பாடசாலைகளிலும் கற்பிக்கப்படுவதில்லை.)**

கலவரம் வெடித்தது. ஆக, நியூட்டனின் மூன்றாவது விதிப்படி, ஒருபுறம் சிங்கள பேரினவாதம் வளர மறுபுறம் தமிழினவாதமும் வளர ஆரம்பித்தது. அதாவது, தமிழர்களின் உரிமை போராட்டங்கள் தவறாக வழிநடத்தப்பட்டு தமிழினவாத பாசிசமாக உருவாக்கப்பட்டது. இதன்மூலம் தமிழினவாத அரசியல் உயிர் வாழ்ந்தது. சிங்கள பேரினவாத அரசியல்வாதிகளால் எவ்வாறு அடியாட்களாக சிங்கள காடையர் கும்பல் உருவாக்கப்பட்டனரோ அதுப்போல தமிழினவாத அரசியல்வாதிகளாலும் தமிழ்க் காடையர்கள் உருவாக்கப்பட்டனர். அதன்படி, மோதலும் வரலாறும் நீண்டது. அதன் மத்தியில் நியாயமான தமிழ் மக்களின் உரிமை போராட்டங்கள் நசுக்கப்பட்டன. உண்மையான போராளிகளும் காணாமலாக்கப்பட்டனர். சகோதரப் படுகொலைகள் எல்லையைக் கடந்தன.

1977 கலவரம் ஜே.ஆர்.ஜயவர்தனவின் காடையர்களால் உருவாக்கப்பட்டது. அவர்கள் தமிழர்களின் சொத்துக்களை கொள்ளையடிப்பதையே இலக்காக கொண்டிருந்தனர். இவ்வாறு பல கலவரங்களின் போதும் தமிழர்களின் சொத்துக்களை திருடியவர்கள் நாடு முழுவதும் செல்வதந்தர்களாகவும் ஆட்சியாளர்களின் பாதுகாவலர்களாகவும் உள்ளனர். 1981 ஆம் ஆண்டு யாழ். நூலகம் எரிக்கப்பட்டது கூட ஜே.ஆரின் தேர்தல் வெற்றிக்காகவே! இவ்விவகாரத்தில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவும் சம்பந்தப்பட்டுள்ளமை அம்பலமாகியிருக்கிறது. அதனைத் தொடர்ந்து 1983 கறுப்பு ஜூலையும் ஜே. ஆரினால் திட்டமிட்டு நிர்மாணிக்கப்பட்டது. 1977 முதல் நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை ஜே.ஆர். நிறைவேற்றாததனால் மக்கள் மத்தியில் அரசாங்கத்திற்கு எதிராக அதிருப்தி ஏற்பட்டது. தாராளமயப் பொருளாதாரத்தினால் உள்நாட்டு உற்பத்தி பொருளாதாரமும் சிறு முதலாளிகளும், விவசாயிகளும் பாதிப்புற்றனர். வேலையில்லா திண்டாட்டம் அதிகரித்தது. பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது. இளைஞர்களின் எதிர்கால கனவு தகர்க்கப்பட்டுக் கொண்டிருந்தது. அதனால், நாட்டின் மூன்றாவது சக்தியாக ஜே.வி.பி. வளர்ந்துகொண்டிருந்தது. இதனை தடுக்கும் முகமாக அமெரிக்க ஏஜன்ட் ஜே.ஆர்.ஜயவர்தனவால் கறுப்பு ஜூலை உருவாக்கப்பட்டது. அமெரிக்காவுக்கு துதிப்பாடும் ஜே.ஆரை மண்டியிட வைக்க இந்தியா தமிழர்களை பயன்படுத்தியது. இவ்வாறான காரணங்களால் இனங்களுக்கிடையில் விரிசல் விரிந்தது. இது 30 வருட கால யுத்தமாகவும் வெடித்தது. ஆனால், யுத்தம் முடிவுற்ற பின்னரும் எந்த புள்ளியில் யுத்தம் தொடங்கியதோ அதேப்புள்ளியிலேயே சிக்கல்கள் சிறைப்பட்டு நிற்கின்றன. தீர்வு இதுவரையில் இல்லை. இழுத்தடிப்பு மாத்திரமே எஞ்சியிருக்கிறது.

தமிழ் மக்களை அரசியலுக்காக ராஜபக்ஸர்கள் போன்ற பேரினவாத தலைவர்கள் ஆரம்பத்தில் பயன்படுத்தியது போல முஸ்லிம்களுக்கு எதிரான போக்கையும் அவர்கள் முன்னெடுத்தனர். அவைபற்றி கட்டுரையின் தொடக்கத்திலேயே பார்த்தோம். அது மிகப்பெரிய வெற்றியை அவர்களுக்குத் தேடித் தந்தது. 69 இலட்சம் வாக்குகளைப் பெற்று கோட்டாபய ராஜபக்ஸ ஜனாதிபதினார். ராஜபக்ஸர்களின் தலைமையிலான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுண பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு அதிகாரத்தைப் பெற்றது. இந்த அரசியல் கோஷ்டிகளின் வெற்றிக்குப் பின்னால் எப்பொழுதுமே இனவாத, மதவாத வெடிகுண்டு இருப்பது போலவே அதனை



இயக்குவதற்காக போலி பிக்குமார்களும் முன்னணியில் இருந்து செயற்படுகின்றனர்.

S.W.R.D.பண்டாரநாயக்கவின் காலத்தில் களனி ரஜமகா விகாரையின் தலைமைப் பிக்குவான மப்பிட்டிகம புத்தரகித தேரர் முதற்கொண்டு, தற்போதைய கலகொட அத்தே ஞானசார, பெங்கமுவே நாலக்க மற்றும் ராவணா பலய அமைப்புகளைச் சேர்ந்த போலி பிக்குமார்களை வரிசைப்படுத்த முடியும். இவர்கள் முற்றிலும் பவுத்த தர்மத்திற்கு எதிராக செயற்படுகின்றவர்கள் ஆவர். இவர்கள் போன்றவர்களால் சிங்கள பவுத்த மக்களது இரத்தம் சூடேற்றப்பட்டுக் கொண்டிருக்கிறது. அதற்கேற்றவாறு சிங்கள பேரனவாத அரசியல்வாதிகளும் அவர்களது அல்லக்கைகளும் அதற்கு தூபமிட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதுப்போலவே அதற்கு இணையாக தமிழினவாதமும் வளர்த்தெடுக்கப்படுகிறது. அதுப்போலவேதான் முஸ்லிம் இனவாதமும் போசிக்கப்படுகிறது. ஆக, இவையனைத்தும் நாட்டுக்கு ஆபத்தானதாகும்.

ஆனால், நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியின் போது அத்தனை பிரிவினைவாத கோசங்களின் குரல்வளைகளும் நெறிக்கப்பட்டன. இனவாத கருத்துக்களை உதிர்த்தவர்கள் போராட்டக்களத்தில் இருந்து கூட விரட்டியடிக்கப்பட்டனர். தம்மை ஏமாற்றி ஊழல், மோசடிகளை புரிந்த, தான்தோன்றித்தனமான அரசியலை முன்னெடுத்து வந்த ராஜபக்ஸர்களுக்கு எதிராக மக்கள் அணித்திரண்டனர். அவர்களை அதிகார சிம்மாசனத்தில் இருந்து இறங்கியோட செய்தனர். இந்த சந்தர்ப்பத்திலேயே அரசியலமைப்புச் சட்டத்தின்படி ராஜபக்ஸர்களால் ரணில் விக்ரமசிங்க பிரதமராக தெரிவு செய்யப்பட்டார். பின்னர் பாராளுமன்றத்தில் இருக்கும் தங்கள் பெரும்பான்மையைக் கையாண்டு ரணில் விக்ரமசிங்கவை ராஜபக்ஸர்கள் ஜனாதிபதியாகவும் நியமித்துக் கொண்டனர்.



**உள்நாட்டு உற்பத்தி பொருளாதாரத்தை கைவிட்டு கடன்பெறும், நாட்டு வளங்களை விற்கும் கொள்கையை ரணில் விக்ரமசிங்க முன்னெடுத்து வருவதால் இலங்கை வங்குரோத்து நிலைமையில் இருந்து மீண்டெழாமல் இருக்கிறது. பொருளாதார நெருக்கடி ஒவ்வொரு வீடுகளின் சமையலறையிலும் உக்கிரம் கண்டிருக்கிறது. வைத்தியசாலைகளில் மருந்துகளுக்கு தட்டுப்பாடு மற்றும் போலி மருந்துகளின் பாவணை. தவிர, வைத்திய நிபுணர்கள் உட்பட்ட மருத்துவ துறையைச் சார்ந்த பலரும் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர். கல்வித்துறையும் அதுப்போலவே சிறழிந்திருக்கிறது. பல்கலைக்கழகங்களில் மாணவர்களுக்கு கற்பிப்பதற்கு பேராசிரியர்களும் விரிவுரையாளர்களும் இல்லாத நிலை உருவாக்கப்பட்டுள்ளது. நாட்டின் மிகப் பெறுமதிமிக்க தூண்களான கல்வியும் மருத்துவமும் சீரழிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது.**

ஆக, இவ்வனைத்துமே திட்டமிட்டு அரங்கேற்றப்பட்டது. அதன்படி, மக்களால் புறக்கணிக்கப்பட்ட, மக்களின் நீதிமன்றத்தில் குற்றவாளியாக அறிவிக்கப்பட்ட ராஜபக்ஸர்கள் பாதுகாக்கப்பட்டனர். ரணில் விக்ரமசிங்க அவர்களின் பாதுகாவலனாக மாறிப்போனார்.

இவ்வாறான நிலையில் மக்களுக்கு ரணில் விக்ரமசிங்க + ராஜபக்ஸர்களின் கூட்டு அரசாங்கத்தின் மீது அதிருப்தியும் வெறுப்பும் அதிகரித்து வருகிறது. உள்நாட்டு உற்பத்தி பொருளாதாரத்தை கைவிட்டு கடன்பெறும், நாட்டு வளங்களை விற்கும் கொள்கையை ரணில் விக்ரமசிங்க முன்னெடுத்து வருவதால் இலங்கை வங்குரோத்து நிலைமையில் இருந்து மீண்டெழாமல் இருக்கிறது. பொருளாதார நெருக்கடி ஒவ்வொரு வீடுகளின் சமையலறையிலும் உக்கிரம் கண்டிருக்கிறது. வைத்தியசாலைகளில் மருந்துகளுக்கு தட்டுப்பாடு மற்றும் போலி மருந்துகளின் பாவணை! தவிர, வைத்திய நிபுணர்கள் உட்பட்ட மருத்துவ துறையைச் சார்ந்த பலரும் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர். கல்வித்துறையும் அதுப்போலவே சிரழிந்திருக்கிறது. பல்கலைக்கழகங்களில் மாணவர்களுக்கு கற்பிப்பதற்கு பேராசிரியர்களும் விரிவுரையாளர்களும் இல்லாத நிலை



உருவாக்கப்பட்டுள்ளது. நாட்டின் மிகப் பெறுமதிமிக்க தூண்களான கல்வியும் மருத்துவமும் சீரழிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. அதுப்போல, மின்கட்டணம் மற்றும் தண்ணீர் கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே, மிகைவரி அமுலில் இருக்கிறது. குற்றவாளிகளுக்கு பதிலாக மக்கள் தற்போது தண்டனையை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். அதனால், நாட்டில் ஆட்சி மாற்றத்தை வேண்டி மக்கள் தேர்தலுக்காக காத்திருக்கிறார்கள். இவ்வாறான நேரத்திலேயே ரணில் விக்ரமசிங்கவினால் நீதிமன்ற உத்தரவினையும் மீறி உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பிற்போடப்பட்டுள்ளது. மாகாண சபை தேர்தல் பற்றிய கதையே இல்லை. ஆனால், 13 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பிலான

**இம்முறை இனவாத பொறியை மட்டுமல்லாது, மதவாத பொறியையும் ரணில் விக்ரமசிங்கவும் ராஜபக்ஸர்களும் மக்களின் காலுக்கடியில் வைத்துள்ளனர். அதன்படி, தொல்பொருள் திணைக்களத்தின் ஊடாகவும் பாராளுமன்ற வர்தமானி அறிவித்தல் மூலமாகவும் மதவாதத்தை வளர்த்தெடுக்கும் விடயத்தில் தோல்வி கண்ட ஆட்சியாளர்கள் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர். அதில் குருந்தூர் விவகாரம் முன்னிலை பெற்றுள்ளது.**

கதையாடலை ரணில் விக்ரமசிங்க ஆரம்பித்து வைத்தார். இவை ஜனாதிபதி தேர்தலை இலக்காக கொண்டுள்ளது. இம்முறை இனவாத பொறியை மட்டுமல்லாது, மதவாத பொறியையும் ரணில் விக்ரமசிங்கவும் ராஜபக்ஸர்களும் மக்களின் காலுக்கடியில் வைத்துள்ளனர். குறிப்பாக இலங்கைத் தமிழ் மக்களுக்கு எதிராக! அதன்படி, தொல்பொருள் திணைக்களத்தின் ஊடாகவும் பாராளுமன்ற வர்தமானி அறிவித்தல் மூலமாகவும் மதவாதத்தை வளர்த்தெடுக்கும் விடயத்தில் தோல்வி கண்ட ஆட்சியாளர்கள் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர். அதில் குருந்தூர் விவகாரம் முன்னிலை பெற்றுள்ளது. இந்திய உழவுத்துறையும் ஈஸ்டர் தாக்குதலைத் தொடர்ந்து குருந்தூர் விவகாரத்திலேயே பெரும் பிரளயம் வெடிக்கவுள்ளதாக செய்தி வெளியிட்டுள்ளது. ஆக, இவ்வாறான பொறிகளில் மக்கள் சிக்கிக் கொள்ளாது இருப்பதே எதிர்காலத்தை செழுமைப்படுத்துவதாக அமையும். நியூட்டனின் மூன்றாம் விதிப்படி, இனவாதத்தையும் மதவாதத்தையும் தோற்கடித்து மக்கள் ஒன்றுசேர்ந்து எழும் பட்சித்தில் அதன் மறுத்தாக்கமாக மக்கள் ஆட்சி மலரும். ஆக, தொடக்கத்தில் முன்வைத்த கேள்விக்கு பதிலாக அமைவது போலி பிக்குக்களால் சிங்கள மக்களுக்கும் தமிழ் இனவாத அரசியல் தலைவர்களால் தமிழ் மக்களுக்கும் எவ்வித நன்மையும் கிடைக்கப்போவதில்லை. அவர்கள் ராஜபக்ஸர்கள் போன்ற மக்களுக்கு விரோதமான ஆட்சியாளர்கள் உயிர்பெற்று எழுவதற்கே உதவுவார்கள்.



# மலையக நிலவுடைமையும் சட்டங்களும்

எம்.ராமதாஸ்
இறம்பொடை

மலையகத்தில் வரலாறு இருநூறு ஆண்டுகள் கடந்துவிட்ட இந்தக் காலப்குதியில் இன்னும் நிலவுடைமைக்குப் போராடிக்கொண்டிருக்கிறோம். அடிப்படையில் இலங்கையின் சட்டத்திட்டங்களை நிலவுடைமை விதிகளோடு ஒப்பீடு செய்து ஆராய்வது அடிப்படையாகின்றது.

இயல்பாகவே பெருந்தோட்ட தொழிலாளர் நல சட்டதிட்டங்கள் எமது நிலவுடைமைக்கு எதிராகவே இருக்கின்றது என்பது நாம் பொதுவாக அறியாதவொன்று. கோப்பிக்காலம் தொட்டு சுதந்திரத்திற்கு பின்னர் சுமார் ஒரு நூற்றாண்டு காலமாக கையளவு நிலமேனும் மலையக தொழிளாளர் கைவசம் இருக்கவில்லை. ஆங்கிலேய ஆட்சியாளர்களால் துரைமாருக்கு விலைக்கு கொடுக்கப்பட்ட நிலங்களைப் போலவே கூலி தொழிலாளர்களும் ஒரு பொருளாக அன்று கருதப்பட்டதனாலயே நிலவுடைமை அன்று சிறிதும் எம்மை தீண்டாமல் இருந்து.

1948 ஆம் ஆண்டு சுதந்திரம் வளங்கப்பட்டிருப்பினும் மலையக மக்களை பொருத்தவரை மீண்டும் ஒரு இருண்ட யுகத்திற்கே சுதந்திரத்திற்கு பின்னரான காலமும் கொண்டுச்சென்றது எனலாம்.

சுதந்திரத்திற்கு பின்னர் ஏற்படுத்தப்பட்ட பல்வேறு சட்டத்திட்டங்களும் சனத்தொகை புள்ளிவிவரவியலும், தாயகம் திரும்பலும் மீண்டும் மீண்டும் மலையக இருப்பை கேள்விக்குறியாக்கியது.

இலங்கையில் 1935 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டம் கொண்டுவரப்பட்டபோது பெருந்தோட்டத் தொழிலாளர்கள் முற்றாக புறக்கணிக்கப்பட்டிருந்தார்கள். அது நிறைவேற்றப்பட்ட சமயம் அன்றைய இடதுசாரி தலைவர் "கலாநிதி எஸ்.ஏ. விக்கிரமசிங்க" இந்திய வம்சாவளி தமிழர்கள் ஆறுலட்சம் பேருக்கு அதிகமாக இருக்கிறார்கள் எனவும் அதில் சரிபாதி மக்கள் இந்தியாவுடனான தொடர்பை முற்றாக இழந்தவர்கள்









**1980-க்கு பின்னரான காலப்பகுதியில் தான் அரசாங்கத்தால் பெருந்தோட்ட காணிகளும் லயன்களும் மறைமுகமாக மக்களும் 21 பல்தேசிய பொதுக் கம்பனிகளுக்கு 90 வருட கால குத்தகைக்கு வழங்கப்பட்டன. அன்று அடிக்கப்பட்டதுதான் எமது நிலவுடைமைக்கான சாவுமணி. அதன்பின் தான் தொழிற்சங்கம், சந்தா, கூட்டு ஒப்பந்தம் என மலையக அரசியல் வியாபாரிகள் செவ்வனே தம் வியாபாரங்களை செழிப்பாக செய்ய ஆரம்பித்திருந்தார்கள்.**

என்று குறிப்பிட்டதோடு இந்தச் சட்டம் மலையக மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதி என்றும் அரச சபையில் குறிப்பிட்டிருந்தார்.

அந்த நிலைமை இன்று வரையும் தொடர்கிறது. தொழிலாள மக்களுக்கு ஒரு சட்டம் மலையக தொழிலாளர்களுக்கு ஒரு சட்டம் என்றே இன்றைய தேசம் நகர்கிறது.

கூலித் தொழிலாளர்களாக இந்தியாவில் இருந்து அழைத்துவரப்பட்ட மக்களுக்கு நிலவுடைமையை வழங்க அன்றைய பிரித்தானிய அரசோ பெருந்தோட்ட உரிமையாளர்களோ கொஞ்சமும் விரும்பவில்லை. 1942 வரை இந்த நிலை தொடர்ந்தது அதற்கு பின்னர் பெருந்தோட்ட தொழில் செய்யும் தொழிலாளர்களுக்கு மட்டும் ஒரு லயன் அறையை வழங்க நிர்வாகத்திற்கு பணிக்கப்பட்டது.

சுதந்திரத்திற்குப் பின்னர் பெருந்தோட்ட காணிகளும் லயன்களும் காணி சீர்திருத்த ஆணைக்குழுவிற்கு சொந்தமாகின. 1980 ஆம் ஆண்டுக்குப் பின் பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்கு இவை வழங்கப்பட்டிருந்தன.

1980-க்கு பின்னரான காலப்பகுதியில்தான் அரசாங்கத்தால் பெருந்தோட்ட காணிகளும் லயன்களும் மறைமுகமாக மக்களும் 21 பல்தேசிய கம்பனிகளுக்கு

90 வருட கால குத்தகைக்கு வழங்கப்பட்டன.

அன்று அடிக்கப்பட்டதுதான் எமது நிலவுடைமைக்கான சாவுமணி. அதன்பின் தான் தொழிற்சங்கம், சந்தா, கூட்டு ஒப்பந்தம் என மலையக அரசியல் வியாபாரிகள் செவ்வனே தம் வியாபாரங்களை செழிப்பாக செய்ய ஆரம்பித்திருந்தார்கள். அது இன்று கிளைபரப்பி விருட்சமாக நிட்பது வேறு கதை.

"தோட்டங்களில் வாழும் மக்கள் தனது லயன்களில் திருத்தம் மேற்கொள்ளவோ, இடிக்கவோ அல்லது வேறு வசதிகளை ஏற்படுத்திக் கொள்ளும் போது அரச காணியை மீட்டல் என்ற நீதிமன்ற நடவடிக்கை மூலம் மற்றும் தண்டனைச் சடடக்கோவையின் குற்றமுறையான அத்துமீறல் குற்றத்தின் மூலம் அம்மக்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை தோட்ட நிர்வாகங்களினால் எடுக்கப்படுகிறது."

பெருந்தோட்ட நிலமும் காணிகளும் அரசுக்கு சொந்தமான போதும் தனியார் வர்த்தக கம்பனிகளுக்கு 90 வருட குத்தகைக்கு கொடுக்கப்பட்டுள்ளதால் மக்கள் அதனில் நிலவுடைமை போன்ற உரிமைகளை கோரும் போது பாரிய சட்ட சிக்கல்கள் காணப்படுகின்றன. இதனை நிவர்த்திக்க இதுவரை எந்த ஒரு நிறுவனமோ அரசியல்வாதியோ முயலவில்லை. போராட்டங்களை தவிர்ந்த எவ்வித சட்டரீதியான அனுகுமுறைகளையும் இதுவரை மேற்கொள்ளவில்லை. இலங்கை அரசாங்கமும் இதுபற்றி தேர்தல் கால அறிக்கைகளை தவிர்த்த எந்தவித ஆக்கப்பூர்வ நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை.

நிலவுடைமை கைகூடவேண்டுமெனில் முதலில் இங்கு சட்டதிட்டங்கள் மாற்றப்பட வேண்டும். அதனை முதலில் மலையக மக்கள் யாவரும் உணர வேண்டும். அரசியல்வாதிகள் யாரும் இதற்காக பாடுபட மாட்டார்கள். மக்களின் வெற்றியில் தான் சில அரசியல்வாதிகளின் தோல்வி அடங்கியுள்ளது. அதனை முதலில் நாம் உணர வேண்டிம்.

**"சட்டத்தை சட்டரீதியாக மாற்ற சட்டப்படி முயற்சிப்போம்." "மலையகம் முந்நூறு!" இதையாவது முழுமையான நிலவுடைமையோடு கொண்டாடுவோம்.**



# அதிகாரம் திருடிய, கொழுந்து மணக்கும் சில்லறைகள்

மிகுந்த வேதனையோடும்
அடங்கா கோபத்தோடும்
இந்த கவிதையின் ஏதோவொரு
லயக்கோடியில் இருந்து எழுகிறது.

'என் உழைப்பை அதிகாரம் திருடுகிறது...'
என எழும் ஒருத்தியின்
எளிய சன்னமான குரல்.

அதிகாரத்தின் ஏமாற்றங்களுக்கு பழகி போன
அடிமை வர்க்கத்தின் காதுகளுக்கு
அவளின் சன்னமான குரல்
கேட்க வாய்ப்பில்லை.

நீங்கள் செவிகொடுக்காமல்
ஒதுங்கி செல்லாதீர்கள்.

முதலைகளின் வங்கியில்
ஓர் எண்ணில் அடையாளமாகும் அவள் ...
சூதறியாதவள்
அவள் குரலற்றவள்
அவள் இந்த தேசத்தை தினமும்
குருதி சிந்தி பிரசவிப்பவள்.

தன்னை சுற்றி எழும் அதிகார சுவர்களின்
கயமை அறியாதவள்.

தன் உழைப்பை திருட
தன் தலைவனும் கையுர்த்தியது தெரியாமல்
நாடகத்தில் மூழ்கி கிடப்பவள்.

எனவே,
நீங்கள் அலட்சியமாக
இந்தக் கவிதையை கடந்து போய் விடாதீர்கள்.
அவளது
உழைப்பு சேகரித்த கொழுந்து மணக்கும்
சில்லறைகளை
அதிகாரம் தன் சட்டைப் பையில் திணித்து
கொண்டது.

நீங்கள் நின்று கொஞ்சம்
அவளுக்காக
அதிகாரத்தை நிமிர்ந்து பாருங்கள்.

அவளுக்காக
ஏன் என்று கேளுங்கள்.

அது போதும்
அதிகாரத்தின் மூட கோபுரங்கள்
சரிந்து விழ.

**சண்முகம் சிவகுமார்**



# மலையக மாணவரும் கனவாகிப் போகும் கல்வியின் நிலையும்

கண்ணன் மதுஷா

**"காலத்திற்கு ஏற்ப வித்தைகள் மாறியதுண்டு கற்பனைக்கேற்ப காவியங்கள் மாறியதுண்டு கற்பதால் மட்டுமே எழுதுபவர் மறைந்தாலும் எழுத்துக்கள் மறைவதில்லை. அதனாலோ என்னவோ கலைகளில் சேராமல் காவலில் சேர்கிறது கல்வி"** என்பதற்கிணங்க எம்முத்தான மலையகத்தின் கல்வி முறை என்ற அடிப்படையில் ஆரம்ப காலங்களில் தோட்டங்களில் எவ்விதமான அடிப்பமை வசதிகளும் இல்லாத மாட்டுத் தொழுவங்கள் போன்ற கட்டிடங்களிலேயே பாடசாலைகள் இயங்கி வந்தன. இவ்வாறு கல்வி முறையினை நடத்தி வந்ததன் உண்மையான நோக்கம் பிள்ளைகள் கல்வி பெற வேண்டுமென்பது அல்ல. அவர்கள் வீட்டில் இருந்து ஓடி விளையாடித் திரியும் போது தேயிலைக் கொழுந்தை கிள்ளி சேதம் ஏற்படுத்தி விடக்கூடாது என்பதால் கங்காணி ஒருவரை நியமித்து பிள்ளைகளை காலையில் பாடசாலைக்கு அழைத்துச் சென்று பகல் வேளையில் மீண்டும் வீட்டிற்கு கொண்டுவந்து விடவேண்டும் என்ற ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த நிகழ்வு பாடசாலை என்ற போன்ற போர்வையில் மாணவர்களை சில மணித்தியாலங்கள் சிறைக்கூடத்தில் அடைத்து வைத்த சுயநலமான செயலாகவே கருத முடிகிறது.

**"கண்ணை மூடி கனிவுடன் நீ பார்த்தால்
கனவில் எண்ணியபடி உன் வாழ்க்கை"**

எவ்வாறு மாணவர்கள் பல இலட்சிய களவுகளை சுமந்தபடி சிறைச்சாலை என்ற போர்வையில் இடம்பெற்ற பாடசாலைகளில் கல்வி போதிக்க அனுப்பப்பட்டனர். என்ன ஒரு வெட்கம்? யாரோ ஒருவரின் ஏற்றுமதி பொருளான தேயிலையை பராமரிக்க தன் பிள்ளைகளின் இலட்சியங்களை சிறையில் அடைத்துள்ளனர்.

**"இலட்சியத்தின் நுழைவாயில்தான் கல்வி"** என்றபோதும் எம் மலையக தமிழர்களுக்கு அவ்வாறான ஒரு வாய்ப்பு கூட கிடைக்கவில்லை என்பது கவலைக்கிடமான விடயம்தான். அதேநேரம் அந்தக் காலத்தில் இருந்த

**"இலட்சியத்தின் நுழைவாயில்தான் கல்வி" என்ற போதும் எம் மலையக தமிழர்களுக்கு அவ்வாறான ஒரு வாய்ப்பு கூட கிடைக்கவில்லை என்பது கவலைக்கிடமான விடயம்தான். அதேநேரம் அந்தக் காலத்தில் இருந்த சில பெரிய கங்காணிமார்களும் தொழிற்சங்கவாதிகளும் மலையக சமூகம் அதிகம் படித்து விடக்கூடாது என்பதில் கண்ணாக இருந்தார்கள். அவர்களின் கல்வி கண் திறந்துவிட்டால் அவர்களை ஏமாற்றி பிழைப்பு நடத்த முடியாமல் போய்விடும். இந்தச் சமூகம் படித்து முன்னேறி விட்டால் கைக்கூலிகள் என்ற பதம் காணாமல் போய்விடும் என்பதில் விழிப்பாகவே இருந்தார்கள்.**



சில பெரிய கங்காணிமார்களும் தொழிற்சங்கவாதிகளும் மலையக சமூகம் அதிகம் படித்து விடக்கூடாது என்பதில் கண்ணாக இருந்தார்கள். அவர்களின் கல்வி கண் திறந்துவிட்டால் அவர்களை ஏமாற்றி பிழைப்பு நடத்த முடியாமல் போய்விடும். இந்தச் சமூகம் படித்து முன்னேறி விட்டால் கைக்கூலிகள் என்ற பதம் காணாமல் போய்விடும் என்பதில் விழிப்பாகவே இருந்தார்கள். **"வெள்ளாட்டு கூட்டத்தில் ஒரு கருப்பாடு"** என்பது போல் கங்காணிமார்கள் எம்மில் ஒருவராக இருந்த போதும் எம் இனத்தை அவர்களும் முட்டாள்களாக்கினர். இவ்வாறு சிந்திக்கும் சிந்தனைவாதிகளுக்கு மத்தியில்தான் மலையகமும் படிப்படியாக விழிப்படைய தொடங்கியது.

**"விருப்பம் பல கொண்டு விரைவுடன் நீ படித்தால் வினோதமானதும் நன்மைகள் கொண்டதும் வாழ்க்கை, ஏடுகள் பலவற்றை நீ புரட்டினால் ஏற்றம் கொண்டது உன் வாழ்க்கை"**

1940-களில் அரசினால் அறிமுகப்படுத்தப்பட்ட முறையான இலவசக் கல்வி திட்டத்திற்குள் மலையக தோட்டப்புற பாடசாலைகள் 30 வருடங்களை கடந்து 1970-களின் இறுதியில் தான் முறையாக சேர்த்துக் கொள்ளப்பட்டன. ஏன் இலவசக் கல்வியினை அறிமுகப்படுத்திய இலவசக் கல்வியின் தந்தை தோட்டப்புற பிள்ளைகளுக்கு இலவசக் கல்வியை மறுத்துவிட்டாரா? அதில் கூட எமக்கு ஒரு பாரபட்சம்! 30 வருடங்களை கடந்து இலவசக் கல்வி என்னவொரு சாபம் எம்மவர்களுக்கு. தேசிய கல்வி நீரோட்டத்தில் இணைத்துக் கொள்வதில் ஏற்பட்ட இந்த தாமதமே கல்வித்துறையில் மலையகத் தமிழ் சமூகம் இன்றும் கூட பல சவால்களை சந்தித்து வர காரணமாகவுள்ளது என்றே கூறவேண்டும்.

ஒரு சமூகம் வளர்ச்சியடைந்த சமூகமாக திகழ வேண்டுமாயின், அந்தச் சமூகம் கல்வியில் உயர் நிலையில் திகழ வேண்டும். கல்வியில் உயர்வடையும் போதே அந்தச் சமூகம் அரசியல், பொருளாதார, கலை, கலாசார, பண்பாட்டு ரீதியாக உயர்வடைந்த சமூகமாக மாறும் என்ற கருத்தில் மாற்றுக் கருத்து இல்லை.

மலையக சமூகத்தை பொருத்தமட்டில் தற்காலச் சூழலில் இயற்கையின் கல்வி கொள்கைகளுக்கு அமைய அதாவது, பணக்காரத்துவ ஆட்சி முறையில் அவர்களைப் போலவே அவர்களின் கல்வி கொள்கைகளும் அதே சாயலில்தான் காணப்படுகின்றது.

இதற்கமைய இரண்டாம், மூன்றாம் நிலை கல்வி அதாவது, உயர்கல்வி மட்டங்களில் மலையக

மாணவர்கள் பல்வேறு வகையான தடைகளைத் தாண்டி சாதனை படைத்து வருகின்றார்கள். சமூகத்தில் தனக்கென ஒரு அடையாளத்தையும் நிலைநாட்டி கொள்கின்றார்கள். இருந்தாலும் ஆரம்ப நிலை கல்வியில் எந்த அளவு மலையக மாணவர்கள் தமது அடைவு மட்டங்களை எட்டுகின்றனர் என்பது ஒரு கேள்விக்குறியாகவே உள்ளது. ஆரம்ப நிலை கல்வி என்பதனை சுருக்கமாக கூறின் (1-5) வரையான நிலையாகும். ஆரம்ப நிலை என்பது ஒரு பிள்ளையை மையமாக கொண்டதாகும். மலையகத்தின் ஆரம்ப நிலை கல்வி குறித்து நோக்குமிடத்து ஒரு மந்தமான நிலையே அவதானிக்க முடிகிறது. ஆரம்ப நிலை மாத்திரமல்ல! இடைநிலை, உயர்நிலை கல்வியில் கூட ஒரு பின்தங்கிய நிலை காணப்படுகின்றது. காரணம், கற்றல் செயற்பாடுகளை கொண்டு நடத்துவதற்கு போதுமான பௌதீக வளங்களான கட்டிடம், தளபாடம், வகுப்பறை போன்ற அடிப்படை வசதிகள் கூட மலையக மாணவர்களுக்கு அரிதாக கிடைக்கப்பெற்றுள்ளது என்றுதான் கூறவேண்டும்.

மனிதவள பற்றாக்குறை எல்லா பகுதிகளிலும் மலையகத்தில் காணப்படுகின்றது. எனது பிரதேசமான மாத்தறை மாவட்டத்தில் தெனியாய பிரதேசத்தில் 5 தமிழ் மொழி மூலமான பாடசலைகள் காணப்படுகின்றன. ஆனால், ஒரு பாடசாலையில் கூட எல்லா பாடங்களுக்குமான ஆசிரியர்கள் இல்லை. கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் மற்றும் நடனம், சங்கீதம் போன்ற பாடங்களுக்கு கூட ஆசிரியர்கள் இல்லை. மலையகத்தில் பெரும்பாலானோர் ஆசிரியர் தொழிலை நாடிச் செல்கின்றனர். ஆசிரியர் பற்றாக்குறை நாளுக்கு நாள் அதிகரிக்க 2019 ஆம் ஆண்டு உயர்தரம் எழுதி சித்தியெய்திய மாணவர்கள் 4 வருடங்களை கடந்தும் இன்றும் கல்வியியற் கல்லூரியை எதிர்பார்த்து மனவருத்தத்துடன் காத்துக்கொண்டிருக்கும் எத்தனையோ மாணவர்களை கண்கூடாகக் காண்கிறோம்.

24 வயதை தாண்டியதும் கல்லூரியை எதிர்பார்த்து காத்திருக்கும் மாணவச் செல்வங்கள் எம்மில் ஏராளம். பரீட்சை எழுதி 3 வருடங்களை கடந்து நேர்முகப் பரீட்சைக்கு அழைத்தனர். நேர்முகப் பரீட்சைக்கு சென்று பல மாதங்கள் ஆகியும் இன்னும் இந்த அரசாங்கம் எதுவிதமான நடவடிக்கைகளிலும் ஈடுபடவில்லை என மாணவர்கள் மன உளைச்சலுக்கு ஆளாகியுள்ளனர். எனவே, இவ்வாறான விடயங்களும் கூட மாணவர்களுக்கு அரசாங்கத்தால் இழைக்கப்படும் அநீதிகள் என்றே கூறவேண்டும். அதுமட்டுமல்லாது, கல்வியியற் கல்லூரிகளில் பயின்று வரும் ஆசிரியர்களும் நியமனம் பெற்ற பயிற்றுவிக்கப்பட்ட பாடத்திற்கு அல்லாமல் வேறொரு பாடத்தை கற்பிக்க வேண்டிய சூழ்நிலைகளுக்கு தள்ளப்படுகின்றனர். **"குறைகள் குறைவின்றி இருப்பதால் அது ஒரு போதும் நிறைவாகப் போவதில்லை"** இவ்வாறான பற்றாக்குறைகளை இந்த முதலாளித்துவ ஆட்சியாளர்களால் ஒருபோதும் பூரணமாக்க முடியாது என்பது ஆணித்தரமான உண்மை.



**"வாழ்க்கைக்குத் தேவையானது கல்வி. அது இல்லையேல் வாழ்க்கையே கேள்வி"** உயர்தரம் கற்கும் மாணவர்கள் கலைப்பிரிவி, வர்த்தக பிரிவுகளையே அதிலும்



பெற்றோர்களின் பொருளாதார பின்னடைவு. பெற்றோர்களின் பொருளாதார பின்னடைவினால் பிள்ளைகளிடையே ஏற்படும் போசாக்கின்மை குறைபாடு, பொருளாதார பின்னடைவினால் பெற்றோர்கள் குறிப்பாக தாய்மார்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்பை நாடி செல்வதால் அப்பிள்ளைகளின் கல்வி குறித்து கவனம் செலுத்துவது ஏனைய உறவினர்களிடையே அக்கறை இன்மை காணப்படுகிறது. பத்து மாதம் சுமந்த தாயை காட்டிலும் நம் மீது அக்கறை காட்ட எவருண்டு இவ்வுலகில். கவனிப்பாரற்ற நிலைக்கு பிள்ளைகள் தள்ளப்படுவதனால் மனதளவில் பிள்ளைகள் பாதிக்கப்படுகின்றனர். இதனால் பாடசாலை கல்வி இடைவிலகல் அதாவது இடைநிறுத்துவதை காண்கின்றோம்.

பெற்றோர்கள் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியில் ஒரு கண்காணிப்பை காட்டும்போது மாணவர்கள் இடைவிலகல் போன்ற பிரச்சினைகள் குறைவடையும். இதற்கு இவர்கள் பொருளாதார ரீதியில் முன்னேற்றம் அடைய வேண்டும் என்ற கூற்றையும் நாம் நினைவுபடுத்தத்தான் வேண்டும். கல்வி பயிலும் சிறார்களின் பெற்றோர்கள் வெளிநாடுகளுக்கு சென்று வேலை செய்வது தடுக்கப்பட வேண்டும். பிள்ளைகளின் வயதெல்லையை அறிந்து பெற்றோருக்கு

**1940களில் அரசினால் அறிமுகப்படுத்தப்பட்ட முறையான இலவசக் கல்வி திட்டத்திற்குள் மலையக தோட்டப்புற பாடசாலைகள் 30 வருடங்களை கடந்து 1970களின் இறுதியில் தான் முறையாக சேர்த்துக் கொள்ளப்பட்டன. ஏன் இலவசக் கல்வியினை அறிமுகப்படுத்திய இலவசக் கல்வியின் தந்தை தோட்டப்புற பிள்ளைகளுக்கு இலவசக் கல்வியை மறுத்துவிட்டாரா? அதில் கூட எமக்கு ஒரு பாரபட்சம் 30 வருடங்களை கடந்து இலவசக் கல்வி என்னவொரு சாபம் எம்மவர்களுக்கு. தேசிய கல்வி நீரோட்டத்தில் இணைத்துக் கொள்வதில் ஏற்பட்ட இந்த தாமதமே கல்வி துறையில் மலையக தமிழ்ச் சமூகம் இன்றும் கூட பல சவால்களை சந்தித்து வர காரணமாகவுள்ளது என்றே கூற வேண்டும்.**

குறிப்பாக எமது தெனியாய பிரதேசத்தில் கலைப்பிரிவு கூட இல்லை என்பது கவலைக்கிடமான விடயம். இங்கு கற்கும் மாணவர்கள் வர்த்தகம், கணிதம், விஞ்ஞானம், தொழினுட்பம் போன்ற பிரிவுகளில் தங்களது உயர்நிலை கல்வியை தொடர்தல் என்பது எட்டாக்கனியாகவே உள்ளது. உயர்கல்வியை தொடரும் ஒரு மாணவனுக்கு அவனுடைய இலட்சியத்தை அடைந்ததற்கான வழியுடன் கூடிய விழிப்புணர்வு திட்டம் ஒன்று ஆரம்ப காலம் முதல் இன்றைய நூற்றாண்டிலும் காணப்படுவதில்லை. உயர்தர பாடங்களை தெரிவு செய்கையில் சரியான வழிக்காட்டல்கள் எதுவுமே இல்லை. பாடத்தெரிவில் தெளிவின்மை போன்ற பல சிக்கல்கள் ஏற்பட்டு பலரின் இலட்சினையே சிதைந்துள்ளது.

**"இலட்சியம் இல்லாத வாழ்க்கை துடுப்பு இல்லாத படகு போல்"** ஆகும் என்பது இலட்சியம் சிதறி வாழ்க்கையில் பல இன்னல்களை சந்தித்து வாழ்பவர்கள் எம்மில் பலர் இருக்கத்தான் செய்கிறார்கள். எம் சூழலில் பிள்ளைகளின் எதிர்காலம் குறித்து சில பெற்றோர்களின் சிந்தனையின்மை ஒரு சில குடும்பங்களில் ஆரம்ப கல்வியை வழங்க முடியாததற்கான காரணம் தான்

வேலைவாய்ப்புகளை அரசாங்கம்தான் ஒழுங்கு செய்து தரவேண்டும். அரசாங்கம் இவ்வாறான விடயங்களை செய்து தரும்போது ஏன் பெற்றோர்கள் வெளிநாடு செல்லப்போகின்றார்கள்? அவ்வாறான பிள்ளைகளின் கல்வி வளர்ச்சி தொடர்பாக கவனம் செலுத்த எத்தனிப்பார்கள்.

மலையகத்தில் ஆரம்ப கல்வியை சரிசெய்ய வேண்டும். வீடொன்றை கட்டுவதற்கு அஸ்திவாரம் உறுதியானதாக அமைய வேண்டும். அப்போதே வீடு எம்மை தாங்கி காலந்தோறும் பிடித்திருக்கும். அதுப்போலவே, பிள்ளையின் கல்வி வளர்ச்சியில் ஆரம்ப நிலை கல்வியை உறுதியாக வழங்கி பல

**மாத்தறை மாவட்டத்தில் தெனியாய பிரதேசத்தில் 5 தமிழ் மொழி மூலமான பாடசலைகள் காணப்படுகின்றன. ஆனால், ஒரு பாடசாலையில் கூட எல்லா பாடங்களுக்குமான ஆசிரியர்கள் இல்லை. கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் மற்றும் நடனம், சங்கீதம் போன்ற பாடங்களுக்கு கூட ஆசிரியர்கள் இல்லை. மலையகத்தில் பெரும்பாலானோர் ஆசிரியர் தொழிலை நாடிச் செல்கின்றனர். ஆசிரியர் பற்றாக்குறை நாளுக்கு நாள் அதிகரிக்க 2019 ஆம் ஆண்டு உயர்தரம் எழுதி சித்தியெய்திய மாணவர்கள் 4 வருடங்களை கடந்தும் இன்றும் கல்வியியற் கல்லூரியை எதிர்பார்த்து மனவருத்தத்துடன் காத்தக்கொண்டிருக்கும் எத்தனையோ மாணவர்களை கண்கூடாகக் காண்கிறோம். 24 வயதை தாண்டியதும் கல்லூரியை எதிர்பார்த்து காத்திருக்கும் மாணவச் செல்வங்கள் எம்மில் ஏராளம்.**

துறைகளை ஏற்படுத்தி பற்றாக்குறைகளை நிவர்த்தி செய்யுமாக இருந்தால் அரசாங்கம் எமது பிரதேச மாணவச் செல்வங்களும் பல துறைகளில் சிறகடித்து பறக்கும் சிட்டுக்குருவிகளாவார்கள் என்பதில் எதுவித சந்தேகமும் இல்லை.

எத்தனையோ அரசியல்வாதிகள் மலையகத்திற்கு என்றே ஒரு பல்கலைக்கழகம் நிர்மாணிக்க வேண்டும்.



குறிப்பாக ஆறுமுகம் தொண்டமானின் வரிசையில் அண்மைக்காலத்தில் அரசியல் களத்தில் குதித்த ஜீவன் தொண்டமான் மிகவும் பரபரப்பான வகையில் மலையக மாணவர்களுக்கென்ற பல்கலைக்கழகம் என்று பேசுகிறார்கள்! எங்கே? அரசியல் மேடைகளில் மட்டுமே. நாங்கள் புரட்சிமிக்க கல்விக்காக ஏக்கத்துடன் பார்த்துக்கொண்டிருப்பதால் தான் ஆசை வார்த்தைகளை கூறுகிறார்கள். மலையகத்திற்கு என்ற ஒரு பல்கலைக்கழகம் அமைக்கப்படுமாயின் பல சிட்டுக் குருவிகள் பல துறைகளில் பல வேடம் தாங்கி பறப்பார்கள். இன்று மலையகத்தில் ஆசிரியர்கள் மாத்திரமே பெரும்பாலும் உருவாகின்றார்கள். பல்கலைக்கழகம் எமக்காக உருவாக்கப்படுமாயின் இன்று விரல்விட்டு எண்ணக்கூடிய அளவில் காணப்படும் சட்டத்தரணிகள், வைத்தியர்கள் என்று சாதிப்பார்கள். அதனாலோ என்னவோ அக்கனவை நனவாக்க இன்றைய அரசியல் நாடகம் போடும் ஏமாற்றி பிழைக்கும் பணக்காரத்துவ கொள்கை கொண்ட நடிகர்கள் அச்சப்படுகின்றார்கள். எமக்கென்று ஒரு பல்கலைக்கழகம் உருவாக்கப்படுமாயின் பல்கலைக்கழகம் செல்ல அலையாகத் திரண்டிருப்பார்கள் எங்கள் செல்வங்கள்.

**“பல்கலைக்கழக பகல் கனவும், பத்தாண்டு இழுத்தடிக்கப்பட்ட தொடர் கனவும், வார்த்தை வீரியத்தால் வளர்த்து விடுமா பல்கலைக்கழகம் இது நடக்குமா? அல்லது கிடைப்பில் கிடக்குமா? கட்டிடம் உயர்ந்தால் தான் கனவு நனவாகும். பொறுத்திருந்து பார்ப்போம் அரசியல் காய் நகர்த்த கொண்டு வந்த ஆயுதமா பல்கலைக்கழகம் என்று”.**

கருப்பந்தேயிலைகளே கதிகலங்கியிருக்க
அந்தப் பேய்காற்றை
ஊசிசவுக்கைகள் இசையின் ஓசையாக்கிட
வாழைகளும் முருங்கைகளும் களத்தில் மடிந்திருந்தன.

இராமுழுதும் முரசு கொட்டிய
தொங்க வீட்டு தகரத்திற்கு மட்டும்
அதிகாலையில் விடுதலை திசை தொலைத்த
அப்பேயோ சாரல்களை அலைகழிகின்றது

கோரத்தின் நீட்சியாய் அப்பேய் காற்றின் கோரம்
பிளந்து மேலெழும் அந்த இரும்பரக்கனின்
இராட்சத அலறல் கேட்டு மான்மறியும் குழிமுசலும்
பற்றை புதருக்குள் பதைபதைகின்றது

கீச்சிடும் தேயிலைச் சிட்டு குஞ்சுகளும்
அரண்டு துடிக்க - அந்த அலறல்
காலையின் அனைத்தையும் ஆட்கொண்டு
போர் சங்கென முழங்க
கவ்வாத்து கத்திகள் தீட்டப்படுகின்றன
மட்டத்து கம்புகளும் உருவப்படுகின்றன
சுமந்திட சிலுவைகளுக்கா குறைச்சல்?

அணிவகுக்கும் கூட்டம் களத்திற்கு விரைய
வரிசையின் கடைசியில்
இறப்பர் சீட்டுக்குள் அடைக்கலம் தேடியப்படி
நகர்கின்றாள் ஒரு வயித்துபுள்ளகாரி
சாரல்கள் விட்டபாடில்லை

புள்ளகாம்பராவிலும் பாதிப்பசி தீருமுன்னே
மார்புகள் இழுக்கப்பட்டது
தாய்மையினை தற்கொலை செய்து
களத்திற்கு விரைகின்றனர் புள்ளகாரிகள்

இனி வேறென்ன
கங்காணியின் பொழி பொழியோடு
வான்மதகும் திறவுண்டு பொழிய
மீண்டும் தொடங்குகிறது போர்.

**கல்கியூர் நிரோஷன்**



# மலையக பண்பாட்டுப் பெருவெளியில் "சுமைதாங்கி கல்"

- மா.ஜீவன் -

பண்பாடு என்பது குறிப்பிட்டு ஒரு மக்கள் கூட்டம் தனது சமூக வரலாற்று வளர்ச்சினூடாகத் தோற்றுவித்துக் கொண்ட பௌதிக பொருட்கள், ஆத்மார்த்த கருத்துக்கள், மத நடைமுறைகள், சமூகப் பெறுமானங்கள் ஆகியவற்றினது தொகுதியாகும். பண்பாடு என்பது ஒரு கூட்டத்தினரின் தொழில்நுட்ப வளர்ச்சி நிலை, உற்பத்தி முறைமை, உற்பத்தி உறவுகள், கல்வி, விஞ்ஞானம், இலக்கியம், கலைகள், நம்பிக்கைகள் ஆகியவற்றின் தொகுதியாகும் என கூறுகிறார் பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி. மேலும் விளக்க நிலையில் பண்பாடு என்பது வெளிப்பார்வையில் ஒரு நடத்தை முறையாகவே தோன்றினாலும் உண்மையில் அது ஓர் அறிகை முறையே. பண்பாடு என்பது அந்த மக்கள் கூட்டத்தினரிடையே உள்ள சகலரும் பகிர்ந்து கொள்ளும் கருத்துக்கள், நடைமுறை உத்திகள், வழிநடத்தும் முறைகள் ஆகியவனாகும். அதாவது, உண்மையில் பண்பாடு என்பது ஒரு குறிப்பிட்ட குழுமத்தின் இடையே அதன் அங்கத்தவர்கள் கொள்ளும் அர்த்தங்களுக்கான சூழமைவுகளைக் கொண்டதாகும். பண்பாடு மனிதர்களால் பக்குவப்படுத்தப்படுவது. ஒரு குறிப்பிட்ட வாழ்க்கை முறைக்கு அந்த குழுமத்தின் மக்களை இணைய வைப்பதாகும் என்கிறார். பேராசிரியரின் இந்த விளக்கத்தினை பிரதானப்படுத்தி இங்கே நாம் நகர்ந்து செல்வது சாலப்பொருந்தும் என எண்ணுகிறேன். ஆம்! மலையக மக்களின் வரலாற்று ரீதியிலான வளர்ச்சிக்கும் கால ஓட்டத்தின் விழிப்பிற்கும் பண்பாட்டிற்கும் இருக்கின்ற பெரும் தொடர்பை ஆய்வு செய்ய வேண்டியது இந்தக் காலத்தின் தேவையாகும். பண்பாடு, ஆய்வு என்பதை தாண்டி ஒரு இனக்குழுவின் தனித்துவ கலை, கலாச்சாரம், வாழ்வியல், தொழில்நுட்பம், நம்பிக்கை, ஐதீகங்கள் என்பவற்றை உதாரணப் படுத்துவதில் நாம் பெரும் தவறு இழைக்கிறோம் என்பதையும் தாண்டி இந்த இருநூறு வருட வாழ்வியல்

வரலாற்றில் வாழ்வியலோடு மக்களின் கலை கலாச்சாரம் பண்பாட்டையும் மீளாய்விற்கு உட்படுத்தப்பட வேண்டியது அவசியமானதொன்றாகும்.

மலையக மானுட சமூகத்தின் முந்தையச் சமூகம் தன்னை சுற்றியுள்ள மனிதர்களையும், உயிர்களையும், இயற்கை பொருட்களையும் தன் வாழ்க்கையோடு தொடர்புப்படுத்தி அவற்றுக்கு தன் வாழ்க்கையில் பெரும் இடம் தந்து இந்த மலைகளுக்கு இடையிலான இருப்பை புரிந்துக் கொண்டும் அந்த வழியே தன் வாழ்வை அர்த்தப்படுத்திக் கொண்டும் நம்பிக்கைகள், ஐதீகங்கள், நடைமுறைகள் மூலம் தன் வாழ்வு அதன் வழி சென்றுள்ளதை வெளிப்படுத்தியுள்ளார்கள். இந்த வெளிப்படுத்தலின் ஒரு அங்கமாக நாம் "சுமைதாங்கிக் கற்களை" காண முடியும்.

புராதன காலம் தொட்டே தென்னிந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான சமூகப் புலம்பெயர்வு தொடர்ந்தேர்ச்சியாக நடந்திருக்கின்றன. இவை வழி வழியாக வந்த நிலமானிய சமூக ஊடாட்டங்களை கொண்டவையாக காணப்பட்டன. இவை நிலமானிய அரச பரம்பரைகளின் நலன்களை ஒத்த உற்பத்தி முறையாக ஆரம்ப காலங்களில் அமைந்தன. ஆனால் மலையகச் சமூகத்தினர் பெரும் திரளானோர் தொழிலுக்காக வரவழைக்கப்பட்டார்கள் என்பதை நாம் அறிவோம். இந்தச் சமூகம் ஆரம்ப காலங்களில் முற்றும் முழுதாக தென்னிந்திய அடையாளங்களிலே தம்மை அடையாளப்படுத்தினர். அந்த அடையாளங்களிலே தனது கலை கலாச்சார பண்பாட்டோடு பிணைந்து தங்கள் வாழ்வியலை நகர்த்தியே சென்றுள்ளார்கள்.

ஆரம்ப காலங்களில் மாட்டு வண்டிகள், உந்துக்கள், இருளிகளும் தள்ளு வண்டிகளும் என இன்னும் பல வகையான தன் இயக்க வண்டிகள் மானுட சக்திகளால் அறிமுகப்படுத்தப்படுவதற்கு முன் இந்த சமூகம் தனது உடலையும் தலையையும் சுமைகளுக்கு ஏற்ற வண்டிகளாக இடத்துக்கு இடம் எடுத்துச் சென்று கொண்டிருந்தது. தொலைவில் உள்ள பொருட்களை எடுத்துச் செல்பவரும், தனது தேவைக்காக வாங்கிய பொருட்களை வீடுகளுக்கு எடுத்துச் செல்வரும் என பல வகையானோர் நெடுந்தூரம் சுமைகளை சுமந்து செல்ல வேண்டிய ஒரு துர்பாக்கிய நிலை இருந்துள்ளது. அதன் பொருட்டு ஆரம்ப காலங்களில் வெறும் கால்களுடன் மலைகளிலும், காடுகளிலும், கற்பாறைகளின் வழியே உருவாக்கிக் கொண்ட பாதைகளில் தொலைதூரப் பயணங்களில் கால்நடையாகவே சுமந்து செல்வதுண்டு. இங்கே சிறிது இளைப்பாறுவதற்காக

**ஆரம்ப காலங்களில் மாட்டு வண்டிகள், உந்துக்கள், இருளிகளும் தள்ளு வண்டிகளும் என இன்னும் பல வகையான தன் இயக்க வண்டிகள் மானுட சக்திகளால் அறிமுகப்படுத்தப்படுவதற்கு முன் இந்த சமூகம் தனது உடலையும் தலையையும் சுமைகளுக்கு ஏற்ற வண்டிகளாக இடத்துக்கு இடம் எடுத்துச் சென்று கொண்டிருந்தது. தொலைவில் உள்ள பொருட்களை எடுத்துச் செல்பவரும், தனது தேவைக்காக வாங்கிய பொருட்களை வீடுகளுக்கு எடுத்துச் செல்வரும் என பல வகையானோர் நெடுந்தூரம் சுமைகளை சுமந்து செல்ல வேண்டிய ஒரு துர்பாக்கிய நிலை இருந்துள்ளது.**

சுமைகளை இறக்கி வைத்து விட்டு நன்றாக தங்கள் உடல் களைப்பை போக்கிக் கொண்டு மீண்டும் தூக்கவும் பிறரின் துணை தேவைப்படும். இத்துணையானது எல்லா நேரங்களிலும் கிடைக்குமெனச் சொல்லி விட முடியாது. இவ்வாறான பிரச்சனைகள் இன்றி தனியாகவே தங்கள் சுமைகளை இறக்கிக் கொள்ளவும், தானாகவே தூக்கிக் கொள்ளவும் வசதியான ஒரு மேடையை சுமார் மூன்று கற்களைக் கொண்டு செங்குத்தாக தரையிலிருந்து நான்கு அல்லது ஐந்து அடி இடைவெளியில் நிற்குமாறு ஊன்றி ரெண்டு கற்களுக்கு மேலே தங்கள் தோலுக்கு அல்லது தலைக்கு இணையாக ஒரு கல் வைக்கப்படுகிறது. இந்த நடுத்தரமான அமைப்பையே சுமைதாங்கி என்கிறோம். இதன் மேற்பகுதி ஒரே மட்டமாக இல்லாமல் கற்களின் தன்மைக்கேட்ப மாறுபடுகிறது. சுமைகளை சுமப்பவர்கள் தலையில் அல்லது தோள்களில் சுமக்கின்றமையினால் இறக்கி வைப்பதற்குரிய மேடை அவர்களின் தலை உயரத்திற்கும் தங்களின் தோள் உயரத்திற்கும் வெவ்வேறாக இருக்க வேண்டும் என்பதற்காக இவ்வாறு அமைக்கப்பட்டுள்ளது.

இப்படியான ஒரு வரலாற்றோடு நிலைத்து நிற்கும் இந்தச் சுமைதாங்கி கற்களுக்கு மேலே சொல்லப்பட்ட பிரதான வரலாற்று கதையோடு இன்னும் சில கதைகளும் சொல்லப்படுகின்றன. அந்தவகையில்,




கர்ப்பிணி காலங்களின் போது வயிற்றுச் சுமை தாங்காமல் இறந்த பெண்ணின் நினைவாகவும் சுமை தாங்கி கற்கள் நடப்பட்டுள்ளன. வயிற்றுச் சுமை தாங்காமல் இறந்த பெண்ணின் மன ஆறுதலுக்காக மற்றவர்களின் சுமையை பகிர்ந்து கொள்ளுதல் எனும் மிக உயர்ந்த மனிதாபிமானமும் இதன் பின்னிருக்கும் நோக்கமாகும். அதேப்போல், தொலைதூர பயணங்கள் மேற்கொண்டு சுமைகளை சுமந்து கொண்டு செல்வோர் இடையிலே இறக்க நேர்ந்தால் அவரின் ஞாமகார்த்தமாகவும் சுமைதாங்கி கற்கள் நடப்பட்டுள்ளன. இந்த மூன்று கதைகளுக்கு அப்பால் நான்காவதாக குடும்பத்தில் மனைவி இறந்தால் அவரின் ஞாபகமாக கணவன் சுமைதாங்கியை நட்டு வைப்பதும், கணவன் இறந்தால் மனைவி சுமைதாங்கியை அவரின் குடும்ப உறுப்பினர்களோடு சேர்ந்து நினைவுகூர்ந்து நட்டு வைத்துள்ளனர். இந்தப் பெரும் வரலாற்று பின்புலன்களை கொண்ட சுமைதாங்கி கற்களானது தென்னிந்தியாவிலிருந்து தொழில் நிமித்தம் அழைத்து வரப்பட்ட மலையக தமிழ்ச் சமூகத்தோடு வந்தது. ஆரம்ப காலங்களில் இந்த கலை, கலாச்சார, பண்பாட்டோடு தான் இங்கு வந்துள்ளனர் என்பதை இன்றும் பல இடங்களில் நிறுத்தி நிற்கும் வரலாற்றில் பெரும் ஆவணமாக திகழும் சுமைதாங்கி கற்களின் ஆதாரங்களோடு அறிய முடியும்.

'பழைய தமிழ் இலக்கியங்களில் கல்வெட்டுகளிலும் சுமைதாங்கி கற்கள் பற்றிய குறிப்புகள் எதுவும் இல்லை எனவும் எனவே இந்த வழக்கம் விஜயநகராட்சி காலத்திலும் நாயக்கர் ஆட்சி காலத்தில் பெருகியதாக தெரிகிறது. விஜயநகர் மன்னர் ஆட்சி காலம் தொடங்கி தமிழ் மக்களின் உணவு, உடை, சடங்குகள், திருவிழாக்கள் ஆகியவற்றில் பல மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன எனவும் மகப்பேற்றில் இறந்த பெண்ணின் நினைவாக சுமைதாங்கி கற்கள் அமைக்கும் வழக்கம் அக்காலத்தில்தான் தோன்றியிருக்க வேண்டும். இதுபற்றி தமிழக பண்பாட்டு வரலாற்றில் சுமைதாங்கி கற்கள் பற்றிய குறிப்புக்கள் எவையும் இல்லை என' பேராசிரியர் தோ. பரமசிவன் குறிப்பிடுகிறார்.

வரலாற்று குறிப்புகள் எதுவும் இல்லை என்றாலும் மக்களின் அறிவுநிலை மற்றும் சாதாரண தொழில்நுட்ப அறிவோடும், தூய மனிதாபிமான சிந்தனை வெளிப்பாடுகளாக நிலைத்து நிற்கும் இந்தக் கற்களை தமிழகத்தில் இன்றும் பல இடங்களில் இருப்பதாகவும் அங்கிருந்து வந்த மலையகத் தமிழ் சமூகம் இங்கும் அந்தப் பண்பாட்டு பெருவழியை நிலைநாட்டுவதில் தவறிழைக்கவில்லை.

அந்தவகையில் இன்றும் இங்கு மட்டுமல்ல! இந்தியாவின் தமிழகத்தில் பல பகுதிகளில் இந்த சுமைதாங்கி கற்களை காணக்கூடியதாகவும் உள்ளதாம். சில எடுத்துக்காட்டுகளாக தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் ஒன்றியத்திற்கு உட்பட்ட கே.வி ஆலங்குளம் கிராமத்தில் இதுபோன்று சுமைதாங்கி கற்களை காணமுடியுமாம். அதைப்போல், கும்பகோணம் நான்குகோடு அருகில் மயிலாடுதுறை செல்லும் சாலையிலும், புதுச்சேரி மாநிலம் முத்தியால்பேட்டை என்ற ஊருக்கு போகிற வழியில் சின்ன மணிக்கூண்டு உள்ள இடத்தில் உள்ளதாகவும் இந்த சுமைதாங்கி 150 ஆண்டுகளுக்கு முன்னர் நடப்பட்டதாகவும் சொல்லப்படுகிறது.

இவ்வாறு தமிழகத்தில் காணக்கூடிய சூழல் இருக்கும் அதேவேளை இங்கும் மலையகத்தில் குறிப்பாக முன்னர் சுட்டிக்காட்டிய அதே வரலாற்று கதைகளோடும் இந்த மக்களின் வேறு சில நம்பிக்கைகள், ஐதீகங்கள்



கொண்டு இங்கும் மலையக தமிழ் சமூகம் ஆரம்ப காலங்களில் பல இடங்களில் சுமை தாங்கி கற்களை நட்டுள்ளனர். சுமைதாங்கி கற்கள் இந்த மக்களின் தனித்துவங்களில் இவர்களின் வாழ்விடங்களில் ஆத்மார்த்தமாக திருப்தி தரக்கூடிய வாழ்வியலோடு இரண்டரக் கலந்து பின்னிப்பிணைந்திருந்தமையை காணமுடிகிறது. இருநூறு வருடங்களுக்கு முன்னர் தொழில் அடிமைகளாக இங்கு அழைத்து வரப்பட்ட காலம் தொட்டு இந்த மக்களின் கலை, கலாச்சார, பண்பாடுகளும் வாழ்வியலோடும் ஒட்டி வந்த பல அழகியலிலும் ஐதீகங்களிலும் ஆழமான நம்பிக்கைகளிலும் இந்த சுமைதாங்கி கற்கள் பெரும் இடத்தை வகித்தமையை இருப்பதனை காணமுடியும்.

ஆனால், தமிழக வரலாற்று கதைகளை காட்டிலும் இங்கும் கதைகளோடு சேர்ந்து இன்னும் சில நம்பிக்கைகள் ஆரம்ப காலங்களில் காணக்கூடியதாக இருந்துள்ளது குறிப்பாக நிறைமாத கருப்பணிகள் இந்த கல்லிலே அல்லது அதன் அருகில் அமர்ந்து சென்றாள் கர்ப்பிணிகளுக்கு சுகப்பிரசவம் கிடைக்கும் என்பதும், குழந்தை பாக்கியம் இல்லாதவர்களுக்கு குழந்தை பாக்கியம் உண்டாகும் என்பதும் இங்கு



**கர்ப்பக் காலங்களின் போது வயிற்றுச் சுமை தாங்காமல் இறந்த பெண்ணின் நினைவுகளாகவும் சுமை தாங்கி கற்கள் நடப்பட்டுள்ளன. வயிற்றுச் சுமை தாங்காமல் இறந்த பெண்ணின் மன ஆறுதலுக்காக மற்றவர்களின் சுமையை பகிர்ந்து கொள்ளுதல் எனும் மிக உயர்ந்த மனிதாபிமானமும் இதன் பின்னிருக்கும் நோக்கமாகும். அதேப்போல் தொலைதூர பயணங்கள் மேற்கொண்டு சுமைகளை சுமந்து கொண்டு செல்வோர் இடையிலே இறக்க நேர்ந்தால் அவரின் ஞாமகார்த்தமாகவும் சுமை தாங்கி கற்கள் நடப்பட்டுள்ளன. குடும்பத்தில் மனைவி இறந்தால் அவரின் ஞாபகமாக கணவன் சுமை தாங்கியை நட்டு வைப்பதும், கணவன் இறந்தால் மனைவி சுமைதாங்கியை அவரின் குடும்ப உறுப்பினர்களோடு சேர்ந்து நினைவு கூர்ந்து நட்டு வைத்துள்ளனர்.**

காணப்பட்ட அந்தக் கதைகளோடு சேர்ந்து இவையும் வழக்கில் இருந்த நம்பிக்கைகளாகும்.

இப்படியான பெரும் பண்பாட்டையும் வரலாற்றையும் கொண்ட சுமைதாங்கி கற்கள் மலையகமெங்கும் பல இடங்களில் அன்று நடப்பட்டுள்ளது என்பதும் இன்று அவற்றில் பல கால ஓட்டத்தில் பல காரணங்களினால் தடயங்களே இல்லாமல் போயுள்ளன. அந்தவகையில் மலையகத்தில் இன்று நிலத்தில் இருக்கும் பல சுமை தாங்கி கற்கள் தனக்கென்று ஒரு வரலாற்று கதைகளைக் கொண்டு கவனிப்பாரற்று ஆங்காங்கே இருப்பதை உறுதிப்படுத்த முடியும். அதுதொடர்பாக கவனம் செலுத்த வேண்டிய தேவைப்பாடும் இளைய சமுதாயத்தினருக்கு இன்று உண்டு என்பதை மேலே வாசித்ததன் அடிப்படையில் புரிந்து கொள்ள முடியும் என நம்புகிறேன்.

இன்று மலையகத்தில் நிலைத்து நிற்கும் சுமைதாங்கி கற்கள் மீது இங்கே நம் பார்வையை செலுத்துவது மிக முக்கியமானது. அவை முறையே,

- ஹய்பொரஸ்ட் சரணவள்ளி தோட்டம்
- அப்புதலை தங்கமலை தோட்டம் (1973.11.17)
- வடக்கு பூண்டுலோயா தோட்டம் (1946)

- டன்சினன் மத்திய பிரிவு தோட்டம் (இரண்டு கற்கள்)
- பொகவந்தலாக கொட்டியாகலை மத்திய பிரிவு தோட்டம்
- நோட்டன் 50 ஏக்கர் மிபோர்ட் டிவிஷன்
- கிளவர்டன் தோட்டம்
- இராணிவத்தை தோட்டத்தில் இரண்டு கற்கள். அதில் ஒன்று 1918 இல் நடப்பட்டது. மற்றொன்று 1952.04 மாதம் திகதி அழித்துவிட்டது.
- டயகம வெஸ்ட் தோட்டம்
- டயகம ஈஸ்ட் தோட்டம்
- அக்கரபத்தனை பெல்மொரல் தோட்டம் (1955.09.12)
- கண்டி பன்வல அழகொல தோட்டம்
- மீனாட்சி தோட்டம்
- தலபத்தின தோட்டம்
- குயின்ஸ்பெரி தோட்டம்
- கிரேட்வெஸ்டன் தோட்டம்
- வட்டவளை லொனக் தோட்டம்
- மெரயா உவாகலை தோட்டம் (பிச்சாய் என்பவருக்காக - 1958.03.02 இல்)

என என் கால்கள் சொல்லாத மலைகளில் இன்னும் பல பகுதிகளில் இன்றும் உயிர் நட்புடன் நிலைத்திருக்கும் இவைகளுக்கு வெவ்வேறு கதைகள் காணப்படுவதை அறிந்து கொள்ள முடியும். அதேப்போல், நடப்படுகின்ற அனைத்து கற்களிலும் யாரால் எந்த ஆண்டு நடப்பட்டது என்பதும் குறிப்பிடப்பட்டிருப்பது மிகப் பிரதான அம்சங்கள் ஆகும். ஆனால், துர்பாக்கிய நிலை கால ஓட்டத்தில் இவைகளில் பல தேய்ந்து எழுத்துகள் மறைந்த நிலையில் இருப்பதையும் காண முடிகிறது. இவைகளில் மேலே குறிப்பிட்ட தோட்டங்களில் பிரதானமாக வந்த கதைகளின்படி நடை பயணங்கள் ஒரு ஊரிலிருந்து மற்றொரு ஊருக்கு சுமைகளை சுமந்து செல்லும்போது இல்லையேல் தங்கள் தேவைகளுக்காக சுமந்து வரும் சுமைகளை யாருடைய உதவியும் இல்லாமல் இறக்கி வைத்துவிட்டு ஓய்வெடுத்து விட்டு பின்பு சுமைகளைக் கொண்டு பயணங்களை தொடர்வதற்காக நடப்பட்டுள்ளன. குறிப்பாக டான்சின் மத்திய பிரிவு, டயகம் ஈஸ்ட், சரணவள்ளி தோட்டம், ராணிவத்தை தோட்டம் போன்ற தோட்டங்களில் உள்ள கற்கள் இந்த வரலாற்று பின்புலத்தோடு நடப்பட்டுள்ளன.

இன்னும் சிலகற்கள் மருத்துவ வசதி விருத்தியடையாக அந்த நாள்களில் பிரசவத்தின் போது அல்லது கர்ப்பிணி காலங்களில் தாயும் சேயும் வேதனையோடு மரணித்த தாய்மார்களின் ஞாபகங்களாக சுமை தாங்கிகள் நடப்பட்டுள்ளன. டான்சினன் மத்திய பிரிவு தோட்டத்தில் ஆறுமுகம் ஆத்தா என்பவருக்காகவும், (மெரயா உவாகலை தோட்டத்தில் உள்ள கல்.) அதேப்போல், அந்தக் காலங்களில் தொழிலின் போது அல்லது பயணங்களின் போது இறந்த தன்னுடைய மனைவியின் ஞாபகார்த்தமாக கணவன்மார்கள் அவர்களின் நினைவு கூர்ந்து மக்கள் தங்கள் சுமைகளை இறக்கி வைப்பதன் ஊடாக இறந்தவர்கள் ஏதோ ஒரு வழியில் திருப்தி அடைவார்கள் என்ற நம்பிக்கையில் நடப்பட்டுள்ளன. வடக்கு பூண்டுலோயா தோட்டத்தில் ஆறுமுகம் மனைவி வாணி என்பவருக்காகவும், ஹப்புத்தலை தங்கமலை தோட்டத்தில் முத்தையா கே.பி.யின் மனைவி பார்வதி என்பவருக்காகவும், ராணிவத்தை தோட்டத்தில் செல்லம்மாள் என்பவருக்கு சி.சின்னசாமி குடும்பமும் டயகம் வெஸ்ட் அதேக்கதைகளோடு இவை நடப்பட்டுள்ளன.





இப்படி கதைகள் கொண்டிருந்தாலும் கூட டயகம ஈஸ்டில் ஆரம்பகாலங்களில் தோட்டத் தலைவராக செய்யப்பட்ட வேம்பன் என்பவர் ஆரம்ப காலங்களில் அங்கிருந்த கல் இறந்தவர்களை சுமந்து வரும் வேளையில் இறுதி சடங்குகளுக்காக உடல்களை அதன் மேல் வைத்து தங்களின் சடங்குகளை செய்ததாகவும் குறிப்பிட்டார் என்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும். மேலும் ஆரம்ப காலங்களில் சுமைதாங்கி கற்கள் நடப்பட்ட அதேவேளை அதற்கு அருகாமையில் ஆல மரங்களும் நடப்பட்டன என்பதும் குறிப்பிடத்தக்க அம்சம் ஒருபுறம் இருக்க இம்மக்களின் உயர்ந்த மனிதாபிமானத்தையும் சுட்டிக்காட்டுகிறது. அதேவேளை ஆரம்ப காலங்களில் நடப்பட்ட சுமைதாங்கிகள் பாதைகளுக்கு அண்மையில் குறிப்பாக மூன்று பாதைகள் பிரியும் சந்தி இரண்டு பாதைகள் தெரியும் சந்தி அமைக்கப்பட்டுள்ளன எனினும் பொதுவாக இளைப்பாறுவதற்காக வேறு வசதிகளுடன் சேர்ந்து இதை அமைக்கப்பட்டுள்ளன. குறிப்பாக நீர் அருந்துவதற்காகவும் கை கால்கள் கழுவி கொள்வதற்காகவும் குளங்கள், கிணறுகள், நீரோடைகளுக்கு அண்மையில் அதேப்போல் நிழல் தரும் மரங்களுக்கு அண்மையில் இவை பெரும்பாலும் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் இந்த சுமைதாங்கிகள் அன்றைய காலங்களில் ஓரளவு பொருள் வசதியுடைய குடும்பத்தினர் இவற்றை நிறுவியுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்க அம்சமாகும். இவற்றில் இன்று மேலே குறிப்பிட்ட சுமைதாங்கிகள் சிலவற்றில் இரண்டு காற்கள் மட்டுமே இருப்பதை காணலாம்.

ஆரம்ப காலங்களில் இந்த மக்களோடு பின்னிப்பிணைத்திருந்து இந்த் கற்களை பாதுகாக்கவோ அல்லது அடையாளமாகவோ இருந்த பண்பாட்டு அடையாளத்தை பேச மறந்து விட்டோம் என்பது ஒரு புறம் இருக்க பல சுமைதாங்கிகள் இன்றைய இளைஞர்களால் உடைக்கப்பட்டும் தூக்கி எறியப்பட்டும் ஒரு சில இடங்களில் சுமைதாங்கிகள் இருந்ததற்கான அடையாளங்களே இல்லாமல் அவை மாற்று அடையாளங்களாக பாதைகளில் பெயர் பலகைகளாக மாறி நிற்கும் அவலமும் இங்குள்ளது. அதைப்போல் வசதிகள் நிறைந்த இன்றைய காலகட்டத்தில் சுமைதாங்கி கற்களின் தேவைகள் இல்லை என்றாலும் கூட காலமாற்றத்தில் காணாமல் போன நம் அடையாளங்களில் சுமைதாங்கிகளை பிறர் பொருளுக்கு ஆசைப்பட தயங்காத இந்தக் காலத்தில் இந்தக் கற்கள் கூட திருடிச் செல்லும் அலவமும் இங்குள்ளது. மேலும் பேணி பாதுகாக்கப்பட வேண்டிய இந்த அறிய அடையாளங்கள் தற்காலத்தில் பெருவாரியான இளைஞர் சமுதாயத்திற்கு தெரியவில்லை என்பதும் மன வருத்தமே. மலையக இருநூறைப் பேசிக் கொண்டிருக்கும் நாம் முடிந்த மட்டில் கட்டுரையின் ஆரம்பத்தில் குறிப்பிட்டதைப் போல இந்த மக்களின் கலை, கலாச்சார, பண்பாட்டு அடையாளங்களை மீளாய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டிய கடமையும் உண்டு என்பதை மறந்துவிட வேண்டாம்.

அதேப்போல், நான் குறிப்பிட்டுள்ள கற்கள் மட்டும்தான் இங்கு இருக்கும் சுமைதாங்கி கற்களா என்று கேட்டால் நிச்சயம் இல்லை! இன்னும் என் கால்கள் செல்லாத மலைகளில் சுமைதாங்கி கற்கள் உயிர்ப்புடன் இருக்கக்கூடும். சிலவேளை நான் அறிந்திருக்காமல் இருந்திருக்கலாம். ஆனால், ஒன்றே ஒன்று தான், இவை நம் வரலாற்றில் பேணி பாதுகாக்கப்பட வேண்டிய ஆவணம் என்பதை நினைவில் கொள்வோம்.

காலமாற்றதிற்கேற்ப சமூகத்திலும் மாறுதல்கள் ஏற்பட்டுக்கொண்டுதான் இருக்கின்றன. அதை தடுக்கயியலாது. ஆனால், இங்கே நம பழம்பெருமையினை புரிந்துகொள்ளவும் இம்மக்களின் வாழ்க்கை நிலையில் இதுபோன்ற பண்பாட்டு அம்சங்களை பேணிப் பாதுகாப்பது பிரதான தேவையாக காணப்படுகிறது. மலையக மக்களின் பெரும் கலை கலாச்சார பண்பாட்டு அம்சங்கள் மறைந்து கொண்டிருக்கும் இந்தக் காலகட்டத்தில் அந்தக் கலை கலாச்சாரங்களை பேணி காத்து அதனை இளம் தலைமுறைக்கு சொல்லவேண்டியதும் கடத்த வேண்டியதும் நம் எல்லோருடைய தலையாய கடமையாகும் என்பதை மறந்து விட வேண்டாம்.



# மருத்துவமே நோயில்...

A.R.ரொஹான்
விந்துலை

ஒரு சமூகத்தின் வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கும் இன்றியமையாத காரணிகளாக கல்வியும் மருத்துவமும் கருதப்படுகின்றன. இதனால்தான் கல்வியும் மருத்துவமும் சமூகத்தின் இரு கண்கள் என போற்றப்படுகின்றன. தற்போதைய சூழ்நிலையில் எமது நாட்டைப் பொறுத்தவரை இரு கண்களின் பார்வையும் மங்களாகி குருடாகி கொண்டு வருகின்றனவோ எனும் வினா பெரும்பாலான இலங்கையர் மனதில் எழும்பி நிற்பதை காண முடிகின்றது. அதிலும் குறிப்பாக மருத்துவத் துறையின் மீது மக்களின் நம்பிக்கை குறைந்து கொண்டு செல்வதற்கு ஏதுவான பல சம்பவங்கள் தொடர்ந்து நடந்து வருகின்றன. இவை வெறும் சம்பவங்களா? அல்லது ஒட்டுமொத்த மருத்துவத் துறையின் சரிவை காட்டுகின்றதா? என ஆராய்வதோடு இதற்கான தற்காலிக, நிரந்தர தீர்வுகளையும் ஆராய்வதே இந்தக் கட்டுரையின் நோக்கமாகும்.

அண்மைக்காலத்தில் இலங்கையின் மருத்து வத்துறையோடு தொடர்புபட்ட சில எதிர்மறையான சம்பவங்களை நோக்குவோம். ஒரு சில மாதங்களுக்கு முன் நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் கண் சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டவர்களில் 13 பேருக்கு ஒவ்வாமை ஏற்பட்டுள்ளது. இதில் இருவருக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள் கவலைக்கிடமாக காணப்படுகின்றது. இவர்களுக்கு வலி நிவாரணியாக பாவிக்கப்பட்ட சொட்டு மருந்தில் காணப்பட்ட பற்றீரியா காரணமாகவே ஒவ்வாமை ஏற்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது. குறித்த மருந்து இலங்கையில் பதிவு செய்யப்பட்டுள்ள இந்திய நிறுவனத்தால் இறக்குமதி செய்யப்பட்டதாகும். அதைப்போலவே பொத்தபிட்டிய அலகல்ல பிரதேசத்தை சேர்ந்த சாமோதி சந்தீபணி மதுசிக்கா ஜயரத்ன எனும் யுவதி (21 வயது) வயிற்றில் ஏற்பட்ட உபாதையினால் சிகிச்சைக்காக பேராதனை போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் அவருக்கு ஊசி மூலம் மருந்து ஏற்றப்பட்ட பின்னர் அவர் துடிதுடித்து உயிரிழந்ததாக அவரது தாயார் குற்றம் சுமத்திய நிகழ்வொன்று இடம் பெற்றுள்ளது. இதேவேளை பேராதனை போதனா வைத்தியசாலையில் Bupivacaine என்ற மயக்க மருந்து வழங்கப்பட்ட நிலையில் இரண்டு பெண்கள் உயிரிழந்துள்ளனர். இன்னுமொரு சம்பவத்தில் வழங்கப்பட்ட மருந்து காரணமாக கர்ப்பிணியொருவர் உட்பட இருவர் உயிரிழந்ததாக செய்திகள் வெளியாகின. பிறிதொரு சம்பவத்தில் சிறுநீரகம் ஒன்று முழுமையாக பாதிக்கப்பட்ட நிலையில் அதனை அகற்றுவதற்காக கொழும்பு லேடி ரிஜ்வே வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த மொஹமட் பஸ்லிம் ஹம்தி எனும் மூன்று வயதுடைய சிறுவனின் இரு சிறுநீரகங்களும் அகற்றப்பட்டதனால் மரணம் அடைந்ததாக சிறுவனின் தாயாரான பாத்திமா ரிஸானா அப்துல் காதர் (வயது 41) சாட்சியமளித்துள்ளார். தனது மகனின் இடது சிறுநீரகத்தை அகற்றும் சத்திர சிகிச்சையின்போது தவறுதலாக அவரது வலது சிறுநீரகமும் அகற்றப்பட்டதாக மருத்துவர்கள் தம்மிடம்



தெரிவித்ததாகவும் சாட்சியமளித்திருக்கின்றார். குறித்த சத்திர சிகிச்சையை மேற்கொண்ட வைத்தியர் வெளிநாடு ஒன்றுக்கு சென்றுவிட்டதாக மருத்துவமனை தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்தோடு பிறப்பிலேயே சிறுவனுக்கு ஒரேயொரு சிறுநீரகம் மட்டும் இருந்ததாக மருத்துவமனை தரப்பில் கூறப்பட்ட போதிலும் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மருத்துவ அறிக்கைகளின் படி குழந்தைக்கு இரு சிறுநீரகங்கள் இருந்ததாகவும் சத்திர சிகிச்சையின் போது ஒரு சிறுநீரகத்துக்கு பதிலாக இரண்டு சிறுநீரகங்களும் அகற்றப்பட்ட பின்னர் மருத்துவமனை தரப்பில் 3 மாதங்களுக்கிடையில் சிறுநீரகம் ஒன்றைப் பொருத்தித் தருவதற்கு உடன்பட்டிருந்தாலும் அது நிறைவேற்றப்படாமலேயே சிறுவன் மரணம் அடைந்தார் என அவரின் பெற்றோர் தரப்பில் கூறப்பட்டுள்ளது. இதேவேளை பேராதனை போதனா வைத்தியசாலையில் வழங்கப்பட்ட மயக்க மருந்து காரணமாக கர்ப்பிணி உட்பட இருவர் மரணம் அடைந்துள்ளதாக செய்திகள் வெளியாகின. இதுபோன்ற ஆழத்திற்கு சான்று பகர்கின்றன

ஒட்டுமொத்த சுகாதாரத் துறையையும் உலுக்குகின்ற இந்நிலைமைகளுக்கான பின்னணியை சிறிது ஆராய்வோமாக இருந்தால் தற்போதைய நெருக்கடிகளின் பின்னணியில் பல்வேறு காரணிகள் செல்வாக்கு செலுத்தினாலும்

- மருந்து பொருட்களின் தட்டுப்பாடும் தரம் குறைந்த மருந்துகளின் இறக்குமதியும்
- விசேட வைத்திய நிபுணர்கள் உள்ளீட்ட வைத்தியத் துறையினர் தொடர்ந்தும் நாட்டை விட்டு வெளியேறுகின்றமை

போன்ற காரணிகள் முதன்மையானவையாக காணப்படுகின்றன.

வைத்தியர் சமல் சன்ஜீவ சுகாதார அமைச்சில் இடம்பெற்ற பல்வேறு ஊழல்களையும் வெளிப்படுத்தியுள்ளார். இவரின் கருத்தின்படி, மருந்து தட்டுப்பாடு தொடர்பாக பல தடவைகள் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்லவுக்கு அறிவிக்கப்பட்ட போதிலும் அவர் "மருந்து பற்றாக்குறை என எதுவும் கிடையாது. எனது அதிகாரிகள் என்னிடம் பொய் கூறுகின்றனர்" என்றே தொடர்ந்தும் கூறி வந்ததாகவும் கடைசியாக நிலைமை பாரதூரமாகியதன் பின்னரே மருந்து பற்றாக்குறை இருப்பதை ஒப்புக்கொண்டதாகவும் கூறினார். அதுப்போல் தற்போதைய சுகாதார பணிப்பாளர் நாயகம் "தரம் குறைந்த மருந்துகள் என்று எதுவும் கிடையாது" என்று கூறுகின்றதாகவும் ஆனால், உலகளவில் உற்பத்தி செய்யப்படுகின்ற மருந்துகளில் பத்தில் ஒரு பகுதி தரம் குறைந்தவை எனவும் இவை திட்டமிட்ட அடிப்படையில் உற்பத்தி செய்து விநியோகிக்கப்படுவதாகவும் இவற்றில் கிருமி நாசினிகள் பூச்சிக்கொல்லிகள் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் தரக்குறைந்த மருந்துகளை உட்கொள்வதினால் வருடாந்தம் ஒரு லட்சம் தொடங்கி 10 லட்சம் வரையிலான நோயாளிகள் மரணமடைகின்றனர் என சர்வதேச அறிக்கைகள் குறிப்பிடுவதாகவும் தெரிவித்தார்

இலங்கையின் தேசிய சுகாதார கொள்கையையோ தேசிய ஔடத கொள்கையையோ தற்போதைய அரசு கருத்திற் கொள்வதே கிடையாது என அவர் குறிப்பிடுகின்றார். அத்தோடு cefuroxime எனும் மருந்து கொள்வனவில் இடம்பெறவிருந்த 500 மில்லியன் ரூபாய் ஊழலை நாம் சுட்டிக் காட்டியதனால் ஜனாதிபதியின் தலையீட்டுடன் அந்தக் கொடுக்கல்வாங்கல் நிறுத்தப்பட்டது. 500 மில்லியன்

ரூபாய் கொடுக்கல் வாங்கல் நிறுத்தப்பட்டு மறுபுறம் 1200 மில்லியனுக்கு வேறொரு கொடுக்கல் வாங்கல் இடம்பெற்றமையை கெஹெலிய ரம்புக்வெல்ல உறுதிப்படுத்தியதாகவும் அவர் சுகாதார அமைச்சராக தொடர்வது நாட்டின் துரதிஷ்டம் எனவும் வைத்தியர் சமல் சன்ஜீவ குறிப்பிடுகின்றார்.

குறைந்த விலையில் மருந்து பொருட்களை வாங்கக்கூடிய வாய்ப்பு காணப்பட்டபோதும் பல மடங்குகள் அதிக விலை கொடுத்து வாங்குவதனூடாக ஊழல் இடம்பெற்றமையை இவர் வெளிப்படுத்தினார். இதனூடாக மருந்து பற்றாக்குறை தொடர்பான பல்வேறு பிரச்சினைகளுக்கு ஊழல் அதிகாரிகள், ஊழல் அரசியல்வாதிகள் உள்ளிட்ட ஊழல் நிர்வாகமே காரணம் என்பதை இவர் பகிரங்கமாக வெளிப் படுத்துகின்றார். எனவே, ரணில் விக்கிரமசிங்க நாட்டின் ஜனாதிபதியாக பொறுப்பேற்றதன் பின்னரும் ஏற்கனவே நடந்த ஊழல்கள் அனைத்தும் தொடர்கதையாகவே காணப்படுகின்றன என்பதோடு, ரணிலின் ஆட்சியில் குற்றவாளிகளை விடுத்து முறையீட்டாளர்களும் குற்றங்களை வெளிப்படுத்துவோருமே தண்டிக்கப் படுகின்றனர்.

இரண்டாவது காரணியான சுகாதாரத்துறை ஊழியர்கள் வெளியேற்றம் தொடர்பாக பார்ப்போமாக இருந்தால் விசேட வைத்திய நிபுணர்களின் வெளியேற்றம் முழுமையான வைத்தியத்துறையையும் பெரிதும் பாதித்துள்ளமை தெளிவாகின்றது. மயக்க மருந்து தொடர்பான இறுதி விசேட வைத்திய நிபுணரும் இலங்கையில் இருந்து வெளியேறி விட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இவ்வாறான சூழ்நிலையில் இவர்கள் ஏன் வெளிநாடுகளை நோக்கி பயணிக்கின்றார்கள் என்பதை நாம் கருத்திற் கொள்ள வேண்டும். நாட்டில் காணப்படுகின்ற அரசியல், சமூக, பொருளாதார சூழ்நிலை தொடர்பான அவநம்பிக்கையே காரணமாகும். தாமும் தமது பிள்ளைகளும் சுபீட்சமான இலங்கையில் வாழ்வதற்கான அறிகுறிகள் தென்படாத சூழலிலேயே இவர்கள் வெளியேறுகின்றார்கள் என்பதே உண்மை. ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக பொறுப்பேற்றதன் பின்னர் நெருக்கடிகள் தீர்க்கப்பட்டதாக உருவாக்கப்பட்ட மாயக்கதைகளை இவர்கள் நம்பவில்லை என்பதோடு ஒரு சுபிட்சமான இறையாண்மை மிக்க நாடொன்றை கட்டியெழுப்புவற்கான பாதையில் ரணில் விக்ரமசிங்கவோ அவர்களின் கூட்டாளிகளோ அடியெடுத்து கூட வைக்கவில்லை என்பதே பிரதான காரணம். நாட்டின் அரசியல், சமூக, பொருளாதார சூழ்நிலை உறுதியற்று காணப்படு

**விசேட வைத்திய நிபுணர்களின் வெளியேற்றம் முழுமையான வைத்தியத்துறையையும் பெரிதும் பாதித்துள்ளமை தெளிவாகின்றது. மயக்க மருந்து தொடர்பான இறுதி விசேட வைத்திய நிபுணரும் இலங்கையில் இருந்து வெளியேறி விட்டதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. இவ்வாறான சூழ்நிலையில் இவர்கள் ஏன் வெளிநாடுகளை நோக்கி பயணிக்கின்றார்கள் என்பதை நாம் கருத்திற் கொள்ள வேண்டும். நாட்டில் காணப்படுகின்ற அரசியல், சமூக, பொருளாதார சூழ்நிலை தொடர்பான அவநம்பிக்கையே காரணமாகும்.**

வதனாலேயே இவர்கள் தொடர்ந்தும் வெளிநாடுகளை தமது பிள்ளைகளின் எதிர்காலத்திற்காக தெரிவு செய்கின்றனர். இவர்களை தக்கவைத்துக் கொள்ளவோ தடுத்து நிறுத்தவோ எவ்விதமான ஆக்கபூர்வ நடவடிக்கைகளையுமே இந்த அரசாங்கம் மேற்கொள்ளவில்லை என்பதுதான் நிதர்சனம்.

இலங்கையின் மருத்துவத்துறை தற்போது எதிர்நோக்குகின்ற சவால்களுக்கான மேற்குறித்த பிரதான காரணிகள் இரண்டுமே இலங்கையின் தற்போதைய அரசியல், சமூக, பொருளாதார நெருக்கடியுடன் நெருங்கிய தொடர்பு கொண்டதாகவே காணப்படுகின்றன. எனவே, இலங்கையின் அரசியல், சமூக, பொருளாதார நெருக்கடிகளுக்கான தீர்வை காணாமல் இந்தப் பிரச்சனைகளை தீர்ப்பது என்பது இயலாத காரியமாகும். எனவே, எமக்கு முன்னால் காணப்படும் பாரிய கடமைப் பொறுப்பானது எதிர்காலத்தை கருத்திற்கொண்டு சுபீட்சமான சுயாதீனமிக்க பொருளாதாரத்தையும் சமூகத்தையும் கட்டியெழுப்பக்கூடிய அரசியல், சமூக, பொருளாதார கட்டமைப்பை நோக்கி பயணிப்பதேயாகும். எனவே, முழுமையான ஒரு சமூகப் பொருளாதார அரசியல் கட்டமைப்பினை உருவாக்குவதைப் பற்றி சிந்திப்பதோடு மட்டும் நில்லாமல் செயற்பாட்டு ரீதியான பங்களிப்பையும் வரலாறு வேண்டி நிற்கின்றது.

# ஏதிலி

சகாப்தம்!
கடந்தோம் இலங்கையிலே.
இன்று
ஓர் இனமாக
தேசியம் கலந்தோம்
இலங்கையிலே...

தேயிலைக்கு அடியிலே
தேங்காயும் மாசியும்
கிடக்கிறதென,
பெரிய கங்காணிகளின்
சூட்சுமத்திற்கு சூறையாடப்பட்ட
ஏதிலிகளாய் நாடுகடந்தோம்
அண்டைய தேசத்தின்
தென்னகத்திலிருந்து...

காடுகளையும் மேடுகளையும்
கழனிகளாக மாற்றினோம்.
இத்தேசப் பொருளாதாரத்தில்
பெரும் புள்ளியானோம்!

உழைக்கும் மக்களின்
உபரி உழைப்பு.
கங்காணிகள் களவாட
எத்தனித்த
எம் தேசத்தாய்களின்
கற்பு.
குழி வெட்டி
கூன் விழுந்த முதுகு.
இவை ஏழ்மையின்
அடையாளங்களல்ல!

வரலாற்றால் வரையமுடியாத
வடுக்களின் காவியங்கள்.

சுவையான தேநீரால்
உலகை உபசரித்தோம்.
பஞ்சம் பிழைக்க வந்த சீமையிலே,
தப்பு இசைத்தோம்!
காமன் நாட்டினோம்!
கலைகளை ஊட்டி வளர்த்தோம்!

உதிரம் உறிஞ்சும் அட்டைகளுக்கு
உணவானோம்!
ஆயிரம் ரூபா ஊதியத்திற்காக,
ஓராயிரம் அடக்குமுறைகளுக்கு
அடிப்பணிந்தோம்!

நாடற்றவன்
வீடற்றவன் என்ற
விலாசங்களால் விலங்கிடப்பட்டோம்!
இந்திய வம்சாவளி
இலங்கைத் தமிழராய்
பின்வந்த
பிறப்புச்சான்றிதழ்களில்
பிரசுரிக்கப்பட்டோம்!

பிரபஞ்ச பெருவெளியில்
பெருங்கனவுகளை சுமந்தபடி,
சபிக்கப்பட்ட சமூகத்திலிருந்து
ஏமாற்றங்களை சுமந்தபடி,
ஏதிலிகளாக
புறப்படுகின்றோம்!
ஒருநாள்
எம் இனமும் ஜெயிக்கும்
என்ற பெருநம்பிக்கையில்..

சண்முகம் சிவகுமார்

# ரணில் பிணைமுறி கொள்ளையில் இருந்து EPF கொள்ளை வரை

எமது நாட்டின் வரலாறு ஏகாதிபத்தியவாதிகளின் கீழ் 450 வருடங்களுக்கு கிட்டிய காலமாக ஏகாதிபத்தியவாதிகளின் கீழேயே எழுதப்பட்டிருக்கிறது. இந்தக் காலப் பகுதிக்குள் எமது நாட்டில் இருந்த வளங்கள் பல்வேறு விதங்களில் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர்களால் கொள்ளையடித்துச் செல்லப்பட்டதென்பதை நாமனைவரும் அறிவோம். அவர்கள் எமது நாட்டைக் கொள்ளையடித்ததால் எமது நாடு வங்குரோத்து நிலையை அடையவில்லை. எனினும் தற்போது எமது நாடு வங்குரோத்து அடைந்துவிட்டதாக உத்தியோகபூர்வமாக உலகிற்கு அறிவிக்கப்பட்டுள்ள ஒரு நாடாகும். 1948 இல் ஏகாதிபத்தியவாதிகளிடமிருந்து சுதந்திரமடைந்து 75 வருடங்கள் கழிந்தபின்னரே இது இடம்பெற்றுள்ளது. நாட்டின் பொதுமக்களின் வாக்குகளால் பொதுமக்களின் விருப்பத்தின்பேரில் தெரிவு செய்யப்படுகின்ற ஆட்சியாளர்களின் கீழேயாகும். எமது வாக்குகளால் தெரிவு செய்யப்படுகின்ற ஆட்சியாளர்களின் கீழ் எமது நாடு எவ்வாறு வங்குரோத்து நிலையடைந்தது?



இது பற்றி சுருக்கமாக ஆராய்வது முக்கியமாகும். பொதுவில் எடுத்துக்கொண்டால் 2022 ஆம் ஆண்டின்

“

**எமது நாட்டில் இருந்த வளங்கள் பல்வேறு விதங்களில் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர்களால் கொள்ளையடித்துச் செல்லப்பட்டதென்பதை நாமனைவரும் அறிவோம். அவர்கள் எமது நாட்டைக் கொள்ளையடித்ததால் எமது நாடு வங்குரோத்து நிலையை அடையவில்லை.**

**பிரியதர்ஷன தயாரத்ன**

**தமிழில் : மகேந்திரன் கிறிஸ்டோபர்**

இறுதியளவில் இலங்கையின் ஒட்டுமொத்த கடன் சுமை 27.492 ரில்லியன் ரூபாவாகும். ஒரு ரில்லியன் என்பது ஒரு இலட்சம் கோடியாகும். அதற்கிணங்க மொத்த கடன் 27,49,200 கோடி ரூபாவாகும். எம்மில் எவரும் ஏதேனுமொன்றுக்கான கடன்பெற்றால் அந்தக் கடனுக்கு ஏற்ற அளவிலான சொத்துக்கள் இருக்கவேண்டும். ஒரு கோடி ரூபா கடன்பெற்று காணியொன்றை வாங்கினால் அந்தக் காணி இருக்கும். வீடொன்றை அமைத்தால் அந்த பெறுமதிகொண்ட வீடு இருக்கும். ஒரு கார் வாங்கினால் அந்தக் கார் இருக்கும். ஆனால் எமது அரசாங்கம் பெற்றுள்ள கடன் ஏறக்குறைய 27.492 ரில்லியன் ரூபாவாகும். அதற்கேற்ற சொத்துக்கள் கிடையாது. அரச படுகடன் 27.492 ரில்லியன் ரூபாவாக அமைகையில் 4.804 ரில்லியன் ரூபா சொத்துக்கள் மாத்திரமே இருக்கின்றது. நாடு எவ்வாறு வங்குரோத்து அடைந்தது என்பதை கண்டறிகையில் 27.492 ரில்லியன் ரூபா கடன்பெற்று சொத்துக்கள் 4.804 ரில்லியனாக மாறியது எவ்வாறு எனும் கேள்வி எழுகின்றது.

முதலாவது கேள்விக்கு பதில் தேடிச்செல்கையில் இரண்டாவதும் ஒரு கோள்வியாகும். இரண்டாவது கேள்விக்கு பதில் கண்டறிவதை சரிவர செய்துகொள்வோம். அரசாங்கங்கள் கடன் பெறுவது நாட்டை அபிவிருத்திசெய்யவே என வரலாற்றுக்காலம் பூராவிலும் கூறியுள்ளது. 2015 இல் அதிகாரத்திற்கு வந்த மைத்திரி – ரணில் குடும்ப ஆட்சியின் கீழும் கடன் பெறுவதை வெற்றிகரமாக பிள்ளையார் சுழி இட்டார்கள். அதேவேளையில் 2015 பெப்ரவரி 27 ஆந் திகதி அண்ணளவாக 100கோடி ரூபா கடன்பெறுவதற்கான பிணைமுறிகள் வழங்கப்பட்டன. முதலில் 100கோடி ரூபா கடன்பெறுவதாக அறிவித்து அண்ணளவாக 1000 கோடி வரை இறுதித் தருணத்தில் கடன் அளவினை பத்து மடங்குகளால் அதிகரித்தார்கள்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் கீழ் மத்திய வங்கியை வைத்துக்கொண்டு (நிதி அமைச்சிற்கு கொடுக்காமல்) ரணில் விக்கிரமசிங்கவின் உற்ற நண்பனான சிங்கப்பூர் பிரசை அர்ஜுன் மகேந்திரனை வரவழைப்பித்து மத்திய வங்கி ஆளுனர் பதவியை வழங்கிய பின்னரே இந்த அதிகரித்தல் மேற்கொள்ளப்பட்டது. அத்தருணமாகும் போது ரணில் விக்கிரமசிங்கவின் ஐக்கிய தேசியக் கட்சிக்கு பாராளுமன்றத்தில் 42 உறுப்பினர் பதவிகள் மாத்திரமே காணப்பட்டதென்பதும் மகிந்த ராஜபக்ஷ தலைமைத்துவம் அளித்த (அன்று) ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிற்கு 140 இற்கு மேற்பட்ட

> **ஏதேனுமொன்றுக்கான கடன்பெற்றால் அந்தக் கடனுக்கு ஏற்ற அளவிலான சொத்துக்கள் இருக்கவேண்டும். ஒரு கோடி ரூபா கடன்பெற்று காணியொன்றை வாங்கினால் அந்தக் காணி இருக்கும். வீடொன்றை அமைத்தால் அந்த பெறுமதிகொண்ட வீடு இருக்கும். ஒரு கார் வாங்கினால் அந்தக் கார் இருக்கும். ஆனால் எமது அரசாங்கம் பெற்றுள்ள கடன் ஏறக்குறைய 27.492 ரில்லியன் ரூபாவாகும். அதற்கேற்ற சொத்துக்கள் கிடையாது. அரச படுகடன் 27.492 ரில்லியன் ரூபாவாக அமைகையில் 4.804 ரில்லியன் ரூபா சொத்துக்கள் மாத்திரமே இருக்கின்றது.**

உறுப்பினர் பதவிகள் இருந்ததென்பதையும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்.

இவ்விதமாக இருக்கையில் 'பிணைமுறி' மூலமாக 100 கோடி ரூபா கடன் பெறுவதாகக்கூறி இறுதி நொடியில் 1000 கோடி ரூபா வரை அதிகரித்து கபடத்தனமான மத்திய வங்கி மாபெரும் கொள்ளை அடிக்கப்பட்டது.

முப்பது வருடங்களில் பருவமுதிர்வுக்காக எடுத்த கடன் ஊடாகவும் மறைமுகமாக நிதிச் சந்தைக்கு ஏற்பட்ட தாக்கம் மூலமாகவும் அரசாங்கத்திற்கு மொத்தமாக 1400 கோடி ரூபாவுக்கு கிட்டிய நட்டம் நேர்ந்துள்ளதாக கணிப்பிடப்பட்டுள்ளது. கடந்த 75 வருடங்கள் பூராவிலும் இவ்விதமாக கடன் பெற்றுக் கொள்ளும்போது கொள்ளையடித்திருப்பதைப்போலவே பெற்ற கடனை ஈடுபடுத்துகையில் அவ்விதமாக செலவுசெய்ய வேண்டிய இடத்திற்கு ஆறு அல்லது ஏழு மடங்கினை செலவு செய்ததன் மூலமாகவும் கொள்ளையடித்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எமது நாட்டுக்கு எந்த முகத்தைக் காட்டிக்கொண்டு ஏகாதிபதியவாதிகள் வருகைதந்தாலும் ஆக்கிரமி



> **நாட்டை அபிவிருத்தி செய்வதற்காகவே நாட்டின் ஆட்சியாளர்கள் எமது வாக்குகளை வேண்டிவந்தார்கள். உன்னதமான நோக்கங்களை வெளிக்காட்டி வெண்ணிற உடை தரித்து புத்தர் நிலையடைகின்ற போதிசத்துவர் போன்றே வந்தார்கள். அவ்விதமாக வந்து எமது வாக்குகளைப் பெற்று ஆட்சியாளராகிய பின்னர் எமது பணத்தைக் கொள்ளையடித்த விதத்தை விளங்கிக்கொள்ளக்கூடிய மிகச்சிறந்த உதாரணம் இந்த மத்திய வங்கி பிணைமுறிக் கொள்ளையாகும். இவ்வாறான செயற்பாடுகள் காரணமாகவே 2022 ஆம் ஆண்டின் இறுதியளவில் 27.492 ரில்லியன் கடன் சுமை மக்கள்மீது சுமத்தப்பட்டு 4.821 ரில்லியன் ரூபா சொத்துக்கள் எஞ்சியது.**

ப்பாளர்கள் என்றே ஏற்றுக்கொள்ளப்பட்டார்கள். நாட்டை அபிவிருத்தி செய்வதற்காகவே நாட்டின் ஆட்சியாளர்கள் எமது வாக்குகளை வேண்டிவந்தார்கள். உன்னதமான நோக்கங்களை வெளிக்காட்டி வெண்ணிற உடை தரித்து புத்தர் நிலையடைகின்ற போதிசத்துவர் போன்றே வந்தார்கள். அவ்விதமாக வந்து எமது வாக்குகளைப் பெற்று ஆட்சியாளராகிய பின்னர் எமது பணத்தைக் கொள்ளையடித்த விதத்தை விளங்கிக்கொள்ளக்கூடிய மிகச்சிறந்த உதாரணம் இந்த மத்திய வங்கி பிணைமுறிக் கொள்ளையாகும். இவ்வாறான செயற்பாடுகள் காரணமாகவே 2022 ஆம் ஆண்டின் இறுதியளவில் 27.492 ரில்லியன் கடன் சுமை மக்கள்மீது சுமத்தப்பட்டு 4.821 ரில்லியன் ரூபா சொத்துக்கள் எஞ்சியது.

மத்திய வங்கிக் கொள்ளையை மேற்கொண்ட ரணில் விக்கிரமசிங்க தற்போது வங்குரோத்து நாட்டை காப்பாற்றிக்கொள்ளும் திட்டமிடலாளராக வேடந்தரித்து வந்துள்ளார். அன்று மத்திய வங்கி பிணைமுறி கொள்ளை மேற்கொள்ளப்பட்ட வேளையில் மகிந்த ராஜபக்ஷவின் கீழ் பாராளுமன்றத்தில் 140 இற்கு மேற்பட்டவர்கள் ரணில் விக்கிரமசிங்கவை பாதுகாத்தார்கள் என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள். இன்று ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதி பதவிக்கு நியமித்துள்ளவர்களும் மகிந்த ராஜபக்ஷவின் தலைமையின்கீழ் 134 மொட்டுப் பாராளுமன்ற உறுப்பினர்களே என்பதையும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள்.

அன்று மகிந்த ராஜபக்ஷவின் தலைமையின்கீழ் வெற்றிலை உறுப்பினர்களின் பாதுகாப்பின்கீழ் பிணைமுறி கொள்ளைக்காரன் ரணில் விக்கிரமசிங்க பாதுகாக்கப்பட்டார். இன்று மகிந்த ராஜபக்ஷவின் தலைமையில் கீழேயே மொட்டு உறுப்பினர்களின் ஜனாதிபதி நாட்டை வங்குரோத்து நிலையிலிருந்து மீட்டெடுப்பதாகக் கூறிக்கொண்டு EPF கொள்ளைக்கு தயாராகிவிட்டார்கள். சரியாகக் கூறுவதாயின் EPF மாத்திரமன்றி ETF மற்றும் ஏனைய ஓய்வூதிய நிதியங்களையும் கொள்ளையடிப்பதற்காகவே. அது உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு எனும் நாமத்தாலேயே மேற்கொள்ளப்படுகின்றது. நாட்டைக் கட்டியெழுப்புதல் மற்றும் எதிர்கால தலைமுறையினரைக் காப்பாற்றிக் விதித்துள்ள இரண்டு நிபந்தனைகளாகும்.

இப்போது விற்பனை செய்கின்ற செயற்பாங்கு பல்வேறு மட்டங்களில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அதே வேகத்தில் கடனை மறுசீரமைப்பிக்கின்ற செயற்பாங்கினை மேற்கொள்ள முடியாதுள்ளது. அதற்கான காரணம் கடன் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு என்றவகையில் நிலவுவதும் அந்த கடன்கொடுனர்களுடன் கொடுக்கல் வாங்கல்களை தெரிவுசெய்துகொள்ளவேண்டி நேர்ந்துள்மையாகும். "கடன் மறுசீரமைப்பு" எனக் கூறினாலும் எத்தகைய செயற்பாட்டின் மூலமாகவும் மேற்கொள்ளப்படுவது கடன் வெட்டிவிடுதலாகும். முதலில் வெளிநாட்டுக்



கொள்ளல் எனும் நாமத்தாலேயே.

இந்த இடத்திலிருந்து அந்த செயற்பாங்கு மேற்கொள்ளப்படுகின்ற விதத்தை விளங்கிக்கொள்வோம். நாட்டைக் கட்டியெழுப்புகின்ற நாமத்தால் ரணில் மற்றும் மொட்டு கூட்டு ஆட்சியானது தற்போது எல்லாவற்றையும் சர்வதேச நாணய நிதியத்திற்கு (IMF) ஒப்படைத்துவிட்டது. அரசாங்க படுகடன் மறுசீரமைத்தல் மற்றும் நாட்டின் வளங்களை வெளிநாட்டவர்களுக்கு விற்பனை செய்தல் ஆகியவையே அவர்கள் கடன்களை வெட்டிவிடுவதாகவே நாட்டுக்கு கூறினார்கள். அதற்கெதிராக ஒரு வெளிநாட்டுக் கடன்கொடுனர் தரப்பு அமெரிக்க நீதிமன்றமொன்றில் இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்தது. அதன் பின்னர் வெளிநாட்டுக் கடன் கொடுனர்கள் அனைவரும் முதலில் உள்நாட்டுக் கடன்கள் வெட்டிவிடப்பட வேண்டுமென்றே ஏகோபித்த குரலில் கூறினார்கள். அவர்கள் அவ்வாறு கூறா விட்டாலும் முதலில் உள்நாட்டுக் கடன் வெட்டிவிடப்பட

**ஊழியர் சேமலாப நிதியத்தின் மொத்தப் பெறுமதி 3459900 கோடி ரூபாவாகும். இந்த பணத்தொகையில் 96.9% அதாவது 335264 கோடி ரூபா அரசாங்கத்திற்கு கடனாக வழங்கப்பட்டுள்ளது. அது திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகள் ஊடகவேயாகும். இப்போது ரணில் மொட்டு கூட்டு ஆட்சி இதோ இந்த EPF உள்ளிட்ட ஓய்வூதிய நிதியங்களிலிருந்து பெறப்பட்ட கடனை வெட்டிவிட பல்வேறு தந்திரோபாயங்களை கையாண்டு வருகிறார்கள். முதலில் இந்தக் கடனுக்காக அரசாங்கம் செலுத்துகின்ற அதிகபட்ச வட்டியை 9% இற்கு மட்டுப்படுத்துவதாகும். 2038 வரை இந்த வட்டியே கிடைப்பதோடு அது அங்கத்தவர்களின் கணக்கிற்கு கிடைக்கின்ற வட்டியுமல்ல. நிதியத்திற்கு செலுத்தப்படுகின்ற வட்டியாகும். அதிலிருந்து நிதியத்தின் நிருவாகச் செலவினங்களை உள்ளிட்ட வேறு செலவுகளைக் கழித்தபின்னர் அங்கத்தவரின் கணக்கிற்கு 7% இற்கு குறைந்த வட்டியே கிடைக்கும்.**



வேண்டுமென்பதை அறிந்திருந்தும் மக்களை இறுதிக்கட்டம் வரை ஏமாற்றிக் கொண்டிருந்தார்கள்.

இறுதியில் கடன் மறுசீரமைப்பு எனும் நாமத்தால் கடன் வெட்டிவிடப்படுதலுக்கு வழிசமைக்கப்பட்டது. உள்நாட்டுக் கடன்கொடுர்களாக அமைவது மத்திய வங்கி, வணிக வங்கிகள், ஓய்வூதிய நிதியங்கள் மற்றும் பிரத்தியேக கடன் வழங்குனர்களாவர். இவை அனைத்திற்கும் மத்தியில் முதன்முதலில் கடன்வெட்டிவிடல் எனும் தூக்குமேடைக்கு கழுத்தைக் கொடுப்பது EPF, ETF ஓய்வூதிய நிதியங்களே என்பதை இந்தக் கட்டுரையாளர் தொடக்கத்தில் இருந்தே எதிர்வுகூறி இருந்தார். வணிக வங்கிகள், மத்திய வங்கி மற்றும் பிரத்தியேக கடன் வழங்குனர்களை பாதுகாத்து முதலில் EPF உள்ளிட்ட ஓய்வூதிய நிதியங்களில் அரசாங்கம் கைவைத்தது. வெற்றிலை சின்னத்தில் மகிந்த ராஜபக்ஷவின் உறுப்பினர்கள் பிணைமுறி கொள்ளையிலிருந்து ரணில் விக்கிரமசிங்கவை பாதுகாத்தாலும் இன்று ரணில் விக்கிரமசிங்கவை பாதுகாத்திட மகிந்த ராஜபக்ஷவின் தலைமையிலான 122 மொட்டு உறுப்பினர்கள் EPF ஐ வெட்டிவிட தமது வாக்குகளை அளித்தார்கள். அது ரணில் விக்கிரமசிங்க மற்றும் ராஜபக்ஷ குடும்பத்தை உள்ளிட்ட பிரபுக்களை காப்பாற்றிக் கொள்வதற்காகும். மக்களின் வாக்குகளால் தெரிவுசெய்யப்பட்டு அனுப்பப்பட்ட உறுப்பினர்களின் செயற்பாடுகள் இவ்வாறானதாகும்.

ஊழியர் சேமலாப நிதியத்தின் மொத்தப் பெறுமதி 3459900 கோடி ரூபாவாகும். இந்த பணத்தொகையில் 96.9% அதாவது 335264 கோடி ரூபா அரசாங்கத்திற்கு கடனாக வழங்கப்பட்டுள்ளது. அது திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகள் ஊடகவேயாகும். இப்போது ரணில் மொட்டு கூட்டு ஆட்சி இதோ இந்த EPF உள்ளிட்ட ஓய்வூதிய நிதியங்களிலிருந்து பெறப்பட்ட கடனை வெட்டிவிட பல்வேறு தந்திரோபாயங்களை கையாண்டு வருகிறார்கள். முதலில் இந்தக் கடனுக்காக அரசாங்கம் செலுத்துகின்ற அதிகபட்ச வட்டியை 9% இற்கு மட்டுப்படுத்துவதாகும். 2038 வரை இந்த வட்டியே கிடைப்பதோடு அது அங்கத்தவர்களின் கணக்கிற்கு கிடைக்கின்ற வட்டியுமல்ல. நிதியத்திற்கு செலுத்தப்படுகின்ற வட்டியாகும். அதிலிருந்து நிதியத்தின் நிருவாகச் செலவினங்களை உள்ளிட்ட வேறு செலவுகளைக் கழித்தபின்னர் அங்கத்தவரின் கணக்கிற்கு 7% இற்கு குறைந்த வட்டியே கிடைக்கும். அரசாங்கம் ஏறக்குறைய 33% வட்டிக்கு கடன் பெற்றிருக்கையில் EPF உள்ளிட்ட ஓய்வூதிய நிதியக் கடன்களுக்கு இதைப்போன்ற சிறிய



வட்டியே செலுத்தப்படுமென்பதையும் விளங்கிக்கொள்ள வேண்டியது அவசியமாகும்.

வட்டி வெட்டிவிடப்படுதல் அதன் மூலமாக மேற்கொள்ளப்பட்டிருப்பது தெளிவாகின்றது. அதற்கு மேலதிகமாக கடனைத் திருப்பிச் செலுத்துகின்ற காலம் 2038 வரை நீடிக்கப்பட்டுள்ளது. உதாரணமாக 2023 செப்டெம்பரில் 10,000 கோடி ரூபா கடன் வட்டி மீளச்செலுத்தப்பட வேண்டுமென நினைப்போம். இந்த 10,000 கோடி ரூபா செலுத்தப்படுவதை 2015 வரை இடைநிறுத்தி 2025 தொடக்கம் 2030 வரை ஐந்து வருடங்களில் 2000 கோடி ரூபா வீதம் செலுத்த நடவடிக்கை எடுப்பதாகும். இவ்விதமாக செயலாற்றுகின்ற அதேவேளையில் நிதியத்தின் 24 இலட்சம் அங்கத்தவர்களின் கணக்கு மீதிகளுக்கு இதனால் எந்தவிதமான தாக்கமும் ஏற்படமாட்டாதென மத்திய வங்கி ஆளுனர் நந்தலால் வீரசிங்க கூறியுள்ளார். ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட கபடம் நிறைந்த அரசியல்வாதிகளைப் பார்க்கிலும் மத்திய வங்கி ஆளுனரே மக்களை அதிகமாக ஏமாற்றி வருகிறார்.

அவர் தர்க்கரீதியாகவே மக்களை ஏமாற்றி வருகிறார். அங்கத்தவரின் கணக்கு மீதிக்கு எந்தவிதமான தாக்கமும் ஏற்படமாட்டாதென்பது உண்மையாகும். உதாரணமாக "P" எனும் அங்கத்தவரின் தற்போதுள்ள மீதி ரூபா 10 என நினைப்போம். அதனை வெட்டிவிடுதல் எவ்விதத்திலும் இடம்பெறமாட்டாது. எனினும் P" என்பவர் இளைப்பாறுகின்ற வயதுவரை அந்த மீதிக்கு சொச்ச வட்டியே கிடைக்கும். அதுவரையான காலப்பகுதிக்குள் பணத்தின் பெறுமதியானது சீரழிவதன் ஊடாக அவரது  கணக்கு மீதி வெறுமனே இலக்கங்களாக மாத்திரமே அமையும். மறுபுறத்தில் நிதியத்திற்கு கிடைக்கின்ற வட்டியை 9% ஆக மட்டுப்படுத்துவதன் மூலமாகவும் முன்னர் குறிப்பிட்டதைப்போல் கடன் மீளக் கிடைத்தல் 10,000 கோடி ரூபா வரை  ஒரே தடவையில் கிடைப்பதற்குப் பதிலாக 2000 கோடி ரூபா வீதம் ஐந்து வருடங்களில் பகுதிபகுதியாக கிடைப்பதனால் நிதியமும் ஆபத்திற்கு இலக்காகின்றது. நிதியத்தில் உள்ள சொத்துக்களை பிரயோகித்து பெரிய இலக்கங்கள்  காட்டப்படுகின்றனவேயோழிய உண்மையான பெறுமதி மிகவேகமாக குறைவடைந்து செல்கின்றது.

இவ்விதமாக EPF உள்ளிட்ட நிதியங்களை கொள்ளையடித்தலை அரசாங்கம் இன்றளவில் கலந்துரையாடியுள்ள முழுமையான திட்டத்தை தனிவேறாக பேசுவதில் காலடி எடுத்துவைக்க வேண்டும். ஏனெனில் மக்களுக்கு காட்டுகின்றவற்றை விட அமுலாக்கும்போது எவ்வளவு மாற்றப்படுமென்ற பாரதூரமான சந்தேகம் நிலவுகின்றதென்பதாலாகும். இந்த செயற்பாடு பற்றி அந்த நிலைமையின்கீழ் ஆராய்ந்து பார்க்கவேண்டும். எவ்வாறாயினும் ஒரு விடயம் மிகவும் தெளிவானதாகும். மத்திய வங்கியை கொள்ளையடிக்க அனைத்து ஏற்பாடுகளையும் செய்துகொடுத்த ரணில் விக்கிரமசிங்க தற்போது EPF உள்ளிட்ட ஓய்வூதிய நிதியங்களை கொள்ளையடிக்க எல்லாவற்றையும் தயார்செய்துள்ளார் என்பதாகும். அந்த நிதியங்களின் உரிமையாளர்களான ஏறக்குறைய 25 இலட்சம்  பேர் அதற்கு இடமளித்து பார்த்துக்கொண்டிருக்கப் போகிறார்களா என்பதை தீர்மானிக்கவேண்டும். நாட்டின் அபிவிருத்தியின் நாமத்தால் கடன் வாங்கிக் கொள்ளையடித்த ஆட்சியாளர்கள் இப்போது மக்களின் வாழ்க்கையுடன் நேரடியாக விளையாட தயாராகி வருகிறார்கள் என்பதை விளங்கிக்கொள்ள வேண்டியது முக்கியமானதாகும்.  இவர்கள் புரிந்துகொண்டிருப்பது பணம் பற்றிய விளையாட்டல்ல, வாழ்க்கை பற்றிய விளையாட்டாகும்.



# மந்தமடையும் பொருளாதாரமும் அதையொட்டிய போசாக்கும்

**கண்ணன் மதுஷா**

**"வறுமையே வாழ்வானதே! வாழ்க்கையே வறுமையானதே! தலைவிரித்தாடும் வறுமைக்குத்தான் விடியலும் இல்லையா? காடுகளிலும் மலைகளிலும் கரைந்து போக உழைப்புக்குத்தான் ஊதியம் இல்லையோ?"** என்ற வண்ணம் மலையக மக்களின் அழுக்குரல்கள் இன்றும் கேட்டவண்ணம்தான் இருக்கின்றன. அழகான ஊர்தான் நான் வாழும் ஊரும். ஆனால், வறுமை கோட்டின் கீழ் எம் மக்களின் வாழ்க்கை அழகின்றி திணருகின்றன.

1970 ஆம் ஆண்டுவரை இலங்கையின் பொருளாதாரம் பெருந்தோட்ட பொருளாதாரத்தையே தங்கி இருந்தது. காடு, மழை, நேரம், காலம் பாராது கடின உழைப்பின் மூலம் எம் நாட்டு பொருளாதாரத்திற்கு உரமூட்டிய முதுகெழும்புகள் மலையக மக்கள். ஆனால், பொருளாதார ரீதியில் இன்றைய 21 ஆம் நூற்றாண்டிலும் பின்தங்கி இருப்பவர்களும் இவர்கள்தான்.

எதை எவ்வாறு எந்தக் கோணத்தில் நோக்கினாலும் இன்றைய நூற்றாண்டிலும் மலையக மக்கள் என்றால் கைக்கூலிகள்தான் என்ற கண்ணோட்டம் இன்றும் மாறவில்லை. ஒருவன் வாழ்க்கையில் உயர் நிலையில் திகழ வேண்டுமெனில் அவனின் உழைப்புக்கான ஊதியம் சரியாக இருக்க வேண்டும். இங்கு உழைப்புக்கேற்ற ஊதியம் என்பதுதான் எமது சாபக்கேடாயிற்றே.

மலையகம் என்ற பார்வையில் நான் வாழும் தெனியாய பிரதேசத்திலும் பொருளாதார ரீதியில் அல்லற்படும் எத்தனை எத்தனையோ குடும்பங்கள் வாழ வழிகளும் இன்றி உதவிக்கு கரங்களுமின்றி கண்ணீர் சிந்திக்கொண்டுதான் இருக்கின்றன. இன்றைய நிலையில் ஒரு தோட்டத் தொழிலாளரின் ஒரு நாள் ஊதியம் 1000 ரூபா. ஒரு குடும்பத்தில் தாய், தந்தை உட்பட 3 பிள்ளைகள் வாழும் ஒரு குடும்பத்தில் ஒரு நாளின் தேவைக்கு 1000 ரூபாவிற்கு மேலதிகமாக செலவாகின்ற பட்சத்தில் இப்போதுதான் 1000 ரூபாவை போராடி பெற்றுக் கொண்டார்கள் கடந்த ஒருசில வருடங்களுக்கு முன். அப்படியானால் உழைப்புக்கேற்ற ஊதியம் என்பது எப்போது வழங்கப்படும் எம்மவர்களுக்கு?

பொருளாதாரம்தானே ஏனைய எல்லாவற்றிற்கும் உதவும். இங்கு பொருளாதாரமே கவலைக்கிடமான நிலையில் என்றால் ஏனையவை பற்றி சொல்ல சொல்லிலடங்கா துயரங்கள் தான் மிஞ்சி இருக்கின்றன. பலவருடங்களாக போராடிய நிலையில் காலத்தில் தாமதம் ஏற்பட்டே 1000 ரூபா சம்பள உயர்வு கிடைத்தது. ஆனால், தற்போதைய பொருட்களின் விலையுயர்வு ஒரு குடும்பத்தில் கணவன், மனைவி இருவரும் வேலை செய்தாலும் ஒரு பிள்ளைகள் கல்வி

கற்க வேண்டும். பிள்ளைகளுக்கு மூன்று நேர வேளைக்கு உணவு வழங்க வேண்டும். எனவே, ஒரு நாளைக்கு 1000 ரூபாவை பெற்று அன்றாட வாழ்க்கையை மகிழ்ச்சியாக வாழ முடியாத சூழ்நிலையில்தான் பிரதேச மக்கள் வாழ்கின்றனர்.

இவர்களின் பொருளாதார பிரச்சினை எல்லா இடங்களிலும் இவர்களை ஸ்தம்பிதம் அடைய செய்துள்ளது. இவர்கள் பொருளாதார பின்னடைவால் பல பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்க வேண்டியவர்களாக அன்றாடம் ஓடிக்கொண்டு இருக்கின்றனர்.

தற்காலத்தில் எல்லா சமூகத்தினரிடையேயும் போசாக்கின்மை குறைபாடு காணப்படுகின்றது. தற்போதைய பொருளாதார நெருக்கடியால் தான் நாட்டில் போசாக்கு பிரச்சினை ஏற்படுகின்றதா என ஆராய்ந்தால் இல்லை என்ற விடையே ஆய்வில் அறிய முடியும். மலையகத்தில் இத்தனை வருடகாலமும் உழைப்புக்கேற்ற ஊதியம் இன்றி வாழ்க்கை நடத்தும் எத்தனையோ பெற்றோர்களின் பிள்ளைகள் மந்த போசனையினால் காலம் காலமாக பாதிக்கப்பட்டு வருகின்றனர் என்பதை இன்றைய முதலாளித்துவ அரசியல் மேடைகளில் போசாக்கின்மை பற்றி தாளம் போடும் எத்தனை அரசியல்வாதிகள் தான் அறிவார்கள்?

இன்றைய பொருளாதார நெருக்கடியில் பிள்ளைகளின் போசாக்கிற்காக ஒரு நாளைக்கு குறைந்தது ஒரு முட்டையாவது வழங்க வேண்டும் கூறுகின்றனர். ஆனால், இன்று முட்டை ஒன்றின் விலை 60 ரூபா. எனவே, ஒரு வீட்டில் மூன்று பிள்ளைகள் வளர்ந்தால் மாதமொன்றிற்கு 5400 ரூபா முட்டைக்கு மாத்திரம் செலவாகின்றது. இந்த நிலையில் பொருளாதாரத்தில் பின்தங்கிய நிலையில் இருக்கும் எம் பெற்றோர்கள் எவ்வாறு தருவர்கள். என் பிரதேசத்தில் மட்டுமல்ல மலையகத்தில் பெரும்பாலான வீடுகளில் சம்பள நாளில் மாத்திரம் முட்டை, மீன், இறைச்சி என வாங்கி வரும் எத்தனையோ வீடுகள் மலையகத்தில் இருக்கத்தான் செய்கின்றன. இவ்வாறு வறுமை கோட்டின் கீழ் வாழும் பெற்றோர்கள் எவ்வாறு பிள்ளைகளை போசாக்கின்மை குறைப்பாட்டில் இருந்து மீட்டெடுப்பார்கள்? தாய், தந்தை இருக்க பிள்ளைகள் துடித்து துடித்து சாகும் நிலைதான் இதுவோ?

இவ்வாறு போசாக்கு குறைபாட்டால் இன்றைய தலைமுறையினர் மாத்திரமல்ல எதிர்கால சந்ததி கூட பாதிக்கப்படும் நிலைக்கு ஆளாகியுள்ளோம் என்று தான் கூற வேண்டும். ஏனெனில், பெண் பிள்ளைகளுக்கு கிடைக்க வேண்டிய சரியான போசாக்கான உணவுகள் கிடைக்காத பட்சத்தில் மூளைவளர்ச்சி குறைபாட்டில் அல்லலுறுகின்றனர். அதிலும் தப்பிக்கும் பெண் பிள்ளைகள் அடுத்த கண்டத்தில் மாட்டிக்கொள்கின்றனர். பெண் பிள்ளைகள் பூப்பெய்த பிறகு மாதா மாதம் மாதவிடாய் காலங்களில் அவள் படும் பாட்டை வார்த்தைகளால் விபரிக்க முடியாது. கால் வலி, இடுப்பு வலி, கால்கள் உளைச்சல் என அந்த மூன்று நாட்களிலும் அவளின் கண்களின் ஈரம் சுமந்த படிதான் இருக்கும். அதன் பின் அவள் வாழ்க்கையில் எத்தனையோ பிரச்சினைகள். பெண்ணாக பிறந்தவள் என்றாவது ஒரு நாள் தாய்மை அடைவாள். எனவே, இன்று போசாக்கு குறைப்பாட்டால் அவள் அவதியுற்றால் நாளை அவள் எவ்வாறு முழுப்போசாக்கான அடுத்த தலைமுறையை தோற்றுவிப்பாள் என்பது அனைவரும் உணரவேண்டிய ஒன்றாக உள்ளது. எனவே, மலையகத்தில் இன்னும் எத்தனை தலைமுறையை இவ்வாறான நிலைமைக்குத் தள்ளப்போகின்றார்கள்.

**1970 ஆம் ஆண்டு வரை இலங்கையின் பொருளாதாரம் பெருந்தோட்ட பொருளாதாரதிலேயே தங்கி இருந்தது. காடு, மழை, நேரம், காலம் பாராது கடின உழைப்பின் மூலம் எம் நாட்டு பொருளாதாரத்திற்கு உரமூட்டிய முதுகெழும்புகள் மலையக மக்கள். ஆனால், பொருளாதார ரீதியில் இன்றைய 21 ஆம் நூற்றாண்டிலும் பின்தங்கி இருப்பவர்களும் இவர்கள்தான்.**

பெற்றோரின் பொருளாதார பின்னடைவு பிள்ளைகளின் எதிர்காலத்தை சீரழிக்கின்றது. இது பெரும் சவாலாக உள்ளது. ஏனெனில், பெற்றோரின் பொருளாதாரமே பிள்ளைகளின் வாழ்க்கையை வழிநடத்துகின்றது. இன்று என் பிரதேசத்தில் எத்தனையோ பிள்ளைகளின் இலட்சிய கனவுகளை பெற்றோரின் பொருளாதார நிலை சிதைத்துள்ளது. ஏனெனில், எம் சகோதர இனமான சிங்கள பெற்றோர்கள் ஓரளவு பொருளாதார ரீதியில் முன்னேற்றமடைந்துள்ளார்கள். இதனால் பிள்ளைகளை அவர்களின் இலட்சிய கனவுகள் நனவாகும் பாதைகளுக்கு அழைத்துச் செல்கின்றார்கள்.

ஆனால், தெனியாய நகரில் **"போகொட"** எனும் தனியார் தோட்டத்தில் தோட்டப் பாடசாலை எனும் பெயரில் இயங்கி வரும் முறைசாரா கல்வி நிலையம் ஒன்றில் சாதாரணமாக 20 மாணவர்கள் கல்வி கற்கின்றனர். அவர்களில் ஒரு சில மாணவர்களை தவிர ஏனைய மாணவர்கள் இன்றைய நூற்றாண்டிலும் மழைக்கு கூட பாடசாலை பக்கம் ஒதுங்கியதே இல்லை. என்றாவது ஒரு நாள் நானும் பாடசாலைக்கு செல்வேன் என்ற அவாவில் இருக்கின்றனர் அவர்கள். ஆனால், அங்கிருக்கும் பெற்றோர்கள் கூற்றுப்படி அங்கு தமிழ் மொழி மூல பாடசாலை இல்லை. எனவே, தூர இடங்களுக்கு பாடசாலைக்கு அனுப்புவதற்கு எங்களிடம் வசதிகள் இல்லை என்று புலம்புகின்றனர். கல்வி தான் எம் சமூகத்தை மாற்றியமைக்கும் பெரும் ஆயுதம் என சிலர் கூறித் திரிகையில் இவ்வாறு என்றாவது ஒரு நாள் பாடசாலை செல்வேன் என ஏக்கத்தோடு பார்த்திருக்கும் சமூகமும் ஒரு புறம் இருக்கத்தான் செய்கிறது.

அன்று எவ்வாறு பொருளாதார சிக்கலினால் எம் பெற்றோர்களின் பெற்றோருக்கு பிள்ளைகளின் தேவையை பூர்த்திசெய்ய முடியாமல் போனதோ இன்று அதேநிலையில் எம் பெற்றோர்கள் எம் தேவைகளை பூர்த்தி செய்ய முடியாமல் இருக்கிறார்கள். அப்படியானால், இந்நிலை நாளை யாருக்கு? நம் தலைமுறைக்கா? நம் பிள்ளைகளின் எதிர்காலம்? மேலும் பெற்றோரின் பொருளாதார நெருக்கடி பிள்ளைகளின் பாடசாலை இடைவிலகளையும் அதிகரிக்கின்றது. இதனால் உயரப் பறக்க விரும்பும் எத்தனையோ சிட்டுக்குருவிகள் தங்களின் சிறகுகளை ஒடித்து வேலை வாய்ப்புகளைத் தேடி பிற நகர்களுக்கு சென்றுள்ளனர். எம் பிரதேசத்தில் சாதாரண தரம் வரை கூட பிள்ளைகள் பாடசாலை செல்வது என்பது பல சவால்களுக்கு அவர்களை உள்ளாக்கின்றது. **"பணம் என்றால் பிணமும் வாய் பிளக்கும்"** என்ற வகையில் பிணத்திற்கே பணம் முக்கியம் என்றபோது உயிருள்ள நமக்கு அதைவிட முக்கியம் என்ற ரீதியில் பொருளாதா ரீதியில் பின்னடைவில் வாழும் எம் மக்களுக்கு எப்போது தீர்வு கிடைக்குமோ?

அன்றாடம் பொருளாதார பிரச்சினைகளில் சிக்குண்டு தவிக்கும் என் பிரதேசத்தில் வாழும் சில பெண்கள் வெளிநாடுகளுக்கு செல்ல முன்வருகின்றனர். ஆனால், அதுவும் இங்கே பல பிரச்சினைகளைத்தான் உண்டுபண்ணுகிறது. "வெளிநாட்டுக் காசு! கணவன் ராஜபோதை!!" என்ற வண்ணம் தான் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இறுதியில் பொருளாதார பிரச்சினையினால் குடும்பத்திலும் நிம்மதியின்மை, சந்தோசமின்மை, குடும்பப்பிரிவு என்று நிகழ்ந்த வண்ணம் தான் இருக்கின்றன. எம் பிரதேசத்தில் அநேகமாக தன்னுடைய பொருளாதார பிரச்சினையின் காரணமாக சமூகத்தில் பொருளாதார ரீதியில் முன்னேற்றமடைந்து காணப்படும் சிங்கள சமூகத்தில் வாழ்பவர்களிடம் வட்டிக்காக பணம் வாங்குகின்றனர். ஆனால், மாதா மாதம் வட்டிப்பணம் செலுத்தாவிடின் அவர்கள் வீட்டிற்கு முன் வந்து கேட்கும் கேள்விகள்

**தற்காலத்தில் எல்லா சமூகத்தினரிடமும் போசாக்கின்மை குறைபாடு காணப்படுகின்றது. தற்போதைய பொருளாதார நெருக்கடியால் தான் நாட்டில் போசாக்கு பிரச்சினை ஏற்படுகின்றதா என ஆராய்ந்தால் இல்லை என்ற விடையே ஆய்வில் அறிய முடியும். மலையகத்தில் இத்தனை வருடகாலமும் உழைப்புக்கேற்ற ஊதியம் இன்றி வாழ்க்கை நடத்தும் எத்தனையோ பெற்றோர்களின் பிள்ளைகள் மந்தப்போசனையினால் காலம் காலமாக பாதிக்கப்பட்டு வருகின்றனர் என்பதை இன்றைய முதலாளித்துவ அரசியல் மேடைகளில் போசாக்கின்மை பற்றி தாளம் போடும் எத்தனை அரசியல்வாதிகள் தான் அறிவார்கள்?**



**இன்று முட்டை ஒன்றின் விலை 60 ரூபா. எனவே, ஒரு வீட்டில் மூன்று பிள்ளைகள் வளர்ந்தால் மாதமொன்றிற்கு 5400 ரூபா முட்டைக்கு மாத்திரம் செலவாகின்றது. பொருளாதாரத்தில் பின்தங்கிய நிலையில் இருக்கும் எம் பெற்றோர்கள் எவ்வாறு தருவர்கள். என் பிரதேசத்தில் மட்டுமல்ல மலையகத்தில் பெரும்பாலான வீடுகளில் சம்பள நாளில் மாத்திரம் முட்டை, மீன், இறைச்சி என வாங்கி வரும் எத்தனையோ வீடுகள் மலையகத்தில் இருக்கத்தான் செய்கின்றன என இவ்வாறான வறுமை கோட்டின் கீழ் வாழும் பெற்றோர்கள் எவ்வாறு பிள்ளைகளை போசாக்கின்மை குறைப்பாட்டில் இருந்து மீட்டெடுப்பார்கள்? தாய், தந்தை இருக்க பிள்ளைகள் துடித்து துடித்து சாகும் நிலைதான் இதுவோ?**

தூக்கில் தொங்க வைக்கும். இவ்வாறான கடன் பிரச்சினைகளால் சிலர் விஷம் அருந்தி உயிரை மாய்த்துக் கொண்டும் உள்ளனர்.

ஏன் இன்று முதலாளித்து ஆட்சியில் நாடக அரசியல் மேடைகளில் பிள்ளைகளின் போசாக்கு குறைபாட்டை பற்றி பேச்சில் ஏலம் விடும் அரசியல்வாதிகள் அறிவதில்லையோ எம் மக்களின் பொருளாதார நிலையை. அவர்கள் இன்றளவிலும் உழைப்புக்கேற்ற ஊதியத்திற்காக குரல் கொடுத்துதான் இருக்கின்றார்கள். ஆனால், இன்றைய அளவில் வந்த எந்த அரசாங்கமும் மலையக மக்களின் பொருளாதாரத்தில் மாற்றத்தை ஏற்படுத்தவில்லை. இனியும் மாற்றத்தை ஏற்படுத்த மாட்டார்கள். ஏனெனில், பொருளாதாரத்தில் எம்மை உயர்த்திவிட்டால் நாமும் வீடு கட்டி, வாகனம் வாங்கி, போசாக்கான உணவு உண்டு முன்னேறி விடுவோம் என்ற பயம் இருப்பது போன்று தோன்றுகிறது. எம்மை பொருளாதாரத்தில் முன்னேற்றினால் "கைக்கூலிகள்" என்ற பதம் அழிந்துபோகும். நாட்டில் இருக்கும் அனைத்து வளங்களையும் குத்தகைக்கு விட்டும், விற்பனை செய்தும், ஏனைய நாடுகளிடம் கடன் பெற்றும் அரசியல் ஆட்சி நடத்தும் இந்த முதலாளித்துவ அரசியல்வாதிகளால் ஒருபோதும் மலையக மக்களின் பொருளாதார பிரச்சினைக்குத் தீர்வு பெற்றுத் தர முடியாது என்பது என் ஆணித்தரமான கருத்து. முதலாளித்துவ ஆட்சிக்கு முற்றுப்புள்ளி இல்லையேல் எதிர்காலத்தில் எம்மையும் ஏனைய நாடுகளிடம் விலைபேசி விற்று அவர்கள் சுகபோகமான வாழ்க்கையை வாழ்ந்துவிடுவார்கள். எனவே, ஒரு பாட்டாளியின் கண்ணீரையும் அவனின் வேதனைகளையும் புரிந்து உணர்ந்து கொள்ளும் சக்தியுள்ள அரசாங்கத்தினாலே எமக்கான தீர்வை வழங்க முடியும்.

**"உள்நாட்டு யுத்தக் காலங்களில் உறவுகளையும் உடைமைகளையும் இழந்து உயிர்பிழைத்தால் போதுமென்று நம்மை காக்க கடல் தாண்டி படகேறி பயத்தில் இரவோடு இரவாக அகதியானோம் அன்று...**

**பொருளாதாரமின்றி வறுமை தொடர வயிறு காய பசியைப் போக்க மீண்டும் அகதியாகின்றோம் இன்று. இங்கு கடன் சுமை இலங்கை கழுத்தை நெறிக்க வறுமை நிலை ஏழைகளின் வயிற்றை அல்லவா இறுக்குகின்றது. இந்நிலை தொடருமானால் நம் நிலை என்னவாகும் என்ற கேள்விகளுடன் நகர்கின்றது மலையக மக்களின் அன்றாட போராட்ட வாழ்க்கை."**



# உளவியல் நோய்களை குணப்படுத்தும்

# பெரும் கலை ரெய்கி

## சுகந்தினி யசோதரன்



நேர்கண்டவர் : பா.கனகேஸ்வரி
யாழ்.பல்கலைக்கழகம்
ஊடக கற்கைகள் துறை

தனியாக வீட்டில் வாழும் சூழல், புதிய இடம், தாயின் திடீர் மறைவு ஆகிய காரணங்களால் மன அழுத்தத்திற்கு உள்ளாக நேர்ந்தது. அச்சந்தர்ப்பத்தில் என் தோழியான மயூரா 'ரெய்கி' வகுப்பிற்கு 2019 ஆம் ஆண்டு என்னை அழைத்து சென்றாள். அவளோடு இணைந்து ரெய்கியை கற்று எனக்கு நானே சிகிச்சை செய்து முற்றுமுழுதாக மன அழுத்தத்திலிருந்து விடுபட்டதன் பின்னர், ரெய்கியை மென்மேலும் ஆராய்ந்து அறிந்து கொண்டு இதன் பலனை எல்லோரும் பெற வேண்டும் என்ற நோக்கத்தில் வசதியானவர்கள் மட்டுமே கற்றுக் கொள்ளக்கூடிய இந்த கலையை ஏழை எளிய மக்களுக்காக 2022 ஆம் ஆண்டிற்கு பின்னர் கற்பிக்கிறேன்.

**உங்களது கடந்த காலத்தைப் பற்றி என்னோடு பகிர்ந்துக்கொள்ள முடியுமா?**

நிச்சயமாக! எனது பெயர் சுகந்தினி யசோதரன். 1983 ஆம் ஆண்டு மே மாதம் யாழ்ப்பாணத்தில் பருத்தித்துறையில் பிறந்தேன். எனது பெற்றோர் பெயர் சந்திரகாந்தன், ராதா ராணி. குடும்பத்தில் மூத்த மகளாக பிறந்த நான் பெண்கள் மெதடிஸ் கல்லூரியில் உயர்தரம் கற்றேன். நாட்டின் சூழ்நிலை காரணமாக படிப்பை தொடர முடியவில்லை. எனவே இந்தியாவிற்கு சென்று +2 வரை கற்று பின்னர் நாடு திரும்பினேன். 2004 ஆம் ஆண்டு திருமணமாகி சிங்கப்பூர் சென்றேன். சிங்கப்பூரில் கணவன் தொழிலுக்கு சென்ற பின்னர்

**நல்லது! ரெய்கி என்பது என்ன? அதன் வரலாற்றை பற்றி கொஞ்சம் சொல்லுங்கள்?**

ரெய்கி என்பது பிரபஞ்ச சக்தியே ஆகும். பிரபஞ்ச சிருஷ்டியின் மூல தத்துவமாகிய அந்தப் பேராற்றலே ரெய்கி எனர்ஜியாகும். இதை நமது சித்தர்கள், ஞானிகள், பண்டைய கால யோகிகள், பரப்பிரம்மம் அருட்பேராற்றல், இறை சக்தி, தெய்வீக சக்தி, ஆழ்மனதின் அற்புத சக்தி இப்படி பல பெயர்களில் அழைத்து அதைக்கொண்டு பற்பல அற்புதங்களை நிகழ்த்தியுள்ளார்கள். உண்மையில் இந்த சக்தி பிரபஞ்சத்தில் உள்ள அனைத்து பொருட்களிலும் நிறைந்துள்ளது. அதை அறிந்து நம்பி உள்வாங்கி வெளியிடும் கலையை அறிந்தவர்களுக்கே இந்த

சக்தியை முழுமையாக உணர முடியும். இனிப்பின் சுவை உண்பவருக்கு மட்டுமே தெரியும்.

இதன் பின்னணி பற்றி கூறினால் இந்த அற்புதமான கலையை உருவாக்கியவர் ரெய்கிமிக்காவோ உசுயி என்பவராவார். இவர் பௌத்த மதத்தைச் சேர்ந்தவர். எனினும் இவர் ஒரு ஜப்பானியர். ஜப்பானிய பல்கலைக்கழகம் ஒன்றில் உளவியல் விரிவுரையாளராக பணியாற்றி கொண்டிருக்கும் போது "இயேசுவும், புத்தரும் கைகளால் மனிதர்களை தொடும்போது நோய்களில் இருந்து மனிதர்கள் குணமடைகிறார்கள். ஏன் அதை நம்மால் செய்ய முடியாது?" என்று மாணவர்கள் கேட்ட கேள்வியினால் ஆழமாக யோசிக்க தொடங்கினார். பின்னர் விரிவுரையாளர் பதவியை விட்டு மாணவர்களின் கேள்விக்குப் பதில் தேடினார். பல நாடுகளுக்குச் சென்று பல முயற்சிகளின் பின்னர் கண்டுபிடிக்கப்பட்ட சக்திக்கு "ரெய்கி" என பெயர் வைத்தார். ரெய்கி என்பது ஜப்பானிய சொல். ரெய் - என்பது பிரபஞ்சம். கி - என்பது சக்தி பிரபஞ்ச சக்தி என்பது இதன் பொருளாகும்.

## ரெய்கி என்ற பிரபஞ்ச சக்தி மூலம் நோய்களை கண்டறிய முடியுமா? இதனால் ஏதேனும் பின் விளைவுகள் உண்டா?

நிச்சயமாக முடியும். ரெய்கி மூலம் எத்தனை பெரிய நோய்களையும் கண்டறிய முடியும். முறையாக ரெய்கியை கற்று அதனை பயன்படுத்தும்போது, சிகிச்சை செய்பவருக்கோ அல்லது சிகிச்சை பெறுபவருக்கோ எந்த பின்விளைவுகளும் ஏற்படாது. சிகிச்சை அளிப்பவரும் அதைப் பெற்றுக் கொள்பவரும் முழுமையான நம்பிக்கையோடும், முழு மனதோடும் ரெய்கியை ஏற்றுக் கொள்பவர்களினால் நிச்சயம் அது எந்தப் பிரச்சனையானாலும் அதிலிருந்து வெளிவர முடியும் நான் இந்தக் கலை மூலம் பலரை நோய்களில் இருந்து மீட்க ஒரு கருவியாக இருந்த அனுபவம் நிறையவே இருக்கிறது. இது என் சொந்த கருத்தும், அனுபவமுமாகும்.

## நீங்கள் ரெய்கி கலையை எப்படி கற்றீர்கள்?

மிகப் பழமையான இந்த மருத்துவக் கலையை கற்பதற்கு தீட்சை மிக அவசியமாகும். இந்தக் கலை நான்கு படிமுறைகளின் கீழ் கற்க முடியும். முதலாம் படிமுறையில் ரெய்கி கற்பவரின் உடல்நிலை, மனநிலை, வாழ்வு நிலைகளை மேம்படுத்துவதற்கான தீட்சை அளிக்கப்படும். இரண்டாம் படிநிலையில் கற்பவரோடு அவரின் குடும்பத்தினரின் உடல், மன, ஆற்றல் நிலையை மேம்படுத்துவதற்கான தீட்சையும், மூன்றாம் படிமுறையில், (மாஸ்டர்) சமூகத்தை சீரமைத்து நோய்களை குணமாக்குவதற்காக தீட்சை அளிக்கப்பட்டு மென்மேலும் எனர்ஜியை அதிகரிக்கும் செயன்முறையாகும். இரண்டாம் படிமுறையிலும், மூன்றாம் படிமுறையிலும் வெவ்வேறுபட்ட பிரபஞ்ச குறியீடுகள் கற்றுக் கொடுக்கப்படும். இக்குறியீடுகள் பிரபஞ்சத்தோடு விரைவில் தொடர்பை ஏற்படுத்தி பிரபஞ்ச சக்தியை உடலுக்குள் அதிகரிப்பதற்காக உதவி செய்யும். நான்காவது படிமுறை ஆசிரியர் படிமுறை கற்ற ரெய்கி கலையை மற்றவருக்கு கற்றுக் கொடுப்பதற்காக தீட்சையாகும். இவ்வாறு நான்கு படிமுறைகளின் கீழ் அதிக பணம் செலவு செய்து பல குருமார்களிடம் ரெய்கியை கற்றுக்கொண்டேன்.

## தீட்சை அவசியம் என்று சொல்கிறீர்களே அப்படியானால் யோகாவுடன் தொடர்புடைய கலையாக ரெய்கி இருக்கிறதா?

ஆம்! தொடர்புடையது. யோகா என்பது தனிமனித வாழ்க்கையோடு மட்டும் தொடர்புடையது. ஆனால் ரெய்கி என்பது தனிமனிதனுடன் சமூக நலமும் அளிப்பது. இரண்டும் சேரும் இடம் வேறு வேறாயினும் இரண்டையும் தொடர்புப்படுத்துவது மனமாகும். யோகா பயிற்சிகள் மூலம் மனதை ஆளும் முறை, அடக்கும் முறை என்பவற்றையும் தியானமூலம் மனதை ஒருநிலைப் படுத்தவும் முடியும். அந்த மன ஒருமைப்பாட்டோடு பிரபஞ்ச சக்தியை உடலில் அதிகரித்து, மருத்துவ முறையாக மனிதர்களை குணப்படுத்தும் வேலையை ரெய்கி செய்கிறது. மன ஒருமைப்பாடு என்ற ரீதியில் யோகம் ரெய்கி இரண்டும் ஒன்றோடு ஒன்று தொடர்புடையவை

## சரி! சிறந்த ரெய்கி மருத்துவரை எப்படி இணங்காண்பது?

சிறந்த ரெய்கி வைத்தியர் முதலில் ரெய்கியை தனது சொந்த வாழ்வில் பயன்படுத்தி முன்னேறியவராகவும், பெற்ற அனுபவம் மூலம் அதிகமானோருக்கு ரெய்கி சிகிச்சை அளித்து அதில் வெற்றி கண்டவராகவும் இருக்க வேண்டும். வருமானத்திற்காக மட்டும் இந்த துறையை தெரிவு செய்யாமல் மிக்காவோ உசுயி ஐயா



> **ரெய்கி என்பது பிரபஞ்ச சக்தியே ஆகும். பிரபஞ்ச சிருஷ்டியின் மூல தத்துவமாகிய அந்தப் பேராற்றலே ரெய்கி எனர்ஜியாகும். இதை நமது சித்தர்கள், ஞானிகள், பண்டைய கால யோகிகள், பரப்பிரம்மம் அருட்பேராற்றல், இறை சக்தி, தெய்வீக சக்தி, ஆழ்மனதின் அற்புத சக்தி இப்படி பல பெயர்களில் அழைத்து அதைக் கொண்டு பற்பல அற்புதங்களை நிகழ்த்தியுள்ளார்கள். உண்மையில் இந்த சக்தி பிரபஞ்சத்தில் உள்ள அனைத்து பொருட்களிலும் நிறைந்துள்ளது.**

கூறிய வழியை பின்பற்றி, சேவை மனப்பாங்குடனும் நம்பிக்கையுடனும் இத்துறையில் ஈடுபடுபவராக இருக்க வேண்டும். 80% சமூக நோக்கத்திற்காக செயல்படுபவராக ஒரு ரெய்கி குரு இருப்பது அவசியம்.

## மருந்தில்லா மருத்துவம் கூறும் ரெய்கி கலைக்கு வைத்தியசாலைகளில் அனுமதி உண்டா?

நிச்சயமாக! இன்று ஜப்பான் அமெரிக்கா, லண்டன் போன்ற பல்வேறுப்பட்ட நாடுகளில் ரெய்கி என்று அதாவது மருந்தில்லா மருத்துவம் என்று தனிப்பிரிவு வைத்தியசாலைகளில் உள்ளது. இது அரசின் அனுமதி பெற்று இயங்குகிறது. பல நோய்களை குறிப்பாக உளவியல் நோய்களை குணப்படுத்தும் பெரும் கலையாக ரெய்கி இருக்கிறது.

## ஒருவரை கைகளால் தொட்டு குணப்படுத்தும் கலைக்கு கைகள் எந்த அளவிற்கு அவசியமானது?

இன்று அதிகமானோர் ரெய்கி சிகிச்சை முறைக்கு பெரும்பாலும் கையை பயன்படுத்தி தொட்டு ஒருவரை குணமாக்குகிறார்கள். ஆனால் கையை விட கற்பனையே இதற்கு முக்கியம் கை இல்லாத ஒருவரால் கூட ரெய்கி ஆசிரியராக வர முடியும். மனதை திறந்த நிலையில் வைத்திருந்து, நம்பிக்கையுடன் மனதளவில் சரியாக இருந்தால் கைகள் இல்லாமலே பிரபஞ்ச சக்தி உடலுக்குள் வருவதை உணர முடியும். பிரபஞ்ச சக்தியை உணர்வதற்கோ, அல்லது உடலின் சக்தியை அதிகரிப்பதற்கோ எந்தக் கட்டுப்பாடுகளும் நிபந்தனைகளும் கிடையாது. திறந்த நிலையில் உள்ள ஒருமித்த மனமே போதும் ஒருவரது உடலின் சக்தியை அதிகரித்து பாவனையில் மூலம் ஒருவரை குணமாக்க முடியும் என்பது என் அனுபவங்களுள் ஒன்று.

## பிரபஞ்ச சக்தியை எல்லோராலும் இயல்பாகவே உணர முடியுமா?

நிச்சயம் முடியும். பிரபஞ்ச சக்தி என்பது பஞ்சபூதங்களின் சக்தியாகும். பஞ்சபூதங்கள் வெளி உலகில் மட்டுமல்ல. நம் உடலுக்குள்ளும் இருக்கிறது. அதாவது, உடலில் நீர் என்பது - ரத்தம், வியர்வை, சிறுநீர், சளி போன்றவைகளாகவும், நிலம் என்பது - முழு உடலாகவும், நெருப்பு என்பது - உடம்பின் சூடு, செரிமானத்தன்மை என்பவற்றையும், காற்றானது - சுவாசத்தையும் ஆகாயம் என்பது - உயிரையும் குறிப்பதாகும். எனவே, அண்டத்தில் உள்ளது பிண்டத்திலும் உள்ளது என்பதால் பஞ்சபூதங்கள் ஏற்கனவே உடலில் இருக்கிறது. நாம் விரும்பியோ விரும்பாமலோ நம் உடலின் இயக்கத்திற்கு பஞ்சபூதங்கள் இயல்பாகவே உதவி செய்கின்றன. உடலிலுள்ள பஞ்சபூதங்களின் இயக்கத்தை அதிகரிப்பதற்கு வெளியில் உள்ள பஞ்சபூதமான பிரபஞ்ச ஆற்றலோடு தொடர்பு கொள்வதற்கான கருவியாக உடலும், மனமும் அமைகிறது. அந்த சக்தியை பெறுவதற்கான வழிமுறையாக ரெய்கி கலை அமைகிறது.



# போதைப்பொருள் சவக்குழியில் மலையகம்

ரோஹி

போதைப்பொருள் பாவனை பெரும் தொற்றுநோயாக உருவெடுத்து இளம் தலைமுறையை அரித்துக்கொண்டிருக்கிறது. பொருளாதார நெருக்கடியில் அடிப்பட்டுப் போயிருக்கின்ற இலங்கைக்கு மேலும் பலத்த அடியாக இப்பிரச்சினை இடியாய் வந்து விழுந்துள்ளது. பொருளாதார நெருக்கடிக்கு இணையாக போதைப்பொருள் பாவணையும் வேகம் கண்டிருக்கிறது. இவ்வாறு போதைப்பொருள் வியாபாரம் கொடிகட்டி பறப்பதற்கான காரணம் அரசாங்கத்தின் கையாளாகாதத்தனமா? அல்லது அரசாங்கத்தின் பூரண அனுசரணையுடன் இந்த யுத்தம் தொடங்கப்பட்டுள்ளதா? என்ற பலத்த கேள்வி எழுந்துள்ளது.

இலங்கையில் மக்கள்நல ஆட்சி நிறுவப்பட வேண்டும் என்று இளைஞர்கள் கங்கணங்கட்டிக் கொண்டிருக்கும் நிலையில், அவர்களை திசைத் திருப்பும் பொருட்டு அல்லது அவர்களது சிந்தையை மழுங்கடிக்கும் பொருட்டு போதைப்பொருள் விநியோகம் திட்டமிட்டு முன்னெடுக்கப்பட்டு வருகின்றதா என்ற சந்தேகமும் நிலவவே செய்கிறது. ஏனெனில், போதைப்பொருள் வியாபாரங்களை சிறு மனிதர்களால் ஒருபோதும் செய்யவியலாது. அவர்கள் வெறும் அடியாட்களாகவும் துருப்புச் சீட்டுக்களாக மட்டுமே இருந்துவிட முடியும். எமது நாடு தீவு என்ற படியால் கடல்வழியாகவே இவ்வாறான வியாபாரங்கள் முன்னெடுக்கப்படுகின்றமை தெளிவானது. இந்த வியாபாரத்தில் அதிகாரத்தில் இருக்கும் பெரும்புள்ளிகளின் தலையீடு இருந்துவிட முடியாது என்று நிச்சயமாக சொல்ல முடியாது. ஏனெனில், எத்தனோல் வியாபாரிகள், போதைப்பொருள் வியாபாரிகள், போதைப்பொருள் பாவணையாளர்கள் பலரும் பாராளுமன்றத்தில் இருப்பது நாம் அறிந்ததே! இவ்வாறான கும்பலை வீட்டுக்கு அனுப்புவதற்காகவே மக்கள் போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

தற்போது இளைஞர்களின் முற்போக்கான சிந்தனைகள் போதையில் கிறங்கிக் கொண்டிருக்கின்றன. மருந்துப் பொருட்கள், கஞ்சா, ஹெரோயின் மற்றும் மெத்தாம்பேட்டமைன் (ஐஸ்) போன்ற போதைப்பொருள் பயன்பாடு நகர்ப்புறங்களிலும், கிராமப்புறங்களிலும் அதிகரித்துள்ளதோடு, அது பெருந்தோட்டங்களையும் சீரழித்துக் கொண்டிருக்கிறது. இதன் காரணமாக எதிர்மறையான உடல்நலம் மற்றும் சமூக விளைவுகளுடன் போதைப்பொருள் பாவனை யாளர்களின் எண்ணிக்கை வேகமாக அதிகரித்து வருவதாக மதிப்பிடப்பட்டுள்ளது. அதேநேரத்தில் இது சமூக ஸ்திரத்தன்மையை பாதிக்கிறது. கொழும்பு புறநகர்

பகுதிகளில் போதைப்பொருள் பாவனை மிக அதிகமாக இருக்கிறது. அதிலும் குறிப்பாக, மலையகத்தில் இருந்து வேலைவாய்ப்புகளைத் தேடி வந்த இளைஞர்கள் இதில் சிக்குப்பட்டிருக்கிறார்கள். அதுப்போலவே, மலையகத்திற்குள்ளும் போதைப்பொருள் பாவனை பரவியிருக்கிறது.

2021 ஆம் ஆண்டில் போதைப்பொருள் தொடர்பான மொத்த கைதுகளின் எண்ணிக்கை தேசிய அளவில் 110,031 ஆக இருந்தது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. 2020 உடன் ஒப்பிடும்போது, போதைப்பொருள் தொடர்பான கைதுகள் 13% அதிகரித்துள்ளது. 46% ஹெராயினுக்கும் 40% கஞ்சாவிற்கும் பதிவாகியுள்ளது.

2022 இல் 253 கிலோ கிராம் ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. ஐஸ் போதைப்பொருள் பாவனை தொடர்பாக கடந்த வருடம் 20,015 சம்பவங்கள் பதிவாகியுள்ளதுடன், ஐஸ் போதைப்பொருளை பயன்படுத்தியதற்காக 18,955 பேர் மீது கடந்த ஆண்டு வழக்கு தொடரப்பட்டன. அவர்களில் 7,955 பேர் குற்றவாளிகளாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். இலங்கையில் ஐஸ் போதைப்பொருள் பயன்படுத்துவோரின் எண்ணிக்கை 50,000 ஆக அதிகரித்துள்ளதாக தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை தலைவர் ஷக்ய நாணயக்கார தெரிவித்துள்ளார். கடந்த ஆண்டின் இறுதியில் போதைபொருள் பாவனையாளர்களுக்கான புனர்வாழ்வு மையங்களில் அனுமதிக்கப்பட்ட நபர்களில் எண்ணிக்கை ஒப்பீட்டளவில் அதிகரித்துள்ளதாகவும் அவர்கு குறிப்பிட்டார்.

அதுப்போலவே, மலையகத்தில் காய்ச்சி வடிக்கப்படும் சட்டவிரோத சாராயமான கசிப்பு விற்பனை சப்ரகமுவ மாகாணத்திலும் ஊவா மாகாணத்திலும் அதிகமாக உள்ளது. சட்டவிரோத மதுபாவனையால் சிறுநீரக நோய், மாரடைப்பு, புற்றுநோய் போன்ற கொடிய நோய்களால் மலையகத்தில் அதிக உயிரிழப்புகள் ஏற்பட்டு வருகின்றன. எனினும் இவ்வாறு உயிரிழப்புகள் ஏற்பட்டாலும் அவற்றை நுகர்வோரின் எண்ணிக்கை குறைவதாக தெரியவில்லை. தோட்டப்புறங்களை இலக்கு வைத்து சந்திக்கு சந்தி திறக்கப்பட்டுள்ள அரச அங்கீகாரம் பெற்ற மதுபான விற்பனை நிலையங்கள் மலையக மக்களை தொடர்ந்தும் மதுவுக்கு அடிமையாக்கி கட்டிப்போட்டுள்ளன. இவை கவனத்தில் கொள்ளத்தக்கது.

இந்நிலையில் மலையகத்தின் பாடசாலைகளிலும்

**மலையகத்தின் பாடசாலைகளிலும் ஐஸ் போதைப்பொருள், ஹெரோயின், கஞ்சா பாவணை அதிகரித்திருக்கிறது. ஏற்கெனவே, பெருந்தோட்ட மக்களின் கல்வி பின்னடைவில் இருக்கும் நிலையில் போதைப்பொருள் விவகாரம் அதனை மேலும் சீரழிவை நோக்கி கொண்டுசெல்கிறது. நாட்டில் நிலவுகின்ற பொருளாதார நெருக்கடியின் காரணத்தால் மலையகத்தில் குறிப்பாக தோட்டப்புற பாடசாலைகளில் மாணவர்களின் இடைவிலகல் அதிகரித்துள்ளது. அவர்களில் பெரும்பாலானவர்களில் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகியிருக்கிறார்கள். இளம் பராயத்துக்குரிய அவர்களது மனோபாவம், செயற்பாடுகள், தோற்றம் அனைத்தும் விகாரமடைந்துள்ளன. அடாவடித்தனமிக்க, கட்டுப்பாடற்ற, பண்பாடற்ற மனிதர்களாக மலையகத்தின் இளம் தலைமுறையினர் மாறிக்கொண்டிருக்கின்றனர்.**

ஐஸ் போதைப்பொருள், ஹெரோயின், கஞ்சா பாவணை அதிகரித்திருக்கிறது. ஏற்கெனவே, பெருந்தோட்ட மக்களின் கல்வி பின்னடைவில் இருக்கும் நிலையில் போதைப்பொருள் விவகாரம் அதனை மேலும் சீரழிவை நோக்கி கொண்டுசெல்கிறது. நாட்டில் நிலவுகின்ற பொருளாதார நெருக்கடியின் காரணத்தால் மலையகத்தில் குறிப்பாக தோட்டப்புற பாடசாலைகளில் மாணவர்களின் இடைவிலகல் அதிகரித்துள்ளது. அவர்களில் பெரும்பாலானவர்களில் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகியிருக்கிறார்கள். இளம் பராயத்துக்குரிய அவர்களது மனோபாவம், செயற்பாடுகள், தோற்றம் அனைத்தும் விகாரமடைந்துள்ளன. அடாவடித்தனமிக்க, கட்டுப்பாடற்ற, பண்பாடற்ற மனிதர்களாக மலையகத்தின் இளம் தலைமுறையினர் மாறிக்கொண்டிருக்கின்றனர். இவ்வாறான காரணத்தினால் மலையகத்தில் இளவயது திருமணமும் அதிகரித்திருக்கிறது. பின்னர் வாழ வழித்தெறியாது அவர்கள் பிரிந்து இருக்கும் நிலையும் ஏற்படுகிறது. கொலை, கொள்ளை, பாலியல்

**போதைப்பொருள் வியாபாரம் கொடிகட்டி பறப்பதற்கான காரணம் அரசாங்கத்தின் கையாளாகாதத்தனமா? அல்லது அரசாங்கத்தின் பூரண அனுசரணையுடன் இந்த யுத்தம் தொடங்கப்பட்டுள்ளதா?**



துஷ்பிரயோகமும் கூடியிருக்கிறது. இது பெரும் கலாச்சார சீரழிவாக இருக்கிறது. மலையகத்தின் எதிர்காலத்தை இந்தப் போதைப்பொருள் பாவனை அழிவை நோக்கி இட்டுச் செல்கிறது. ஆயினும், இதுவரையில் முறையான சட்ட நடவடிக்கைளும் போதைப்பொருள் பாவணையை கட்டுப்படுத்தும் வேலைத்திட்டங்களும் முன்னெடுக்கப் பட்டுள்ளதாக தெரியவில்லை. அரசாங்கத்தினாலும் மலையகத்தின் பிரதிநிதிகளாலும் மேலோட்டமான சில விடயங்களே மேற்கொள்ளப்படுகின்றன. இது மலையக இளம் தலைமுறையை போதைப்பொருள் சவக்குழியில் இருந்து மீட்பதற்கு போதுமானதாக இல்லை.

ஆக, போதைப்பொருள் வியாபாரத்தை நிறுத்துவதற்கான சட்ட நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட வேண்டும். அதுப்போல, போதைப்பொருள் தடுப்பு மற்றும் சிகிச்சையில் முதலீடு செய்வது நமது சமூகத்தின் சமூக, பொருளாதார மற்றும் தார்மீக கட்டமைப்பில் முதலீடு ஆகும். அடிமைத்தனத்துடன் போராடும் ஒவ்வொரு நபரும் இரக்கமுள்ள மற்றும் பயனுள்ள கவனிப்புக்கு தகுதியானவர் என்பதை அங்கீகரிப்பதாகும். மேலும் போதைக்கான மூல காரணங்களை நிவர்த்தி செய்வதன் மூலம், வரவிருக்கும் தலைமுறைகளுக்கு ஆரோக்கியமான, மேலும் நெகிழ்ச்சியான சமூகங்களை நாம் உருவாக்க முடியும். அத்துடன், போதைப் பொருள் பாவனைக்கு எதிரான விழிப்புணர்வினை பெற்றோர்கள், மாணவர்கள் மத்தியில் ஏற்படுத்த வேண்டும். சமூகமாக ஒன்றிணைந்து திட்டமிட்டு பரப்பப்படுகின்ற போதைப்பொருள் விசக்கிருமியை ஒழித்துக்கட்ட தக்க தடுப்பூசியை கையில் எடுக்க வேண்டும். முறையாக வைத்தியம் பார்க்க வேண்டும்.



# தென்னாபிரிக்காவில் அடிமைப்பட்ட இந்தியர்களின் கதை!

**சதீஸ் செல்வராஜ்**

1488 இல் ஆபிரிக்காவை நோக்கி பயணம் செய்துகொண்டிருந்த பார்த்தலோமியோ டயஸ் என்ற போர்த்துக்கேய மாலுமி அத்திலாந்திக் சமுத்திரத்தின் தென்பகுதியில் ஒரு பெரும் புயலில் சிக்கிக் கொண்டதனால் அவனால் மேற்கொண்டு தன் பயணத்தை தொடர முடியாமல் போனது. அவனது பயணம் தடைப்பட்ட அவ்விடம் புயல்முனை என அழைக்கப்பட்டது. ஆனால், அந்தப் புயல்முனைதான் இந்திய நிலப்பரப்பைத் தேடி அலைந்துக் கொண்டிருந்த வாஸ் கொடகாமாவுக்கு புது நம்பிக்கையைத் தந்தது. அதனால் அப்பகுதிக்கு நன்னம்பிக்கை முனை (Cape of Good Hope) என்று பெயரிடப்பட்டது. நன்னம்பிக்கை முனையை ஐரோப்பியர்கள் கண்டுப்பிடித்தமையானது உலகின் பயணப்பாதையிலும் ஒரு திருப்பு முனையாக அமைந்தது.



இந்தியாவை வந்தடைவதற்கு முன்பே ஐரோப்பியர்கள் ஆபிரிக்காவினுள் ஊடுயிருந்தனர். தொடக்கத்தில் ஐரோப்பியர்கள் அரபு மொழி பேசும் வட ஆபிரிக்க பகுதியை மட்டுமே அறிந்து வைத்திருந்தனர். ஐரோப்பாவுக்கும் ஆசியாவுக்கும் இடையிலான சர்வதேச வர்த்தகத்தில் அந்நேரம் அரேபியரே ஆதிக்கம் செலுத்தினர். பின்னர் அதிகாரத் திற்காகவும் வியாபாரத்திற்காகவும் ஐரோப்பியருக்கும் அரேபியருக்கும் இடையில் மூண்ட பெரும் போரில் ஐரோப்பியர் தோல்வியுற்றனர். அதனால், முடங்கிப்போன வர்த்தகத்தை மீட்டெடுக்கவும்

**கிறிஸ்தவ மதத்தின் பேரில் போப் பாண்டவர்கள் பாப்பல்புல் என சொல்லப்படும் தேவதூதனின் கட்டளையை பிறப்பித்து கிறிஸ்தவர்கள் அல்லாதவர்களை அடிமைப்படுத்தும் அதிகாரத்தை போர்த்துகேய மன்னர்களுக்கு வழங்கியிருந்தனர். அதனால் அடிமைப்படுத்தலை தெய்வீகக் கடமையென்று கருதி அம்மன்னர்கள் அதை நிறைவேற்றி வந்தனர். அதன் ஒரு கட்டமாக ஐரோப்பியர்கள் மேற்கு ஆபிரிக்காவில் செனகல், கானா போன்ற நாடுகளின் கறுப்பின மக்களை காட்டு விலங்குகளை போல வேட்டையாடியும், பொறிவைத்துப் பிடித்தும் கொத்துக் கொத்தாக அத்திலாந்திக் பெரும் சமுத்திரத்தின் வழியே தமது காலனித் தேசமாகிய அமெரிக்க நிலப்பரப்பிற்கு கொண்டு சென்றனர்.**

மேம்படுத்தவும் தம் கரங்களில் தக்கவைத்துக் கொள்ளவும் அவர்கள் கடல்வழி மார்க்கத்தை தேடினர்.

அதன்படியே, போர்த்துக்கேய மாலுமிகள் தற்செயலாக ஆபிரிக்காவை கண்டுபிடித்துக்கொண்டனர். அவர்கள் ஆபிரிக்காவை கைப்பற்றியதோடு அங்கு கொத்தடிமை கலாச்சாரம் வேர்விட்டது. கிறிஸ்தவ மதத்தின் பேரில் போப் பாண்டவர்கள் பாப்பல்புல் என சொல்லப்படும் தேவதூதனின் கட்டளையை பிறப்பித்து கிறிஸ்தவர்கள் அல்லாதவர்களை அடிமைப்படுத்தும் அதிகாரத்தை போர்த்துகேய மன்னர்களுக்கு வழங்கியிருந்தனர். அதனால் அடிமைப்படுத்தலை தெய்வீகக் கடமையென்று கருதி அம்மன்னர்கள் அதை நிறைவேற்றி வந்தனர். அதன் ஒரு கட்டமாக ஐரோப்பியர்கள் மேற்கு ஆபிரிக்காவில் செனகல், கானா போன்ற நாடுகளின் கறுப்பின மக்களை காட்டு விலங்குகளை போல வேட்டையாடியும், பொறிவைத்துப் பிடித்தும் கொத்துக் கொத்தாக அத்திலாந்திக் பெரும் சமுத்திரத்தின் வழியே தமது காலனித் தேசமாகிய அமெரிக்க நிலப்பரப்பிற்கு கொண்டு சென்றனர். இவ்வாறு ஐரோப்பியரின் அடிமை வியாபாரம் கொடிகட்டிப் பறக்க ஆரம்பித்தது. அமெரிக்காவின் பருத்தி வயல்களிலும், ஆழ்துளை சுரங்கங்களிலும் மயங்கி விழுகிறவரை கறுப்பின மக்கள் வேலைவாங்கப்பட்டனர். "மனிதர்கள்" என்ற அந்தஸ்து கூட மறுக்கப்பட்டிருந்த அம்மக்களின் உழைப்பே அமெரிக்க மூலதனத்தை பெருக்கெடுக்கச் செய்தது. ஆரம்பத்தில் போர்த்துகேயர் மற்றும் ஸ்பானியர்களிடமே அடிமை வர்த்தகம் இருந்தது. அவர்கள்வசம் ஏகபோகமாகவிருந்த அடிமை வர்த்தகத்தில் விரைவில் ஒல்லாந்தரும் பிரித்தானியரும் இணைந்தனர்.

"தந்தையைக் கொன்றான் வெள்ளையன்!
ஏன்?
என் தந்தை தன்மானி ஆதலினால்!
அன்னையைக் கெடுத்தான் வெள்ளையன்
ஏன்?
என் அன்னை பேரழகி ஆதலினால்!
அண்ணனை வெய்யில்தனில் வறுத்தெடுத்தான்.
அவன் உடல் வலியவன் ஆதலினால்!
என்னையும் எஜமான் நோக்கினான்,
"பையா! எடு மது, கதிரை போடு" என்றான்"

அடிமைச் சிறுவனின் உருவத்தில் நிர்க்கத்திக்குள்ளான அத்தனை அடிமைகளின் இயலாமையின் குரலாய் கவிப்பாடுகிறார் செனகல் நாட்டு கறுப்பு கவிஞர் டேவிட் டியோப். இவ்வாறு அடிமைகளாக்கப்பட்ட கறுப்பின மக்களின் ஆயுளை ஐரோப்பியர்கள் சொந்தம் கொண்டாடினர்.

நன்னம்பிக்கை முனையைக் கடந்து சென்ற வாஸ்கொடகாமா இந்திய நிலப்பரப்பில் அடியெடுத்து வைத்தவுடன் படிப்படியாக அங்கும் இதுபோன்ற அடிமைக் கலாச்சாரம் உருவெடுத்தது. இந்திய நிலப்பரப்பில் முதலில் அடிமை வியாபாரத்தை தொடங்கியவர்கள் போர்த்துக்கேயர்கள். பின்னர் இந்தியா முழுவதையும் பிரித்தானியர் கைப்பற்றிக் கொண்டதோடு அடிமை வியாபாரத்திற்குப் பதிலாக ஒப்பந்தக் கூலி முறை கொண்டுவரப்பட்டது. உலகில் அடிமை வியாபாரத்திற்கு எதிராக எழுந்த ஒருமித்த கோசமே சட்டரீதியான மாற்றங்களை ஏற்படுத்தியது. பிரித்தானியாவில் கொத்தடிமை ஒழிப்பு இயக்கங்களின் நெருக்கடி காரணமாக 1807 ஆம் ஆண்டு பிரித்தானிய பாராளுமன்றம் கொத்தடிமை வர்த்தக சட்டத்திற்கு முற்றுப்புள்ளி வைத்தது. பின்னர் 1833 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட கொத்தடிமை ஒழிப்புச் சட்டத்தின் மூலம் எல்லா காலனித்துவ நாடுகளிலும் கொத்தடிமை முறை முடிவுக்கு கொண்டுவரப்பட்டது.

ஆனாலும், அடிமை வியாபாரத்தை "ஒப்பந்தக் கூலி



1. Scene at Calcutta docks, about 1870.
(Photograph: India Office Library and Record Office, London)



8. Coming ashore. Port Natal.
(Photograph: Local History Museum)



9. Landing. Port Natal.

முறை" என்ற வடிவில் வெள்ளையர்கள் தொடர்ந்து முன்னெடுத்து வந்தனர். 17,18 ஆம் நூற்றாண்டுகளில் இந்தியாவை கொடும் பஞ்சம் காவுவாங்கிக் கொண்டிருந்த சமயம் அடித்தட்டு மக்கள் பலருக்கும் இந்தியாவை விட்டு வெளியேறும் நிலை ஏற்பட்டது. அந்த தருணத்தை வெள்ளையர்கள் மிக கச்சிதமாக பயன்படுத்திக் கொண்டனர். பாவப்பட்ட மக்களை தங்களது பொறியில் சிக்கவைத்தனர்.

இன முரண்பாடுகள் நிலவிய ஆபிரிக்காவில், அடிமைகளை சக ஆபிரிக்கர்களே பிடித்துக் கொடுத்தனர். அதனால் அவர்களும் இலாபமீட்டினர். அவ்வாறு அன்று பல இனங்களை பிடித்து விற்ற பல இனங்கள் இன்றும் ஆபிரிக்க நாடுகளின் ஆளும் வர்க்கங்களாக உள்ளன. உதாரணத்திற்கு கானாவை சேர்ந்த "அஷாந்தி" அரச பரம்பரை. இவர்கள் தமது முன்னூறு ஆண்டுகால பாரம்பரியத்தை பேணுவதற்காக இன்று வரை ஒல்லாந்து அரச குடும்பத்துடன் நட்புறவை பேணி வருகின்றனர். அதுப்போலவே, இந்திய தேசத்திலும் பிரித்தானியர்களின் இந்திய விசுவாசிகள் சக இந்தியர்களையே கொத்தடிமைகளாகவும் ஒப்பந்தக்கூலிகளாகவும் வெள்ளையரிடம் பிடித்துக் கொடுத்தனர். அதன்மூலம் அவர்கள் தங்களது சொத்துக்களைப் பெருக்கிக் கொண்டனர். தம்மிடம் சிக்குண்ட மக்களை வெள்ளையரின் காலனித்தேசத்திற்கு கொண்டுச் செல்வதற்கும், அந்தக் காலனித் தேசங்களில் இவர்களிடம் வேலைவாங்குவதற்குமான தலைமைப் பொறுப்பையும் இந்தக் கும்பல் பெற்றிருந்தன. அதன்படி, பரந்து விரிந்த இவ்வுலகின் பல பகுதிகளுக்கும் இந்திய அடிமைகளும் ஒப்பந்தக் கூலிகளும் கொண்டு செல்லப்பட்டனர். அம்மக்களில் ஒரு பிரிவினர் ஐரோப்பியரின் அட்டூழியத்தினால் இருண்ட கண்டமாக மாறிப்போயிருந்த ஆபிரிக்காவுக்கும் அழைத்து வரப்பட்டனர். அப்படி வந்தவர்கள் மொரிசியஸ், ரியூனியன், உகாண்டா, மொசாம்பிக், தென்னாபிரிக்கா போன்ற நாடுகளில் வெள்ளையனின் கரும்புத் தோட்டங்களிலும், சுரங்கங்களிலும், ரயில்வே துறையிலும் சிறைவைக்கப்பட்டனர். இவ்வாறு சிறைபட்ட தென்னாபிரிக்காவிற்கு இடம்பெயர்க்கப்பட்ட இந்தியர்களின் கதையை

> **1860 முதல் 1911 வரையான காலப்பகுதியில் 1,52,184 இந்தியர்கள் நெட்டாலுக்கு வந்துள்ளனர். அதாவது, 1860 – 1866களில் கொல்கத்தாவில் இருந்தும் 1874 – 1911களில் மெட்ராஸில் இருந்தும் ஒப்பந்தக் கூலிகள் வரவழைக்கப்பட்டனர். 1890 இல் ஏறக்குறைய 8,500 பேரும், 1895 இல் 14,000 பேரும், 1899 இல் 15,500 பேரும், 1904 இல் 24,000 பேரும் வந்துள்ளனர். 1904 இல் நெட்டாலில் இந்தியர்களின் எண்ணிக்கை வெள்ளையர்களின் எண்ணிக்கையை விட அதிகமாகவிருந்தது. அதற்கடுத்து 1908 இல் 26,000 பேரும், 1911 இல் 18,000 பேரும் வந்திருக்கிறன்றனர். இவ்வாறு தென்னாபிரிக்காவிற்கு கொண்டுவரப்பட்ட இந்தியர்களில் பெரும்பாலானவர்கள் தமிழர்கள் ஆவர்.**

பற்றியே பார்க்கப் போகிறோம்.

முதன்முதலாக 1654 ஆம் ஆண்டு ஒல்லாந்து கிழக்கிந்திய கம்பனி இந்திய மக்களை அடிமைகளாக தென்னாபிரிக்காவின் நன்னம்பிக்கைமுனை பகுதிக்கு கொண்டுவந்தது. இவ்வாறு கொண்டு வரப்பட்டவர்கள் இந்தியாவில் முஸ்லிம் ஆட்சிப்பரப்பில் வாழ்ந்தவர்களாவர். 17 மற்றும் 18 ஆம் நூற்றாண்டுகளில் கேப் பிரதேசத்தில் இருந்த அடிமைகளில் 50 சதவீதத்திற்கும் அதிகமானோர் வங்காளத்தைச் சேர்ந்தவர்களும் தென்னிந்தியர்களுமே ஆவர்.

1795 ஆம் ஆண்டு நன்னம்பிக்கை முனைப் பகுதியை பிரித்தானியா கைப்பற்றிக்கொண்டது. அதற்கான பிரதான காரணம் பிரான்ஸின் கட்டுப்பாட்டில் இப்பகுதி விழுவதை தடுப்பதற்காகும். அவுஸ்திரேலியா மற்றும் இந்தியாவில் தமது நிலைகளை பாதுகாத்துக்கொள்ளவும், வணிகர்களின் நீண்ட கடற்பயணத்திற்கான இடைப்பட்ட துறைமாகவும் கேப் டவுனை பயன்படுத்த பிரித்தானியா முடிவெடுத்தது. 1803 ஆம் ஆண்டு ஒல்லாந்தரிடம் கேப் டவுனை பிரித்தானியா திரும்பக் கொடுத்தது. ஆனால், வெகுவிரைவிலேயே ஒல்லாந்து கிழக்கிந்திய கம்பனி வங்குரோத்து அடைந்தமையால் 1806 ஆம் ஆண்டில் பிரித்தானியா கேப் காலனியை இணைத்துக்கொண்டது.

தென்னாபிரிக்கா பிரித்தானியாவின் காலனியாக மாறிய பின்பு அதிகளவில் இந்தியர்கள் கொண்டுவரப்பட்டனர். ஒப்பந்தக் கூலி முறை மூலம் இவர்கள் பெரும்பாலும் தென்னாபிரிக்க கரும்புத் தோட்டங்களுக்கே கொண்டுவரப்பட்டனர். அதிலும் குறிப்பாக தற்போதும் தென்னாபிரிக்காவில் இந்தியர்கள் செறிந்து வாழும் நெட்டால் என்ற பிரதேசத்திற்கே இவர்கள் அழைத்துவரப்பட்டனர். 1860 முதல் 1911 வரையான காலப்பகுதியில் 1,52,184 இந்தியர்கள் நெட்டாலுக்கு வந்துள்ளனர். அதாவது, 1860 – 1866களில் கொல்கத்தாவில் இருந்தும் 1874 – 1911களில் மெட்ராஸில் இருந்தும் ஒப்பந்தக் கூலிகள் வரவழைக்கப்பட்டனர். 1890 இல் ஏறக்குறைய 8,500 பேரும், 1895 இல் 14,000 பேரும், 1899 இல் 15,500 பேரும், 1904 இல் 24,000 பேரும் வந்துள்ளனர். 1904 இல் நெட்டாலில் இந்தியர்களின் எண்ணிக்கை வெள்ளையர்களின் எண்ணிக்கையை விட அதிகமாகவிருந்தது. அதற்கடுத்து 1908 இல் 26,000 பேரும், 1911 இல் 18,000 பேரும் வந்திருக்கிறன்றனர். இவ்வாறு தென்னாபிரிக்காவிற்கு கொண்டுவரப்பட்ட இந்தியர்களில் பெரும்பாலானவர்கள் தமிழர்கள் ஆவர். ஐரோப்பியர் இனிப்புச் சுவைக்காக தேனையும் அத்திப்பழத்தையுமே ஆரம்பத்தில் பயன்படுத்தியுள்ளனர். பின்னர் பீட்ரூட் கிழங்கில் இருந்து சீனி தயாரித்துள்ளனர். ஐரோப்பியர்களுக்கு அதிகமாக சீனித் தேவை இருப்பதை தெரிந்துகொண்ட பிரித்தானியர் சீனி உற்பத்தியை ஆரம்பிப்பதற்கு தளைப்பட்டனர். அதனால், வெள்ளையர்கள் தென்னாபிரிக்காவிலும் இப்பயிர்ச் செய்கையை முன்னெடுக்க திட்டமீட்டினர். தவிர, சீனியை விரைவாக உற்பத்தி செய்து அதை கப்பல்களில் சீக்கிரம் எடுத்துச் செல்ல ஏதுவாக நிறைய துறைமுகங்கள் தென்னாபிரிக்காவில் இருந்ததும் காரணமாகும் மற்றும் கரும்பு உற்பத்தி செய்வதற்கு ஏற்ற மண் வளம் அங்கிருக்கிறது. ஆக, தமது கரும்புத் தோட்டங்களை வளப்படுத்துவதற்கே வெள்ளையர்கள் இந்தியர்களை கொண்டுவந்தனர். இந்தியா மற்றும் ஆசிய நாடுகளில் மட்டுமே கரும்பு சாகுபடி இருந்தமை குறிப்பிடதக்கது.

இந்தியர்களின் கலாசாரத்தில் கரும்பு தவிர்க்க முடியாதவொன்றாகவிருக்கிறது. 2000 வருடங்களுக்கு முன்பே இந்தியாவில் கரும்பில் இருந்து பெறப்படும் கருப்பட்டி, சர்க்கரை, கரும்புச் சாறு, மதுபான உற்பத்தி

வளர்ச்சிக் கண்டிருந்தது. 2 ஆம் நூற்றாண்டில் தரைவழி, கடல்வழி ஏற்றுமதியும் நடைபெற்றுள்ளது. பெரும்பாலும் விவசாயிகளாகவிருந்த இந்தியர்களும் கரும்பு உற்பத்தியில் தேர்ச்சிப் பெற்றவர்களாகவிருந்தனர். அதனால் இந்தியர்களை வெள்ளையர்கள் கரும்புத் தோட்டங்களுக்கு இடம்பெயர்த்து கொண்டுவந்தனர். ஆயிரக்கணக்கானவர்கள் பாதுகாப்பே இல்லாமல் கூட்டிவரப்பட்டனர்.

இடங்களாகவிருந்தன.

தென்னாபிரிக்காவிற்கு வந்த இந்தியர்களில் மூன்றில் இரண்டு பேர் தமிழர்களும், தெலுங்கர்களும் ஆவர். ஆற்காடு, செங்கல்பட்டு, சித்தூர், சென்னை, வேலூர் மாவட்டங்களிலிருந்து மிகுதியாக தமிழர்கள் வந்தார்கள். பிற மாவட்டங்களில் கோயமுத்தூர், காஞ்சிபுரம், கடலூர், மதுரை, மதுராந்தகம், மைசூர், நெல்லூர், போரூர், சேலம், சைதாப்பேட்டை, தஞ்சாவூர்,



1851 ஒக்டோபர் 17 ஆம் திகதி டர்பன் அரசுப் பள்ளி மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் நெட்டால் காலனியவாதிகள் ஒப்பந்தத் தொழிலாளர்களை கோரியுள்ளனர். தென்னாபிரிக்காவில் ஒப்பந்தக் கூலி முறையை அறிமுகப்படுத்துவதற்கான பிரேரணை அன்று நிறைவேற்றப்பட்டது.

ஒப்பந்தக் கூலி முறைப்படி அழைத்துவரப்பட்ட 152,184 இந்தியர்கள் மொத்தமாக 384 கப்பல் பயணங்களை மேற்கொண்டுள்ளனர். முதல் கப்பலான ட்ரூரோ 1860 நவம்பர் 16 ஆம் திகதி வந்துசேர்ந்தது. கடைசி கப்பலான உம்லாசி 1911 ஜூலை 11 ஆம் திகதி வந்துள்ளது. கொல்கத்தா மற்றும் மெட்ராஸ் துறைமுகங்கள் ஒப்பந்தக் கூலிகளை அழைத்துவரும்

திருச்சிராபள்ளி, திருவள்ளூர் ஆகிய பகுதிகளிலிருந்தும் தமிழர்கள் வந்தார்கள். இவர்கள் எல்லோருமே கரும்புத் தோட்டங்களில் பிளிந்தெடுக்கப்பட்டனர். வெள்ளையரின் கொடும் சித்திரவதைகளுக்கு ஆளாயினர். தொடக்கத்தில் ஆண்களே தென்னாபிரிக்காவிற்கு அழைத்துவரப்பட்டனர். இவர்கள் காலை முதல் மாலை வரை மாடுகளாய் உழைத்தனர். பின்னர் குடியிருப்புகளுக்குத் திரும்பியவுடன் இரவு உணவையும் அவர்களே சமைத்து உண்டனர். அதனால், போதியளவு உணவை உட்கொள்ளாததால் உடலில் வலுவிழந்து போயினர். அதனால், அந்த ஆண்களின் மனைவி, பிள்ளைகளையும் வெள்ளையர்கள் தென்னா பிரிக்காவிற்கு அழைத்து வந்தனர். ஆனால்,



The Natal Mercury.

THURSDAY, NOVEMBER 22, 1860.

THE COOLIES HERE.

The past week will long be memorable amongst Anglo-Natalians. At last, after the discussion of years and the extinction of hopes innumerable, the planters' pet project has been realised. There has been so much said in certain quarters against the immigration of Coolies, as a piece of




*Roster of arrivals/indentured labour in S. Africa who were identified by their numbers only*
*(Photo Courtesy: Book titled "From Cane Fields to Freedom")*

இந்தியாவில் எப்படி பெண்கள் ஒடுக்கப்பட்டார்களோ, குறிப்பாக இந்திய கலாச்சாரத்தில் குடும்பம் என்ற கட்டமைப்பில் எவ்வாறு சுரண்டப்பட்டார்களோ அதேநிலையே இங்கும் தொடர்ந்தது. பகலில் பெண்களும் கரும்புத் தோட்டங்களில் வேலை செய்தனர். அதிகாலையிலும், இரவிலும் உணவையும் தயாரித்தனர். தமது பிள்ளைகளை பராமரிக்கும் முழுப்பொறுப்பும் பெண்களுடையதாய் இருந்தது. தவிர, வெள்ளையர்களாலும் பெண்கள் துன்புறுத்தப்பட்டனர். மானபங்கப்படுத்தப்பட்டனர்.

1893 இல் வெள்ளையர்கள் புதிய சட்டத்தை இயற்றினர். இச்சட்டம், தொழில் முறைக் கட்டுப்பாடு ஒப்பந்தம் முடிந்த பின்பும் தொடர்ந்து நிலையாகத் தென்னாபிரிக்காவிலே வாழும் இந்தியர்கள் ஆண்டிற்கு 3 பிரிட்டிஷ் பவுண்டு வரிசெலுத்த வேண்டும் என்றது. 1984 இல் இயற்றப்பட்ட சட்டம் இந்திய வம்சாவளி மக்களுக்கு வாக்களிக்கும் உரிமையை மறுத்தது. அந்நேரம் தென்னாபிரிக்காவில் வழக்கறிஞராகவிருந்த மகாத்மா காந்தியும் இச்சட்டத்திற்கு எதிராக போராடியுள்ளதாக பதிவாகியுள்ளது.

ஒப்பந்தக் கூலிகளை ஒடுக்கும் சட்டங்கள் தொடர்ந்து வெள்ளையர்களால் இயற்றப்பட்டே வந்தன. ஒரு மாநிலத்தில் இருந்து மற்றொரு மாநிலத்திற்கு இந்தியர்கள் போகக் கூடாது என்ற சட்டம் 1913 இல் கொண்டுவரப்பட்டது. "கிறிஸ்தவ முறைப்படிதான் திருமணம் செய்துகொள்ள முடியும். தவிர, இந்தியத் திருமணமும் செல்லுபடியாகாது." என்ற சட்டமும் கொண்டுவரப்பட்டது. இந்தியத் திருமணத்தில் பிறந்த பிள்ளைகள் தகாதமுறையில் பிறந்தவர்களாக கருதப்பட்டனர். இதனை எதிர்த்து தில்லையாடி வள்ளியம்மை அவர்கள் ட்ரான்ஸ்வெல்லில் இருந்து நெட்டாலுக்கு நடைப்பயணத்தை மேற்கொண்டார். ஒரு மாநிலத்தில் இருந்து இன்னொரு மாநிலத்திற்குச் செல்ல நுழைவுச் சீட்டு இருக்க வேண்டும். தில்லையாடி வள்ளியம்மை வெள்ளையர்களுக்கு எதிரான போராட்டத்தில் ஈடுபட்டார் என்றும் நுழைவுச்சீட்டு இல்லாமல் இன்னொரு மாநிலத்துக்குள் புகுந்தார் என்றும் குற்றஞ்சாட்டப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். அப்போது அவருக்கு வயது பதினாறு. 1913 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் சிறையில் அடைக்கப்பட்டார். அவர் உடல் நலக்குறைவால்

> **ஒட்டுமொத்த இந்தியர்களும் தம்மைச் சுரண்டி வாழ்கிறார்கள் என்று கறுப்பின மக்கள் எண்ண ஆரம்பித்துள்ளனர். குப்தா பிரதர்ஸ் எனும் இந்திய வம்சாவளியான கள்ளக் கோஷ்டிகள்தான் மக்களது உழைப்பைச் சுரண்டிப் பிழைப்பவர்களாக இருக்கிறார்கள். இவர்கள் ஊழல்பேர்வழி ஆட்சியாளர் ஜேக்கப் ஜுமாவுடன் டீல் வைத்திருந்ததும் கவனிக்கதக்கது. அதனால், இவர்களுக்கு எதிரான எதிர்ப்பு ஒட்டுமொத்த இந்தியர்களுக்கு எதிரான எதிர்ப்பாக மாறியிருக்கிறது. இந்தியர்களுக்கு எதிரான வன்முறைகளும் இடம்பெறுகின்றன.**

விடுதலை செய்யப்பட்டபோதும் போராட்டக் குழுவினரின் கோரிக்கை நிறைவேறாததனால் வெளியே வர மறுத்தார். பின்னர் இந்தியர்களுக்கு விதிக்கப்பட்ட தலைவரி நீக்கப்பட்ட பின்பே தம் விடுதலையை ஏற்று வெளியே வந்தார் வள்ளியம்மை. "பலன் ஏதும் கருதாமல் தென்னாப்பிரிக்காவில் தியாகம் செய்து வெற்றி கண்ட தில்லையாடி வள்ளியம்மை அவர்கள் தாம் எனக்கு முதன் முதலில் விடுதலை உணர்வை ஊட்டிய பெருமைக்குரியவர்" என அவரை காந்தி பாராட்டியுள்ளார்.

1900 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் ஒப்பந்த தொழிலாளிகளின் சந்ததிகள் நகரப்புறத்திலுள்ள அரசு சிவில் பணிகளிலும், தொழிற்சாலைகளிலும் பணிபுரியத் தொடங்கினர். நெட்டாலில் இந்தியர்கள் மிக மோசமாக நடத்தப்படுவதால் ஒப்பந்தக் கூலிகள் இந்தியாவில் இருந்து அனுப்புவது தடை செய்யப்பட்டது. ஒப்பந்தக் கூலி முறைக்கு எதிராக எழுந்த எதிர்ப்பு இதற்கான பிரதான காரணமாகும்.

1944 ஆம் ஆண்டு டிரான்ஸ்வேல், நெட்டால் பகுதிகளில் இந்தியர்களுக்கு என்று தனியிடம் ஒதுக்கப்பட்டது. இந்த இடங்களில் மட்டும்தான் இந்தியர்கள் வீடுகளையும் நிலங்களையும் வாங்கலாம். தேர்தலில் கருப்பர்களும், வெள்ளையர்களும் இந்தியர்களைப் பகடைக்காயாக்கி விளையாடினர். பிற்காலத்தில் நகராட்சி அளவிலான உரிமைகள் கொடுக்கப்பட்டன. தென்னாப்பிரிக்க கரும்புத் தோட்டங்களில் ஒப்பந்தக் கூலிகளாக வேலை செய்ய சென்ற இந்தியர் வெள்ளையர் அடக்கு முறைகளையும் மீறி பின்னர் சமூக, பொருளாதார ரீதியில் வளரத் தொடங்கினர். 19 ஆம் நூற்றாண்டில் ஒப்பந்தக் கூலிகளாகவல்லாது பயணிகளாகவும் இந்தியர்கள் தென்னாபிரிக்காவுக்குச் சென்றனர். தங்களது சொந்தச் செலவில் வந்த அவர்கள் வணிகர்களாக மாறினர். பின்னர், காலப்போக்கில் இவர்கள் பலமான பொருளாதார பின்புலம் கொண்ட அமைப்பாகவும் உருவெடுத்தனர்.

ஆரம்பத்தில் ஒப்பந்தக் கூலிகளாக வந்தவர்களில் பலர் கல்வியறிவு அற்றவர்களாக இருந்தனர். வந்தவர்களுக்கும் அடிமை வாழ்க்கைச் சூழலில் மொழியையும் பண்பாட்டையும் பேண வசதி இருக்கவில்லை. கட்டாயத் தொழிலில் இருந்து விடுதலை பெற்ற பின்னர் ஆபிரிக்கத் தமிழர்கள் தமிழ் மொழி மீது சற்றுக் கூடிய அக்கறை காட்டினர். அச்சமயம் இந்தியாவில் இருந்து வந்திருந்த தமிழ்ப் பயணிகள் இதில் உதவினார்கள். 1915 ஆண்டு அளவில் பல்வேறு தனியார் தமிழ்ப் பள்ளிகள் நெட்டால், டிரான்ஸ்வால், கேப் ஆகிய இடங்களில்



தோன்றின. 1950-களில் ஆபிரிக்க வெள்ளை இனவாத அரசால் அமுல்படுத்தப்பட்ட Group Areas Act தமிழர்களின் மொழிப் பண்பாட்டு பேணலுக்கு கெடுதலாக அமைந்தது. 1985 ஆம் ஆண்டு தென் ஆபிரிக்காவில் இந்திய மொழிகள் கற்பதற்கான அதிகார பூர்வ ஆதரவு கிடைத்தது. இது இந்தியர்கள் தென்னாபிரிக்கா வந்து 150 ஆண்டுகளுக்குப் பின்னர் ஆகும். எனினும் தமிழ் மொழியை கற்காத, பேசாத ஒரு தமிழ்த் தலைமுறை உருவாகியிருந்தது. இதனால் இந்த தமிழ்ப் பள்ளிகளுக்கு போதிய மாணவர்கள் சேரவில்லை. இதனால் குவாசூலு- நெட்டால் பல்கலைக்கழகத்தில் இருந்த தமிழ்த் துறையும் பூட்டப்பட்டது. இருந்தாலும் பாடசாலைகளில் இரண்டாம் மொழியாக இந்திய மொழிகளை கற்க முடியும். அங்கு இந்தி மொழிக்கு வழங்கப்பட்டுள்ள சலுகைகள் தமிழ் மொழிக்கு வழங்கப்படவில்லை.

இந்தியக் கலாச்சாரம் வீட்டில் தெரிந்தாலும் தத்தம் தாய்மொழிகளை மறந்துவிட்டுத்தான் அடுத்தடுத்த தலைமுறை வளர்ந்திருக்கிறது. ஆனால், கோவில்களில் எல்லோரும் சேர்ந்தே தேவாரம், திருவாசகத்தைப் பாடுவதால் அவை எல்லோருக்கும் மனப்பாட மாகிவிட்டுள்ளன.

வெள்ளையரின் கீழ் கூலி அடிமைகளாகவிருந்தபோது ஞாயிற்றுக்கிழமை மட்டுமே ஆபிரிக்கத் தமிழர்களுக்கு விடுமுறை கிடைத்துள்ளது. ஏனென்றால், வெள்ளையர்கள் ஞாயிற்றுக்கிழமைகளில் தேவாலயத்திற்கு செல்வர். அதனால், தமது எல்லா பண்டிகைகளையும் கொண்டாட்டங்களையும் அவர்கள் ஞாயிற்றுக் கிழமைகளிலேயே நடத்துகின்றனர். ஈஸ்டர் தினங்களில் இவர்கள் திருவிழாக்களை நடத்தியுள்ளனர். அது இன்றும் அவர்களது பண்பாடாக மாறிவிட்டுள்ளது.

ஆடி மாதம் கூழ் ஊற்றி மாரியம்மன் வழிபாட்டில் ஈடுபடுகின்றனர். அங்கு அரிசி கிடைக்காததால் சோளத்தில் கூழ் தயாரிக்கின்றனர். மாரியம்மன் கோவில், முருகன் கோவில் என்பன தென்னாபிரிக்காவில் உண்டு. பலிகொடுக்கும் கலாச்சாரமும் அவர்களிடம் இருக்கிறது. அதாவது, மனிதர்களிடம் இருக்கும் கோபம், பொறாமை உள்ளிட்ட கெட்ட குணங்கள் அழிய வேண்டும் என்று வேண்டி அவர்கள் சேவலை பலியிடுகின்றனர். இப்பொழுது பலிகொடுக்கும் பூசை குறைந்துவருகிறது.

தமிழர்களின் முதல் கடவுள் முருகன் என்று சொல்கின்றனர். முருகனுக்காக தைப்பூச காவடி,



சித்திரைக் காவடி எடுக்கன்றனர். கொடியேற்றியவுடன் கோவிலுக்கு வந்துதான் காவடி எடுக்கின்றனர். ஞாயிற்றுக்கிமை “Sunday Public Kaavadi” என்று கொண்டாடுகின்றனர். அங்கு சிவராத்திரி விசேடமாக இருக்கிறது. அவர்களது உணவு பழக்கவழக்கங்களில் பருப்பு வடை பிரதானமானது. அவர்கள் வடையை “வெடெ” என்றே சொல்கின்றனர். குலுகுலா, பர்வி, எள்ளுருண்டை போன்றவற்றையும் தயாரிக்கின்றனர். தேங்காப்பூவைத் தூவி ஸ்வீட் இட்லி, ஸ்வீட் தோசையை செய்கின்றார்கள். சட்னி செய்வதில்லையாம். வட இந்தியர்கள் தமிழர்களை போரிஜ் என்று கேலியாக அழைக்கின்றனர். போரிஜ் என்றால் கஞ்சிக் குடிப்பவர்கள் என்று அர்த்தம். தமிழர்கள் வட இந்தியர்களை ரொட்டிக்கார்ர்கள் என்று அழைக்கின்றனர். தென்னிந்தியாவில் இருந்துவந்த மலையாளிகள் எல்லோருமே தற்போது தம்மை தமிழர்களாகவே அடையாளப்படுத்துகின்றனர்.




தென்னாபிரிக்க நிலத்தில் இந்தியக் கலாச்சாரம் வேறொரு வடிவத்துடன் அழகுபெற்றிருக்கிறது. இளம் தலைமுறையினர் தமது வரலாற்றைக் கற்றுக்கொள்வதில் அத்தனை ஆர்வம் காட்டுவதில்லை என்றும் பெரியவர்கள் தெரிவிக்கின்றனர்.

தென்னாப்பிரிக்காவில் 5 கோடி 37 இலட்சம் மக்கள் வாழ்கின்றனர். இந்தியர்களின் எண்ணிக்கை 1,286,930. இது, அந்த நாட்டு மக்கள் தொகையில் சுமார் 2.5% ஆகும். கறுப்பினத்தவர்கள் 80 சதவீதம். தமிழ், தெலுங்கு, ஹிந்தி மற்றும் குஜராத்தி ஆகிய மொழிகளைப் பேசும் இந்தியர்களை மொழி அடிப்படையில் நான்கு வகையாகப் பிரிக்கலாம். தென்னாப்பிரிக்க இந்தியர்களில் இந்து மதத்தைப் பின்பற்றுபவர்களின் சதவிகிதம் 41.3%, இஸ்லாம் 24.4%, கிறிஸ்தவம் 24.6% ஆகும்.

ஆங்கிலம் மற்றும் 10 ஆபிரிக்க மொழிகள் ஆட்சி மொழிகளாக உள்ளன. நெட்டால் என்னும் பகுதியின் பள்ளிகளில் தமிழ் விருப்ப மொழியாக கற்பிக்கப்படுகிறது. கல்வியறிவு 94 சதவீதம். ஆண்கள் 95 சதவீதம், பெண்கள் 93 சதவீதம் ஆகும்.

தென்னாபிரிக்காவில் இந்தியர்களின் வளர்ச்சி பெரும்பான்மை கறுப்பின மக்கள் மத்தியில் தவறான அபிப்பிராயங்களைத் தோற்றுவித்துள்ளதாக ஆபிரிக்க இந்தியர்கள் தெரிவிக்கின்றனர். ஒட்டுமொத்த இந்தியர்களும் தம்மைச் சுரண்டி வாழ்கிறார்கள் என்று கறுப்பின மக்கள் எண்ண ஆரம்பித்துள்ளனர். குப்தா பிரதர்ஸ் எனும் இந்திய வம்சாவளியான கள்ளக் கோஷ்டிகள் அங்குள்ள மக்களின் உழைப்பைச் சுரண்டிப் பிழைப்பவர்களாக இருக்கிறார்கள். இவர்கள் ஊழல்பேர்வழி ஆட்சியாளர் ஜேக்கப் ஜூமாவுடன் டீல் வைத்திருந்ததும் கவனிக்கதக்கது. அதனால், இவர்களுக்கு எதிரான எதிர்ப்பு ஒட்டுமொத்த இந்தியர்களுக்கு எதிரான எதிர்ப்பாக மாறியிருக்கிறது. இந்தியர்களுக்கு எதிரான வன்முறைகளும் இடம்பெருகின்றன. 2021 ஏற்பட்ட கலவரத்தில் நூறிற்கும் அதிகமான இந்திய வம்சாவளி மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். ஏறக்குறைய 150 கோடி ரூபாய் பெறுமதியான சொத்துக்கள் அழிக்கப்பட்டுள்ளன.

தேசவிடுதலைப் போராட்டத்தையும் நிறவாத்த்திற்கு எதிராகவும் போராடிய நெல்சன் மண்டேலா பிரித்தானிய அரசாங்கத்தால் சிறையில் அடைக்கப்பட்டு 1990 இல் விடுதலை செய்யப்பட்டார். முதன்முதலில் கறுப்பினத்தவர்கள் 1994 இல் வெள்ளையர்களுக்கு சரிசம்மாக வாக்களித்தார்கள். அதில் நெல்சன் மண்டேலா ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டார். தென்னமெரிக்கா ஒரு வானவில் தேசமாகும். அங்கு பல இனங்களையும், பல மதங்களையும், பல சுதேச இனங்களையும் சேர்ந்த மக்கள் வாழ்கின்றனர். அதனால், எல்லா மக்களையும் அமைதியுடனும் நல்லிணக்கத்துடனும் வாழுமாறு நெல்சன் மண்டேலா வலியுறுத்தினார். எமது பிரார்த்தனையும் அதுவே ஆகும்.

# மார்டின் லூதர் கிங்

ஆபிரஹாமின் வெறிச்சோடிய விழிகளின் கீழ்
அவன் ஒரு கனவைப் பிரகடனம் செய்தான்!
இருள் அரசோச்சிய இடத்தில்
ஒரு சூரியனைப் புதுப்பித்த கனவை
அவன் பிரகடனம் செய்தான்!

வெற்றுத் தசையில் மோதும்படி
வீசப்படும் குண்டாந்தடிக்கு மேலாக
துடிக்கும் நெஞ்சோடு
கழுகைவிட உயர எழுந்து
வட்டமிட்டு
அவன் ஒரு கனவைப் பிரகடனம் செய்தான்!

தொண்டைக் குழியில் புதையுண்ட
மனிதக் குரல் கொண்டு
கலட்டு வனாந்தரத்தில்
மண்ணும் மழை முகிலும் அணைந்து தழுவும்
வளமான பள்ளத்தாக்கொன்றை
அவன் சிருஷ்டித்தான்!

**ஆங்கில மூலம் :** Amin Kassam (Kenya)
**தமிழில் :** சோ. பத்மநாதன்

